
# செம்மண்

நிலம் 3 துகள் 104 வள்ளுவர் ஆண்டு 2052, 16 - 22 ஆடி 2022 வாரமலர் பக்கங்கள் 34

# 19 முழுமையாக மீண்டும் வரும்

## பதில் அரச தலைவர் ரணிலின் வாக்குறுதி இது



மக்களின் எழுச்சிப் போராட்டங்களைத் தொடர்ந்து அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச தனது பதவியிலிருந்து முறையாக விலகினார். அவரது பதவி விலகல் கடிதம் சிங்கப்பூர் தூதரகம் வழியாக சபாநாயகரிடம் கைளிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து பதில் அரச தலைவராக ரணில் விக்கிரமசிங்க வெள்ளிக்கிழமை தலைமை நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் அவர் பதவியேற்றுக்கொண்டார் என்று அரச தலைவர் செயலகம் தெரிவித்தது. பதவியேற்ற பின்னர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய முதல் உரையில், அரச பக்கம் 03





# மகிந்த, பசிலுக்கு தடை

முன்னாள் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச மற்றும் முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச ஆகிய இருவரும் நாட்டைவிட்டு எதிர்வரும் 28ஆம் நாள் வரை வெளியேற உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.
ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நேசனல் நிறுவனம் மற்றும் மூன்று தரப்புக்களிடமிருந்து இந்த இரு அரசியல்வாதிகளும் நாட்டைவிட்டுத் தப்பியோடுவதைத் தடுக்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்த வழக்குகள் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டன. இடைக்கால உத்தரவாக இருவருக்கும் பக்கம் 04

# டலசும் போட்டியில்

புதிய அரச தலைவருக்கான வேட்பு மனுக்கள் அடுத்த வாரம் கோரப்படும் போது தானும் அதில் போட்டியிடப் போகிறார் என்று முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெருமா தெரிவித்தார்.
கோட்டாபய ராஜபக்ச பதவி விலகியதைத் தொடர்ந்து பதில் அரச தலைவராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுள்ளார்.



அரசமைப்பின்படி ஒரு வாரத்திற்குள் புதிய அரச தலைவர் நாடாளுமன்றத்தால் தெரிவு செய்யப்பட வேண்டும். அதற்கான வாக்கெடுப்பு ஆடி 20ஆம் நாள் நடக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
புதிய பக்கம் 03

# கூட்டமைப்பின் ஆதரவு யாருக்கு? வேட்பு மனுவின் பின்பே முடிவாம்

எதிர்வரும் 20ஆம் நாள் நடக்கவிருக்கும் அரச தலைவருக்கான தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்ட பின்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்யும் பக்கம் 02

# புதனன்று பொதுமக்களைச் சுட மறுத்த படை அதிகாரிகளுக்கு தண்டனையா?

ஆடி 13, புதள்கிழமையன்று தலைமை அமைச்சர் அலுவலகத்தினுள் புகுந்த போராட்டக்காரர்களைச் சுட மறுத்த இலங்கைத் தரைப் படை அதிகாரிகள் பழிவாங்கப்படுகிறார்கள் என்கிற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.
பதில் அரச தலைவராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுக்கொண்ட சில மணி நேரத்தில், தலைமை அமைச்சர் அலுவலகம் அமைந்துள்ள பகுதியின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்த தரைப் படை பிரிகேடியர் ஒருவர் மற்றும் லெப்டினன்ட் கேணல் ஒருவர் அவர்களது பொறுப்புக்களில் இருந்து விடுவிக்கப்பட்டு தரைப் படைத் தலைமையகத்தில் இணைக்கப் பக்கம் 02

செம்மண்
வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**

# ரணில் பதவி விலகி புதியவர் வரவேண்டும்

எப்போதும்போலவே வாக்குறுதியளித்தமைக்கு மாறாக ஆடி 14ஆம் நாள் தனது பதவி விலகல் கடிதத்தை வழங்கியிருக்கிறார் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச. அதைத் தொடர்ந்து பதில் அரச தலைவராக ரணில் விக்கிரமசிங்க வெள்ளிக்கிழமை பதவியேற்றுக் கொண்டார். இலங்கை அரசமைப்பின்படி இத்தகைய சூழலில் 7 நாள்களுக்குள் நாடாளுமன்றம் புதிய அரச தலைவரைத் தெரிவு செய்யவேண்டும். அதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. வரும் 20ஆம் நாள் புதிய அரச தலைவருக்கான தேர்தல் நாடாளுமன்றத்தில் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆடி 9ஆம் நாள் போராட்டத்தையடுத்து கோட்டாபய மற்றும் ரணில் விக்கிரமசிங்க இருவருமே பதவி விலகவேண்டும் என்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் வலியுறுத்தினர். அதற்கு இருவருமே சம்மதமும் தெரிவித்திருந்தனர். புதிய அனைத்துக் கட்சி ஆட்சி ஒன்று ஏற்படுவதற்கு வழிவிடும் வகையில் தனது பதவியை துறப்பார் என்று ரணிலும் உறுதிமொழி தெரிவித்திருந்தார்.

இருப்பினும் ராஜபக்ச பதவி விலகியதைத் தொடர்ந்து அவரது இடத்தைக் கைப்பற்றுவதில் இப்போது ரணில் விக்கிரமசிங்க முனைப்புடன் இருக்கிறார். அதேபோன்று ''கூட்டுக் களவாணிகள்'' என்று சொல்லப்படக்கூடிய ரணிலும் ராஜபக்சக்களின் மொட்டுக் கட்சியான பொது ஜன பெரமுனவும் சேர்ந்து ரணிலை அரச தலைவர் பதவியில் இருத்துவதற்கான முயற்சிகள் முனைப்புப் பெற்றுள்ளன.

அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ள அரச தலைவருக்கான தேர்தலில் தற்போதைய பதில் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்கப் போவதாக பொது ஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவாசம் வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது சுயவிருப்பின்படி அரச தலைவரைத் தெரிவு செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய காணொலி உரையில் பதில் அரச தலைவரான ரணில் வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

காலி முகத் திடலில் அமைதியாகப் போராட்டம் நடத்துபவர்களைத் தான் ஆதரிக்கும் அதேவேளை, போராட்டக்காரர்களுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையிலான வித்தியாசத்தை ஒவ்வொருவரும் புரிந்துகொள்ளவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதாவது அரச தலைவர் மாளிகைக்குள் செல்வதற்கும் நடந்த போராட்டத்தின்போது ஆயுதப் படையினர் இருவரின் ரி-56 துப்பாக்கிகளையும் அவற்றுக்கான தோட்டாக்களையும் பறித்துச் சென்றவர்களும் படையினர் மற்றும் காவல்துறையினரைக் காயப்படுத்தியவர்களும் கிளர்ச்சியாளர்கள் என்று முத்திரை குத்துகிறார் ரணில்.

அத்தகைய கிளர்ச்சியாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கட்டுப்படுத்தப்பார்க்கிறார்கள் என்பதால் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி அவர்கள் சுயாதீனமாக வாக்களிக்க அனுமதிக்கப்படுவார்கள் என்கிறார் ரணில்.

ஆனால், அமைதியான போராட்டக்காரர்கள் மீது அளவுக்கதிகமான கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கியும் பயங்கரவாதத்தை வெளிப்படுத்திய அரச படையினர் குறித்து அவர் ஒரு சொல்கூட கண்டிக்கவில்லை.

இவற்றுக்கூடாக ரணில் வெளிப்படுத்த முனைவதெல்லாம், நாடாளுமன்றத்தில் பொது ஜன பெரமுனவின் ஆதரவுடன் தான் அரச தலைவராகும் தனது விருப்பத்தைத்தான். அவர் பதவியை விட்டு விலகத் தயாராக இல்லை. எதிர்த் தரப்பில் ஒருமித்த கருத்துமிக்க ஒருவரை தெரிந்தெடுக்க முடியாத நிலை இருப்பதை வைத்து வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்வதில் ரணில் கவனமாக இருக்கிறார்.

ஆனால், அவரை இந்த நாட்டு மக்களும் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் ஏற்கனவே நிராகரித்துவிட்டார்கள். ராஜபக்சக்களும் ரணிலும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்புடன் நடந்துகொள்வார்கள் என்பதை நாடு ஏற்கனவே அறிந்திருக்கிறது. அந்த வகையிலேயே ரணிலை அரச தலைவராக்க பொது ஜன பெரமுன ஆதரவுமளிக்கிறது. இத்தகைய கூட்டுக் களவாணிகளின் இருப்பைப் பாதுகாப்பதற்காக அப்பாவி மக்கள் இந்தப் போராட்டங்களை இவ்வளவு நீண்ட தூரம் நடத்தவில்லை என்பதை ரணில் புரிந்துகொள்ளவேண்டும். மக்களின் உணர்வுகளுக்கும் விருப்பங்களுக்கும் மதிப்பளித்து அவர் அரச தலைவர் பதவியிலிருந்தும் விலகி, புதியவருக்கு இடமளிக்கவேண்டும். அத்தகைய புதிய அரச தலைவர் நிச்சயம் ராஜபக்சக்களின் பொது ஜன பெரமுனவிலிருந்தும் வரக்கூடாது. கோட்டாபயவினுடைய தவறான ஆட்சியை ஆதரித்து, துதிபாடி இந்த நாட்டைக் கெட்டுச் சுவராக்கியதில் முன்னணியில் இருந்தவர்கள் அவர்கள். எனவே அவர்களில் எவருக்கும் நாட்டை நிர்வகிக்கும் தகுதி கிடையாது.

மற்றைய அரசியல் கட்சிகளின் தலைவர்களும் குண்டுச் சட்டிக்குள் குதிரையோடுபவர்களாகவே இருக்கிறவர்கள் என்கிற நிலையில் நேர்மையான, அனைத்து மக்களையும் சமமாக மதிக்கக்கூடிய, மதச் சார்பற்ற, நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்கக்கூடிய முயற்சிக்குப் பொருத்தமான தலைமையை வழங்கக்கூடியவர்களே புதிய அரச தலைவராகவும் தலைமை அமைச்சராகவும் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

அதற்கு வழிவிட்டு தான் அரச தலைவர் பதவிக்கு போட்டியிடப்போவதில்லை என்பதை பகிரங்கமாக அறிவித்து ரணில் ஒதுங்கவேண்டும். அதுவே நாட்டுக்கு அவர் செய்யும் மிகப் பெரிய நன்மையாக அமையும்.



## கூட்டமைப்பின்...

என்று அதன் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் கட்சி இதுவரையில் இறுதி ஆலோசனை எதனையும் நடத்தவில்லை என்று அவர் தெரிவித்தார்.

புதிய அரச தலைவரை நாடாளுமன்றம் ஆடி 20ஆம் நாள் தெரிந்தெடுக்கும் என்று நாடாளுமன்ற செயலாளர் நாயகம் வெள்ளிக்கிழமை அறிவித்தார்.

இது தொடர்பான நடவடிக்கைகளுக்காக நாடாளுமன்றம் இன்று சனிக்கிழமை கூடுகின்றது. அரச தலைவர் பதவியில் திடீர் வெற்றிடம் ஏற்படும் பட்சத்தில் அது தொடர்பான முடிவுகளை எடுக்க நாடாளுமன்ற மூன்று நாள்களுக்குள் கூடவேண்டும் என்கிறது அரசமைப்பு விதி.

அரசமைப்பின்படி வெற்றிடம் ஏற்பட்டு 7 நாள்களுக்குள் புதிய அரச தலைவர் தெரிவு செய்யப்படவேண்டும். அதனடிப்படையில் 19 ஆம் நாள் வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டு 20ஆம் நாள் வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று வெள்ளிக்கிழமை கூடிய கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் சபாநாயகர் மகிந்த யாப்ப அபேவர்த்தன தெரிவித்தார்.

மக்களாட்சித் தத்துவத்தின் கீழ் இந்த நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்வதற்கு அனைத்துக் கட்சிகளின் ஆதரவும் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

## புதனன்று...

பட்டுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்க தலைமை அமைச்சராக இருந்தபோது அவரது அலுவலகம் கொள்ளுப்பிட்டி பிளவர் வீதியில் அமைந்திருந்தது.

அவர் பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தி போராட்டக்காரர்கள் புதன்கிழமை அந்த அலுவலகத்தைச் சூழ்ந்தனர். அந்தச் சமயத்தில் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச மாலைதீவுகளுக்குத் தப்பியோடியிருந்தார். எனினும் ரணில் விக்கிரமசிங்கவை பதில் அரச தலைவராக நியமித்திருந்தார்.

ஒழுங்கை நிலைநாட்டத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி தலைமை அமைச்சராக இருந்து பதில் அரச தலைவராக நியமிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க அச்சயத்தில் படைத்துறை அதிகாரிகள் மற்றும் காவல்துறையினருக்கு உத்தரவிட்டிருந்தார். தேவைப்பட்டால் போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி அவர்களைக் கலைக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகின்றது.

அத்தகைய உத்தரவு இருந்தபோதும் தலைமை அமைச்சர் அலுவலகத்திற்குள் அத்துமீறி நுழைந்து அதனைக் கைப்பற்றிய போராட்டக்காரர்களை துப்பாக்கிச் சூடு நடத்தியாவது தடுத்து நிறுத்தத் தவறிய தரைப்படையின் 11 படையணியின் இரண்டாவது பிரிவுக் கட்டளைத் தளபதியான பிரிகேடியர் சோமவீர மற்றும் அவருக்கு உதவியாக இருந்த தரைப்படை சிங்க ரெஜிமென்டின் 12ஆவது உபபடையணிக் கட்டளைத் தளபதி லெப்டினன்ட் கேனல் பி.எச்.ஜீ.பி. குணவர்த்தனவும் அவர்களது கடமைகளில் இருந்தும் பொறுப்புக்களில் இருந்தும் உடனடியாக விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தத் தவறிய காரணத்தாலேயே அவர்களுக்கு இந்த தண்டனை வழங்கப்பட்டிருப்பதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்படுகின்றன.

இந்த விடயத்தில் தலையிட்டு பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த மறுத்ததற்காகவா அவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள் என்பதை அறிந்து வெளிப்படுத்துமாறு இளம் பத்திரிகையாளர்கள் அமைப்பு மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் வலியுறுத்தியுள்ளது.

## 19 முழுமையாக...

மைப்பின் 19ஆவது திருத்தத்தை முழுமையாக மீண்டும் கொண்டு வருவதற்குத் தான் நடவடிக்கை எடுப்பார் என்று தெரிவித்தார்.
முன்னாள் அரச தலைவர் கோட்டாபயவின் பதவி விலகல் கடிதம் 14ஆம் நாள் கையெழுத்திடப்பட்டிருந்தது எனினும் வெள்ளிக்கிழமை 15ஆம் நாளே அது சபாநாயகரால் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தப்பட்டது.
கோட்டாபய தலைமையிலான பொதுஜன பெரமுன ஆட்சிக்கு எதிராக மக்கள் பெரும் போராட்டங்களை நடத்தியபோதும் பதவி விலகமாட்டேன் என்று அறிவித்து வந்தவர் கோட்டாபய. ஆனால் ஆடி 9ஆம் நாள் மக்கள் எழுச்சி அரச தலைவர் மாளிகைக்குள் புகுந்தபோது அவர் அங்கிருந்து தப்பியோடியிருந்தார்.
அதைத் தொடர்ந்து ஆடி 13ஆம் நாள் தான் பதவி விலகுவார் என்றும் அவர் தெரியப்படுத்தியிருந்தார். பதவி விலகுவதற்கு முன்னதாகவே மாலைதீவுக்குத் தப்பிச் சென்ற அவர், அங்கிருந்து சிங்கப்பூருக்குச் சென்று சேர்ந்தார். அதற்கு முன்னதாக பதில் அரச தலைவராக ரணில் விக்கிரமசிங்கவை நியமித்திருந்தார்.
பதில் அரச தலைவராகப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து நாட்டு மக்களுக்கு வெள்ளிக்கிழமை உரையாற்றினார் ரணில் விக்கிரமசிங்க. எதிர்வரும் 20 ஆம் நாள் நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ள அரச தலைவருக்கான தேர்தலில் வாக்களிக்கவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சில குழுக்கள் தேவையற்ற செல்வாக்கைச் செலுத்தி அழுத்தம் கொடுக்கின்ற என்று அவர் குற்றஞ்சாட்டினார்.
நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாக புதிய அரச தலைவரைத் தெரிவு செய்வதற்கு வழியேற்படுத்தும் வகையில் அவர்களது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.
"அமைதியான போராட்டங்களுக்கு நான் எதிரானவனல்லன். ஆனால் போராட்டத்திற்கும் கிளர்ச்சிக்கும் இடையிலான வித்தியாசத்தை ஒருவர் நன்கு புரிந்துகொள்ளவேண்டும். காவல்துறையினரின் 2 துப்பாக்கிகளைப் பறித்துச் சென்ற கிளர்ச்சியாளர்கள் 24 படையினரைக் காயப்படுத்தியுமுள்ளனர். அடுத்த வாரமும் அமைதியின்மையை ஏற்படுத்த இந்தக் கிளர்ச்சியாளர்கள் முயற்சிக்கின்றனர். நாம் அதனை அனுமதிக்க முடியாது. அமைதியின்மை மிக மோசமான பொருளாதாரக் குழப்பத்தை ஏற்படுத்தும். ஏற்கனவே வந்திறங்கியிருக்கும் எரிபொருள், எரிவாயு மற்றும் உணவுப் பொருட்களின் விநியோகத்தில் பாதிப்பை ஏற்படுத் தும். அதனால் காவல் மா அதிபர் மற்றும் முப்படைகளின் தளபதிகளை உள்ளடக் கிய குழு ஒன்றை நியமித்துள்ளேன். சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு அவர்கள் பொறுப்பாக இருப்பார்கள்" என்று ரணில் தனது உரையில் குறிப்பிட்டார்.
தனது இந்தக் குறுகிய பதவிக் காலத்தில் இரு முக்கிய விடயங்களைச் செய்வதாகவும் அவர் அறிவித்தார். "மேன்மைதங்கிய" என்று அரச தலைவரை விளிக்கும் வழக்கத்தை இல்லாதொழிப்பதும் அரச தலைவருக்கெனத் தனியாக இருந்த கொடியை இல்லாதொழிப்பதுமே அந்த இரு முக்கிய பணிகளுமாகும்.
ரணிலின் உரையில் தெரிவிக்கப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:

1. அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை மீண்டும் முழுமையாக மீண்டும் கொண்டுவருவதற்கான சட்ட வரைபு உடனடியாக நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.
2. ஆடி 20ஆம் நாள் தெரிவுசெய்யப்படும் புதிய அரச தலைவர் 19ஆவது திருத்தத்தை மீண்டும் கொண்டுவருவதற்கான சட்ட வரைபை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
3. நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
4. நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
5. சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட முப்படைகள் மற்றும் காவல் மா அதிபரை உள்ளடக்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.
6. இடைக்கால அனைத்துக் கட்சி ஆட்சி ஒன்றை ஏற்படுத்துவதற்கு ஏற்ற வகையில் அனைத்துக் கட்சியினரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அரசமைப்பை முழுமையாகப் பாதுகாப்பதில் தான் அக்கறையோடு இருப்பார் என்று தெரிவித்த அரச தலைவர், அரசமைப்பை மீற எடுக்கப்படும் நடவடிக்கைகள் எதனையும் தான் அனுமதிக்கமாட்டார் என்றும் தெரிவித்தார். நாட்டு நலனைக் கருதி அனைத்துக் கட்சியினரும் ஒருங்கிணைந்து செயற்படுவதற்கு முன்வரவேண்டும் என்றும் ரணில் அழைப்பு விடுத்தார்.

## அடுத்த புதன் வரையும் பாடசாலைக்கு விடுமுறை


*கல்வி அமைச்சு அறிவிப்பு*

பாடசாலைகள் எதிர்வரும் 20ஆம் நாள் வரை தொடர்ந்து மூடப்பட்டிருக்கும் என்று கல்வி அமைச்சு வெள்ளிக்கிழமை அறிவித்தது. 21ஆம் நாள் வியாழக்கிழமை அடுத்த தவணைக்காக பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.
அரச மற்றும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள் அனைத்துக்கும் இந்த விடுமுறை நீடிப்பு வழங்கப்பட்டிருப்பதாக கல்வி அமைச்சின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.
முன்னதாக கடந்த 4ஆம் நாள் முதல் ஒரு வாரத்திற்குப் பாடசாலைகள் மூடப்படுவதாக கல்வி அமைச்சு அறிவித்தது. பெற்றோல், டீசல் தட்டுப்பாடு காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. எனினும் மீண்டும் 9ஆம் நாள் திங்கட்கிழமை மீண்டும் ஒரு வாரத்திற்கு பாடசாலை விடுமுறை நீடிக்கப்படுவதாக அமைச்சு அறிவித்தது.
ஆடி 18ஆம் நாள் பாடசாலைகள் மீண்டும் தொடங்கப்படும் என்று அமைச்சு அறிவித்திருந்த நிலையில் 20ஆம் நாள் வரையில் தொடர்ந்தும் அவை மூடப்பட்டிருக்கும் என்று இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது.
புதிய அரச தலைவர் தெரிவு நாடாளுமன்றத்தில் 20ஆம் நாள் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில் அதுவரை பாடசாலை விடுமுறையும் நீடிக்கப்பட்டிருக்கிறது.

## டலசும்...

அரச தலைவரைத் தேர்ந்தெடுக்கும் நடைமுறைகளுக்காக நாடாளுமன்றம் இன்று சனிக்கிழமை மீண்டும் கூடுகின்றது. இன்னும் சில நாள்களில் புதிய அரச தலைவர் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கோரப்படும்.
தேவையான நடவடிக்கைகள் எல்லாவற்றையும் மேற்கொண்டு 7 நாள்களுக்குள் தேர்தலை நடத்தி முடிக்கத் தான் நடவடிக்கை எடுப்பார் என்று சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

# இன்றைய ரப்பரின் பிதாமகன்



இன்று நாம் பயன்படுத்தும் ரப்பர் குழாய், ஷூ சோல், டயர், பென்சில் அழிக்கும் ரப்பர், பந்து, பொம்மை போன்ற ரப்பர் பொருட்களுக்குக் காரணம், ரப்பரை வல்கனைசேஷன் செய்ததுதான். இயற்கையான ரப்பரைப் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் மாற்று வதுதான் வல்கனைசேஷன். வல்கனை சேஷன் கண்டு பிடிப்புக்கு முன்பும் ரப்பர் பொருட்கள் பயன்பாட்டில் இருந்தன. ஆனால், அந்த ரப்பர் காலணி களும் ரெயின் கோட்களும் வெயில் காலத்தில் உருகின. மழைக் காலத்தில் ஒட்டிக்கொண்டன.

அமெரிக்காவைச் சேர்ந்த சார்லஸ் குட்இயர் என்ப வருக்கு ரப்பர் மீது தீராத ஆர்வம் இருந்தது. அதுவரை பயன்பாட்டில் இருந்த ரப்பரை, இன்னும் மென்மையா கவும் நீடித்து உழைக்கும் வகையிலும் மாற்ற வேண்டும் என்று முடிவு செய்தார். அதற்கான ஆராய்ச்சிகளில் இறங் கினார். ஒவ்வொரு முறையும் மிகுந்த நம்பிக்கை யோடு காத்திருப்பார்.

அந்த முயற்சி தோல்வி அடைந்தால், சிறிதும் மனம் தளராமல் அடுத்த முயற்சியில் இறங்கிவிடுவார். சில ரசா யனங்கள் ரப்பரை மென்மையாக்குவதுபோல் தோற்றத் தைத் தரும். வெயில் காலத்துக்கும் மழைக் காலத்துக்கும் காத்திருப்பார். வெயில் காலத்தில் உருக ஆரம்பித்து விடும். மழைக் காலத்தில் விரிசல் அடைந்துவிடும். அதைத் தூக்கிப் போட்டுவிட்டு, அடுத்த ரசாயனத்தைக் கலந்து வைப்பார்.

வெவ்வேறு வெப்பநிலைகளில் வெவ்வேறு ரசாயனங் களைக் கலந்து ஆராய்ச்சிகளைச் செய்து பார்த்தார். ரப் பரை மென்மையாக மாற்றுவதற்கு, அதனுடன் கலக் கப்படும் டர்பைனே காரணம் என்பதைக் கண்டறிந்தார். ஆராய்ச்சி அடுத்த கட்டத்தை அடைந்தது. தொடர்ந்து பரிசோதனைகளை மேற்கொண்டார்.

ஒரு நாள் நைட்ரிக் அமிலத்தைக் கலந்தார். வெற்றி கிடைத்தது. மகிழ்ச்சியோடு அதற்கான காப்புரிமையும் பெற்றார். அமெரிக்கத் தபால் துறை, ரப்பர் பைகளுக்கான ஆர்டரை வழங்கியது. ஆர்வத்துடன் தயாரித்துக் கொடுத் தார். ஆனால், சில மாதங்களில், அந்தப் பைகள் ஒட்டிக் கொண்டன. மிகவும் ஏமாற்றம் அடைந்தார் சார்லஸ்.

சில நாட்களுக்குப் பிறகு ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, கந்தகமும் வெள்ளைக் காரீயமும் தவறுதலாக விழுந்துவிட்டன. சார்லஸ் இதைக் கவனிக்க வில்லை. மறுநாள் எடுத்துப் பார்த்தபோது ரப்பர், தோல் போல மென்மையாக இருந்தது. நன்றாக வளைந்தது. ஒட்டவும் இல்லை.

இந்த விபத்து சார்லஸின் ஆராய்ச்சியைச் சரியான திசையில் திருப்பியது. வெப்பமும் வேதிப் பொருட்களும் சேர்ந்துதான் ரப்பரைப் பயன்படுத்தக் கூடியதாக மாற் றும் என்பதை அறிந்துகொண்டார். 1844இல் வல்கனை ஷேசனுக்குக் காப்புரிமையும் பெற்றார்.

பல ஆண்டுகள் சார்லஸ் செய்த தொடர் முயற்சியின் காரணமாக, இன்று உலகமே ரப்பர் பொருட்களைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது.

---

## மகிந்த...

எதிராகத் தடையாணை வழங்கப்பட்டது. மத்திய வங்கி முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், மத்திய வங் கியின் முன்னாள் பிரதி ஆளுநர் டபிள்யு.டி.லக்ஸ்மன், நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர்.ஆர்ட் டிக்கல ஆகியோரும் நாட்டைவிட்டு வெளியேற நீதிமன்றம் தடை விதித் துள்ளதாக ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர் நேசனல் தெரிவித்தது.

இந்த வழக்கு மீண்டும் எதிர்வரும் 27 ஆம் நாள் விசாரணைக்கு வருகின்றது. ராஜபக்சக்களை உள்ளடக்கிய 6 பேரு க்கு எதிராக நாட்டைவிட்டு வெளியேறு வதற்கான தடை கோரி ஆடி 17ஆம் நாள் இந்த மனுக்கள் நீதிமன்றில் தாக் கல் செய்யப்பட்டன. இலங்கையின் வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத் துவதற்கான திறன் இல்லாமல் போன மைக்கும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கும் இவர்கள் அனைவரும் நேரடியான பொறுப்பு என்று அந்த மனுக்களில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. எதிராளிகள் அனைவரதும் சட்டத் துக்குப் புறம்பான, தன்னிச்சையான, காரணப்படுத்த முடியாத செயற்பாடு கள், குறைபாடுகள் காரணமாகவே தற்போதைய பொருளாதார நெருக்கடி உச்சத்தையடைந்தது. அதற்கு அவர் கள் அனைவரும் பொறுப்புக்கூற வேண்டும் என்றும் மனுவில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# எண்ணெய் சட்டிக்குள்ளிருந்து நெருப்புக்குள் விழுந்த சிங்களவர்

**கோத்தாபய ராஜபக்ச, பசில் ராஜபக்ச ஆகியோர் வெளிநாடு செல்லவும் எஞ்சிய ராஜபக்ச குடும்பத் தினரைக் காப்பாற்றும் விடயத்திலும் ரணில் மிகக் கவனமாக இருப்பது தெரிகிறது**

**நியூட்டன்**




கண்டிய நடனக் குழு ஒன்றை நடத்தி வருகிற சிங்களக் கலைஞர் ஒருவர் ரணில் விக்கிரமசிங்க பற்றி ஒரு தடவை இவ்வாறு கூறினார், ''ஒரு முக்கிய வரவேற்பு நடனத்துக்காக எம்மைக் காலி முகத்திடலுக்கு அழைத்திருந்தார்கள். நாம் அங்கு நடனமாடுவதற்கு ஒழுங்கு செய்து தந்தவர் எங்களிடம் வந்து, உங்களை ரணில் விக்கிரமசிங்க சந்திப்பார் ஓரிடத்தில் அமர்ந்திருங்கள் என்று கூறினார். நீண்ட நேரத்தின் பின் அவர் ஓடி வந்து ரணில்விக்கிரமசிங்க அவசரமாக வேறோரு கூட்டத்துக்குப் போகவிருப்பதால் இங்கு வரமாட்டார் அவரது அலுவலகத்துக்குப் போவோம் என்று அவசரமாக எங்களை அங்கு அழைத்துச் சென்று அவரது அலுவலக வாசலில் நிற்க விட்டார். அலுவலகத்திலிருந்து வெளியேறி வந்த ரணில் எம்மைக் கண்டதும், இவங்களை ஏன் இங்கு கூட்டி வந்தனி. துர்நாற்றம் வீசுகிறது என்று அங்கு அழைத்துச் சென்றவரிடம் சொல்லிவிட்டு எங்களைப் பார்க்காமலே மூக்கைப் பொத்திக்கொண்டு வெளியேறினார். இப்படி ஒரு அவமானத்தை என் வாழ்நாளில் சந்திக்கவில்லை'' என்றார்.

இதுதான் ரணில் விக்கிரமசிங்கவின் சமூக அக்கறையும் மக்கள் மீதான அணுகுமுறைக்குமான தகுந்த உதராணம்.



**நரியல்ல எலி**

பிறப்பிலிருந்தே 'றோயல்' குடும்பத்தில் வாழ்ந்து வருவதால் அவருக்குச் சாதாரண மக்கள் மீது அக்கறையில்லை. தான் சுகமாகவும் மதிப்பாகவும் வாழ்வதற்காக எதையும் செய்வார். அதற்காக ஒருபோதும் அவர் வெட்கப்பட்டதில்லை. ரணிலை நரி எனப் பலரும் வர்ணித்தாலும் அவர் எலியைப் போன்றவர். தூக்கில் தொங்கும் எவ்வளவு நிறையுடைய பொருளானாலும் அது தொங்கிக்கொண்டிருக்கும் கயிற்றை நறுக்கிக் கீழே வீழ்த்துவதில் எலி வல்லது. ரணிலும் அதுபோன்றவரே தவிர அதில் ஒரு மூடையைக்கூடச் சுமக்க முடியாதவர்.

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து கருணாவைப் பிரித்ததன் மூலம் அந்த அமைப்பையே சிதறடித்தார். தற்போது அவரது நடவடிக்கை சிங்களவர்களைப் பாதிப்பதாக அமைந்துவிட்டது. சிங்கள மக்களின் நிலை எண்ணெய்ச் சட்டிக்குள்ளிருந்து தவறி நெருப்புக்குள் விழுந்ததுபோலாகிவிட்டது.



**தேர்தல்களும் ரணிலும்**

2020 தேர்தலில் ஐ.தே.க. ஓர் ஆசனத்தைக்கூடப் பெறாமல் என்றுமில்லாத தோல்வியைச் சந்தித்தது. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை மூலம் அந்தக் கட்சி சார்பாக ஒருவர் நாடாளுமன்றம் செல்ல வாய்ப்பிருந்தது. அதைத் துரும்பாக வைத்து நாடாளுமன்றத்துக்குள் புகுந்து தலைமை அமைச்சராகி இப்போது தற்காலிக அரச தலைவராகத் தன்னை உயர்த்தியிருக்கிறார் ரணில். மக்கள் செல்வாக்கில்லாத ரணில், தேர்தல்களின்போது தனது கட்சிப் பிரதிநிதிகள் பெறும் வாக்குகளில் ஒரு விருப்பு வாக்கைத் தனக்கு அளிக்குமாறு வற்புறுத்தி வாக்குகளைப் பெற்றே அரசியல் நடத்தி வந்தார். மக்கள் மத்தியில் சென்று அவர் வாக்குக் கேட்பதில்லை. அவருக்கு மக்கள் செல்வாக்குமில்லை.

சிறுவயதிலிருந்தே அவர் தனது மாமனாரும் முன்னாள் அரச தலைவருமான ஜெ.ஆர். ஜெயவர்த்தனவுடன் பழகியதால் அதிகம் மூளைப்பலமுள்ளவர். இன்றுள்ள இலங்கைத் தலைவர்களில் நாடாளுமன்ற நடைமுறைகளை அதிகம் தெரிந்தவர். அவ்வாறான ஒருவரிடம் அரச தலைவர் பதவி போய்விடக்கூடாது என்பதே போராட்டக்காரர்களினதும் ஏனைய கட்சித் தலைவர்களினதும் எதிர்பார்ப்பு.

**மகிந்த குடும்ப உறவு**

2015இல் மகிந்த ராஜபக்ச அரச தலைவர் தேர்தலில் தோல்வியுற்றதும் அவருக்குச் சிறப்பு உலங்கு வானூர்தியை வழங்கி அவரது சொந்த ஊரான மெதமுல்னவுக்கு அனுப்பி வைத்தார் ரணில். தற்போது அரச தலைவர் கோத்தாபய ராஜபக்ச, பசில் ராஜபக்ச ஆகியோர் வெளிநாடு செல்லவும் எஞ்சிய ராஜபக்ச குடும்பத்தினரைக் காப்பாற்றும் விடயத்திலும் ரணில் மிகக் கவனமாக இருப்பது தெரிகிறது.

2015இல் நல்லாட்சி அரசு பதவியேற்றதும் மகிந்த தரப்பினரின் ஊழல்கள் விசாரிக்கப்படும் என்ற நிலையில் அதைப் பின்தள்ளி மகிந்த ராஜபக்சவையோ, அவரது மனைவியையோ ஒருபோதும் கைது செய்ய மாட்டேன் என்று திட்ட வட்டமாகக் கூறியவர் ரணில். இந்த நன்றிக் கடன் காரணமாக 2020இல் மகிந்த பதவிக்கு வந்ததும் ரணில் மீதிருந்த மத்திய வங்கிப் பிணைமுறி விவகாரத்தில் ரணிலின் நெருங்கிய சகாவான மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனையோ ரணிலையோ கைது செய்யாது கைமாறு செய்தார்.

ஆளையாள் காப்பாற்றும் இந்த நிலை இனிமேலும் இருக்கக்கூடாது என்பதே போராட்டத்தில் ஈடுபடுபவர்களின் கோரிக்கையாகும். பூர்வீகத்தில் தெலுங்கரான ரணில் விக்கிரமசிங்க இந்தியத் தெய்வங்களில் நம்பிக்கையுள்ளவர். ஒரு சில வருடங்களுக்கு முன்னர் திருப்பதிக்குச் சென்று தனது எடைக்கு நிகரான தங்கத்தைத் தானம் செய்தார். கண்டி இராச்சியம் நிலவியபோது இலங்கைக்கு வந்த இவரது வம்சம் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கிறிஸ்தவத்தைச் சார்ந்தது. ஜெ.ஆரின் பெயரடியில் ஜூனியர் ரிச்சார்ட் என்றும், உறவுக்காரன பண்டாரநாயக்காவின் பெயரடியில் சொலமன் வில்லியம் ரிச்சாரட் டயஸ் பண்டாரநாயக்க என இருப்பதும் கவனிக்கத்தக்கது.

இலங்கையின் சுதந்திரத்துக்குப் பின்பான காலத்தில் சிங்கள - பௌத்தர்களாக இவர்கள் தம்மை மாற்றிக் கொண்டார்கள்.

ஜெ.ஆரால் உருவாக்கப்பட்ட நிறைவேற்று அதிகார மிக்க அரச தலைவர் முறையை ஜெ.ஆருக்குப் பின்னர் பதவிக்கு வந்த அரச தலைவர்கள் எவரும் முழு அளவில் பயன்படுத்தியதாகக் கூறிவிட முடியாது. அவ்வாறான சந்தர்ப்பம் ஒன்று ரணிலின் கைக்கு வருமாக

இருந்தால் ஜெ.ஆர். உயிருடன் இருந்தால் எதையெல்லாம் செய்வாரோ அதையெல்லாம் செய்வார் ரணில் என்று போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு நன்கு தெரிந்திருக்கிறது.

பதில் அரச தலைவராகப் பதவியேற்ற அன்றே போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் பாசிசவாதிகள் என்றும் கலகக் காரர்கள் இலங்கையின் அரசமைப்புக்கு முரணாகச் செயற்படுகின்றனர் என்றும் சொன்னார் ரணில். ஜெ.ஆரால் உருவாக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறையும் புதிய அரசமைப்பும் 1978 இலிருந்து இன்றுவரை தமிழர் மீது பல அழுத்தங்களைக் கொடுக்க வழிவகுத்தது. இன்று ரணில் அதேவிடயத்தைக் கையாண்டால் தாம் பாதிக்கப்படுவோம் என்று சிங்கள மக்கள் நினைக்கிறார்கள். அந்த அளவுக்கு ஜெ.ஆரின் முன்னெடுப்புகள் மக்களாட்சிக்கு விரேதமானவை.

எதிர்வரும் 20ஆம் திகதி நாடாளுமன்ற வாக்கெடுப்பு மூலம் ரணில் அரச தலைவராகினால் அதன் விளைவைச் சிங்கள மக்களே அதிகம் அனுபவிப்பார்கள். 30 வருடப் போரின்போது தமிழ் மக்கள் எத்தகைய துன்பங்களை அனுபவித்தார்கள் என்று ஓரளவுக்காவது புரிந்திருந்தாலும் இந்தக் கடினச் சூழல் சீரானதும் அவற்றை மிக இலகுவாக மறந்துவிடுவார்கள் சிங்கள மக்கள். அதுதான் சிங்களவரின் பழக்கம் என்பதையும் கூறித்தான் ஆகவேண்டும்.



# ஆடி 9 என்ன நடந்தது?

**அன்ரன்**

ஆடி ஒன்பதாம் நாள் மீண்டும் ஒரு பெரும் போராட்டத்திற்கு மக்கள் தயாராகியபோது அது இவ்வளவு பெரிய வெற்றியளிக்கும் என்று பலரும் எதிர்பார்க்கவில்லை. அதிலும் குறிப்பாக முதல் நாளிரவு ஊரடங்கு உத்தரவை அரசு பிறப்பித்தபோது போராட்டத்தை அடக்கிவிடுவார்கள் என்று பலரும் கருதினார்கள். ஆனால் அதற்கு முன்பாக மக்களின் பொறுமையின் எல்லையை அரசு கடுமையாகச் சோதித்திருந்தது. நாட்கணக்கில் வெயிலில் நீண்டு நிற்கும் எரிபொருள் வரிசை, கட்டுக்கடங்காமல் உயரும் விலைவாசிகள், சமையலும் செய்ய முடியாமல் உருப்படியான சாப்பாடும் வாங்க முடியாமல் உணவுக்குத் திண்டாடும் நிலை என்று நீண்ட சோதனைகளின் பட்டியலால் மக்கள் அரசின் அடக்குமுறைகளைக் கண்டு பயப்படும் நிலையைக் கடந்திருந்தார்கள். போராட்டங்களைத் தடுக்க அரசு ஊரடங்கைப் பிறப்பித்தபோது அதனை எதிர்கொண்டு முன்னேறி ஆட்சியாளர்களை முட்டிமோதும் வெளியோடு அவர்கள் கிளம்பினார்கள். தங்கள் உணர்வுகளைப் புரிந்துகொள்ளவில்லை, அதற்கு மதிப்பளிக்கவில்லை என்கிற கோபம் அவர்களுக்கு ஆயுதங்களின் மீதிருந்த அச்சத்தை அகற்றியிருந்தது.

இப்போது இல்லாவிட்டால் எப்போதும் இல்லை என்று நினைத்த மக்கள் ஊரடங்கு நேரத்திற்கு முன்பாகவே காலிமுகத் திடலில் குவியத் தொடங்கினார்கள். சமூக ஊடகங்களில் அரசியல் கட்சிகளும் தனிநபர்களும் போராட்டக் களத்தில் இணைந்துகொள்ள மக்களை ஊக்கப்படுத்தினார்கள். இந்த ஆட்சியாளர்கள் உடன்



பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தச் சொன்னார்கள்.

அடுத்து வரவிருக்கும் மிகப் பெரும் நாளை எந்த நிலையிலும் எதிர்கொள்வதற்குத் தயாராக பல அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும் காலி முகத் திடலில் குவியத் தொடங்கினார்கள். அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம். அதன் பெருமெடுப்பிலான உறுப்பினர்களும் காலி முகத் திடல் போராட்டத்திற்கு ஆதரவாக முதல் நாள் **8**ஆம் திகதி உலக வர்த்தக மையக் கட்டப் பகுதியில் பெரும் எண்ணிக்கையில் திரண்டு ஆர்ப்பாட்டம் செய்தார்கள். காவல்துறையினர் அவர்கள் மீது கண்ணீர் புகைக்குண்டுகளை வீசினார்கள்.

வென்னப்புவ, சிலாபம் உள்ளிட்ட பல பகுதிகளில் இருந்தும் சிங்கக் கொடிகளுடன் வந்து குவியத் தொடங்கிய மக்கள் கூட்டத்தால் காலி முகத் திடல் மீண்டும் உத்வேகம் பெறத் தொடங்கியது. **9**ஆம் திகதி காலை பெரும் எதிர்பார்ப்புக்களுடன் விடியத் தொடங்கியது. கூடியிருந்த மக்கள் ஆர்ப்பரிக்கத் தொடங்கினர். பலரும் நடக்கத் தொடங்கியிருக்க ஏனையவர்கள் கோல்பேஸ் கிரீன் நோக்கி பாரவூர்திகள், பேருந்துகள் என்று வாகனங்களில் முன்னகரத் தொடங்கினர். **9** மணியளவில் கிங்ஸ்பெரி சொகுசு விடுதியடியில் இந்தக் கூட்டத்திற்கும் மனிதச் சங்கிலி அமைத்துத் தடையை ஏற்படுத்தியருந்த காவல்துறையினருக்கும் இடையில் பலப்பரீட்சை தொடங்கியது. போராட்டக்காரர்கள் அரச தலைவர் மாளிக்கைக்குச் செல்லாமல் தடுத்து நிறுத்தும் நோக்கத்தோடு காவல்துறையினரின் மனித சங்கிலி உருவாக்கப்பட்டிருந்தது.

சாந்தம் வீதில் நிலமை கடும் பதற்றத்துக்குளாகியிருந்தது. காவல்துறையினர் கண்ணீர் புகைக் குண்டுகளை ஏவத் தொடங்கியிருந்தனர். மக்கள் மீது கடும் வேகமன நீர்த்தாரை வீச்சையும் மேற்கொண்டனர். அனைத்தையும் கடந்து கூட்டம் பெரும் குரலுடன் முன்னேறியது. அரச தலைவர் மாளிகை நோக்கி முன்னேறிய மக்கள் கூட்டத்தை காவல்துறையினர் பாய்ந்து பாய்ந்து தாக்கினார்கள் என்று சம்பத்தை நேரில் பார்த்தவர்கள் செம் மண் பத்திரிகையிடம் தெரிவித்தார்கள்.

கிங்ஸ்பெரி சொகுசு விடுதி முனையிலிருந்து அரச தலைவர் மாளிகை நோக்கி முன்னேறிய மக்கள் கூட்டம் மீது தொடர்ந்து கண்ணீர் புகைக் குண்டுகள் வீசப்பட்டன. கேற் சீரோ எனப்படும் அரச தலைவர் செயலகத்தை நோக்கிச் சென்றவர்களின் நகர்வு கண்ணீர் புகைக் குண்டுகளின் செறிவினால் தடுத்து நிறுத்தப்பட்டது. மக்கள் ஒருவருக்கு ஒருவர் தண்ணீரும் ஐஸ்கட்டிகளும் கொடுத்து புகைக் குண்டுகளின் தாக்கத்திலிருந்து மீள்வதற்கு உதவினார்கள்.

இதற்குள் பின்களத்தில் காலி முகத் திடல் மேலும் மேலும் கூட்டத்தால் நிரம்பி வழியத் தொடங்கியது. அங்கு நெரிசலைத் தவிர்க்க கடுமையான முயற்சி எடுக்கப்பட்டது. நண்பகல் **12.30** மணியளவில் போராட்டக்காரர்கள் அரச தலைவர் மாளிகையைக் கைப்பற்றிவிட்டார்கள், படையினர் பின்வாங்கிவிட்டனர் என்று செய்திகள் பரவத் தொடங்கின. ஒரு மணி நேரத்தின் பின்னர் அரச தலைவர் செயலகத்தின் மேல் மாடிகளில் போராட்டக்காரர்கள் தோன்றினார்கள். வீதிகளிலிருந்த கூட்டத்தினரை நோக்கி கைகளை அசைத்து வெற்றியைக் கொண்டாடினார்கள்.

கோபமும் கொந்தளிப்பும் அடைந்திருந்த மக்களுக்கு அரச தலைவர் மாளிகையையும் செயலகத்தையும் ஆக்கிரமிக்கும் வாய்ப்புக் கிடைத்திருந்தபோதும் பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கக்கூடாது என்று அவர்களுக்கு மீண்டும் மீண்டும் நினைவூட்டப்பட்டுக்கொண்டேயிருந்தது.

போராட்டக்களத்தில் அரச தலைவருக்கு எதிரான அதிரடி நடவடிக்கைகள் தொடர்ந்துகொண்டிருந்த அதேநேரத்



# உக்ரைன் போரில் இந்தியா ஏன் ரஷ்யாவை கண்டிக்க மறுக்கிறது?



ஆரென்டெட் மைக்கேல்
பென்சில்வேனியா பல்கலைக்கழகம்

உலகின் அதிக மக்கள்தொகை கொண்ட மக்களாட்சி நாடாக நீண்ட காலமாக விளங்கிவரும் இந்தியா, மக்களாட்சி சார்ந்த போராட்டங்களைக் கையாள்வதில் பல்வேறு நாடுகளுக்கு உதவிவருகிறது. இந்த ஆதரவானது இரு தரப்புகளும் பல தரப்புகளும் மேற்கொள்ளும் முன்முயற்சிகளின், குறிப்பாகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் கலவையாகும்.

உக்ரைன் மீதான ரஷ்யத் தாக்குதல் தொடர்பான இந்தியாவின் அணுகுமுறையும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் (நிரந்தர உறுப்பினர் அல்லாத முறையில்) அது நடந்துகொள்ளும் விதமும் மக்களாட்சிக்கு அது அளித்துவரும் ஆதரவுக்கு முரணாக உள்ளன. போரின் தொடக்கத்தில் ரஷ்ய ஆக்கிரமிப்பைக் கண்டித்து ஐநா கொண்டுவந்த தீர்மானங்களுக்கு ஆதரவாக வாக்களிக்காமல் இந்தியா ஒதுங்கி நின்றது ஐநா உறுப்பு நாடுகள் பலவற்றைக் கோபப்படுத்தியது.

வாக்களிக்காமல் ஒதுங்கி நின்ற தன் நிலைப்பாட்டை நியாயப்படுத்தும் விதமாக இந்தியா 'வாக்களிப்புக்கான விளக்கம்' என ஓர் அறிக்கையை வெளியிட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானது. 'ராஜதந்திரப் பாதைக்குத் திரும்பவேண்டும்' என்றும், 'வன்முறையையும் விரோதப் போக்கையும் உடனடியாக முடிவுக்

தில் சமாந்தரமாக அரசியல் களத்திலும் பல காட்சிகள் மாறிக்கொண்டே இருந்தன. சபாநாயகரின் இல்லத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அவசரமாகக் கூட்டினார். அங்கு அரச தலைவர் கோட்டாபய மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இருவருமே பதவி விலக வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இருந்தபோதும் இந்தக் கூட்டத்தை எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஜேவிபி தலைவர் அனுர குமார திஸநாயக்கவும் புறக்கணித்திருந்தனர்.

பல அமைச்சர்கள் தமது பதவியிலிருந்து விலகினர். பலர் தாம் சுயாதீனமாக இயங்கப்போகிறார்கள் என்று அறிவித்தனர். சில மணி நேரம் கழித்து, அனைத்துக் கட்சி ஆட்சி ஒன்றை அமைக்கும் நோக்கத்திற்கு இடமளிக்கும் வகையில் தான் பதவி விலகத் தயார் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்தார். அதேசமயத்தில் அரச தலைவர் கோட்டாபயவும் ஆடி 13ஆம் நாள் பதவி விலகத் தயாராக உள்ளார் என்று அறிவிக்கப்பட்டது.

வைகாசி (மே) 9 மகிந்த ராஜபக்ச பதவி விலகினார். ஆனி (ஜூன்) 9 பசில் ராஜபக்ச பதவி விலகினார். அப்போதே ஆடி 9 கோட்டாபய பதவி விலகுவார் என்று ஆருடங்கள் பகடியாக உலாவரத் தொடங்கியிருந்தன. அதை உண்மையாக்கும் வகையில் ஆடி 9 அன்று அரச தலைவர் பதவியிலிருந்து கோட்டா தூக்கி எறியப்பட்டார். அதன் பிறகு தனது அதிகாரத்தை மக்கள் மீது செலுத்தும் நிலையில் அவர் ஒரு போதும் இருக்கவில்லை.

குக் கொண்டுவரவேண்டும்' என்றும் போரில் ஈடுபட்டுள்ள இரு நாடுகளையும் இந்தியா அந்த அறிக்கையில் கேட்டுக்கொண்டது.

'சமகால உலக நாடுகளின் நிலையானது ஐநாவின் சாசனம், பன்னாட்டுச் சட்டம், நாடுகளின் இறையாண்மை, இடப்பரப்பு சார்ந்த உரிமை ஆகியவற்றின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. அனைத்து உறுப்பு நாடுகளும் ஆக்கபூர்வமான வழியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் இந்தக் கொள்கைகளை மதித்து நடந்துகொள்ளவேண்டும். கருத்து வேறுபாடுகளையும் சச்சரவுகளையும் தீர்த்துக் கொள்வதற்கான ஒரே வழி பேச்சு மட்டுமே. இந்தத் தருணத்தில் எவ்வளவுதான் கடினமானதாகத் தோன்றினாலும் அதுதான் ஒரே தீர்வு' என்று இந்தியா வைக்குத் தெரிகிறது.

வியூக முக்கியத்துவம் வாய்ந்த சுயாதிகாரத்திற்கான தீவிர முனைப்பைக் கொண்டிருப்பது என்பது இந்தியாவின் வெளியுறவு மற்றும் வியூக முக்கியத்துவம் சார்ந்த முக்கியமான கொள்கைகளில் ஒன்று. வாக்களிப்பிலிருந்து விலகி நின்றதன் மூலம் அந்தக் கொள்கையை இந்தியா மீறிவிட்டதாகவே தோன்றுகிறது.

போர் வியூகம் சார்ந்த கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, சோவியத் ஒன்றியம் ஆப்கனை ஆக்கிரமித்தபோது நடந்துகொண்ட விதத்திலேயே இந்தியா இப்போதும் நடந்துகொள்கிறது. இந்தியாவைப் பொறுத்தவரை, அதன் தேசியப் பாதுகாப்பு ஆபத்தில் உள்ளது. ஆசியாவிலும் உலகிலும் புவிசார் வியூக முக்கியத்துவம் தொடர்வாய்ந்த உறவை மேற்கொண்டு வருகின்றன. 2020 டிசம்பரில், 'வியூக முக்கியத்துவம் வாய்ந்த சிறப்புக் கூட்டாண்மை'யாக இது மேம்படுத்தப்பட்டது.

**போர்ப் படை எனும் வர்த்தகம்**

கடந்த சில ஆண்டுகளில் ரஷ்யாவிலிருந்து இந்தியா இறக்குமதி செய்யும் பொருட்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்தபோதிலும், 1996-2015க்கு இடையில், இந்திய போர்ப் படை இறக்குமதியில் ரஷ்யத் தயாரிப்புகளின் பங்கு கிட்டத்தட்ட 70% ஆக இருந்தது என்று ஸ்டாக்ஹோம் பன்னாட்டு அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் (SIPRI) அதிகாரப்பூர்வமான புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. 2016-20க்கு இடையில் அது ஏறத்தாழ



அந்த அறிக்கையில் கூறியது.

**இந்திய-ரஷ்ய உறவு**

இந்த அறிக்கைகளும் பேச்சுக்கான அழைப்பும் ஐநாவின் சாசனத்திலுள்ள நோக்கங்கள், பொருத்தப்பாடுகள் குறித்த இந்தியாவின் அறிவிக்கப்பட்ட நிலைப்பாட்டிற்கு ஏற்ப அமைந்திருந்தாலும், இந்தியாவின் கொள்கை முழக்கத்திற்கும் அது நடந்துகொள்ளும் விதத்திற்கும் இடையிலான முரண்பாடு தெளிவாகவே உள்ளது. இந்தியாவைப் பொறுத்தவரை ஐநா சபை பிரதிநிதித்துவப்படுத்தும் உலகச் சமூகத்தின் எதிர்பார்ப்புகளைக் காட்டிலும் ரஷ்யாவுடனான 'நல்ல உறவு'தான் இந்தியாவுக்கு முக்கியம் என்பதாகவே முதல் பார்பான அதன் தற்போதைய செல்வாக்கும் எதிர்காலத்தில் இருக்கக்கூடிய செல்வாக்கும் ஆபத்தில் உள்ளன.

படைத்துறை ரீதியாக ரஷ்யாவை இந்தியா சார்ந்திருக்கிறது. இந்தச் சார்புநிலை பூதாகரமானது என்பதுடன் அபாயகரமான நெருக்கடியையும் ஏற்படுத்தியிருக்கிறது. 'இந்திய-சோவியத் அமைதி, நட்பு, ஒத்துழைப்பு ஒப்பந்தம்' 1971இல் கையெழுத்தானது. அதிலிருந்து, பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தங்களும் நீண்டகால அடிப்படையிலான போர்த் தளவாட விநியோக ஒப்பந்தங்களும் நடைமுறையில் உள்ளன. 2000 ஐப்பசி (ஒக்டோபர்) முதல் இந்தியாவும் ரஷ்யாவும் வியூக முக்கியத்துவம் 49%ஆக இருந்தது என்றும் தெரிகிறது.

சொல்லப்போனால், தற்போது பயன்பாட்டில் உள்ள இந்திய போர்ப் படை உபகரணங்களில் 70% ரஷ்யாவில் நேரடியாகத் தயாரிக்கப்பட்டவை. அவற்றின் பெரும்பாலான பாகங்கள் ரஷ்யாவில் தயாரானவை அல்லது ரஷ்யாவின் உரிமம் பெற்றவை. பெரும்பான்மையான இந்திய டாங்கிகள், இந்தியாவிலுள்ள ஒரே வானூர்தி தாங்கிக் கப்பல் (பெரிதும் மேம்படுத்தப்பட்ட கியேவ்-ரக வானூர்தி தாங்கியான ஐஎன்எஸ் விக்ரமாதித்யா), மிக்-29 (MiG-29) ரகப் போர் வானூர்திகள், ஆறு போர்க் கப்பல்கள், நான்கு நாசகாரக் கப்பல்கள், அணு ஆயுதம்

கொண்ட ஒரே ஒரு நீர்மூழ்கிக் கப்பல் ஆகியவை 2020 ஆம் ஆண்டில் இவற்றில் இடம்பெற்றிருந்தன.

இந்தியக் கடற்படையின் 14 நீர்மூழ்கிக் கப்பல்களில் எட்டு ரஷ்ய கிளோ வகையைச் சேர்ந்தவை. இந்திய வான் படையில் 'சுகோய் சு-30 எம்கேஐ', 'மில் எம்ஐ-17' ஆகியவை உள்ளன. இவை முறையே, போர் விமானங்களிலும் பயன்பாட்டு உலங்கு வானூர்திகளிலும் பெரும் பங்கு வகிக்கின்றன. இவற்றைத் தவிர ரஷ்ய டாங்கர் வானூர்திகளும் உள்ளன. இந்தியா அண்மையில் 'எஸ்-400' ஏவுகணை அமைப்பையும் ரஷ்யாவிடமிருந்து வாங்கியது.

இந்தியா தற்போது போர்ப் படை ரீதியாக அமெரிக்கா, இஸ்ரேல், பிரான்ஸ் மற்றும் இத்தாலி போன்ற பிற நாடுகளையும் நாடிவருகிறது. வெளிநாட்டு இறக்குமதிகளை மெல்ல மெல்லக் குறைத்துக்கொண்டு தன் சொந்தத் தயாரிப்புகளையும் அதிகரித்து வருகிறது. என்றாலும், புதிய இந்திய-ரஷ்ய திட்டங்கள் பலவும் கருத்தளவில் அல்லது நடைமுறைப்படுத்தப்படும் நிலையில் உள்ளன.

2021 மார்கழியில் (டிசெம்பர்), '2+2 உரையாடல்' (வெளியுறவு மற்றும் பாதுகாப்பு அமைச்சர்கள் மட்டத்திலானது) என்றழைக்கப்படும் அமைப்பின் மூலம் இந்தியாவும் ரஷ்யாவும் தங்கள் படை-தொழில்நுட்ப ஒத்துழைப்பில் புதிய கட்டம் ஒன்றைத் தொடங்கின. இதே அமைப்பைப் பயன்படுத்தி இந்தியா வியூக ரீதியில் தனது முக்கியப் பங்காளிகளான ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் வியூகம், பாதுகாப்பு, உளவு ஆகிய பிரச்சினைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்தி வருகிறது. இந்தப் பட்டியலில் ரஷ்யாவும் புதிதாகச் சேர்ந்துள்ளது.



ரஷ்யாவும் இந்தியாவும் 2031 வரை பரஸ்பர படைத்துறை உறவுகளை மேலும் ஆழப்படுதிக்கொள்ள ஒப்புக்கொண்டுள்ளன. இந்தியா ரஷ்ய ஆயுத அமைப்புகளை வழக்கம்போல வாங்கிவருகிறது. இதற்கு அடுத்த கட்டமாகப் பொதுவான பல ஆராய்ச்சித் திட்டங்களுக்கும் புதிய ஆயுதங்களை உருவாக்குவதற்குமான ஒப்பந்தங்களையும் இரு நாடுகளும் ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றன. இந்த ஆயுதங்களின் உற்பத்தி இரு நாடுகளிலும் சமமாக நடைபெறும். புதிய போர்க் கப்பல்கள், உலங்கு வானூர்திகள், நீர்மூழ்கிக் கப்பல்கள், கப்பல் ஏவுகணைகள், கலாஷ்னிகோவ்கள் துப்பாக்கிகள் ஆகியவை இந்த ஆயுதங்களில் அடங்கும்.

இந்தப் பரஸ்பர ஈடுபாட்டின் ஆழம், குறிப்பாக ரஷ்யாவின் மீதான இந்தியாவின் சார்பு, வியூகம் சார்ந்த கடுமையான விளைவுகளை மட்டுமின்றிப் பிராந்திய அளவில் நீண்ட கால அடிப்படையிலான விளைவுகளையும் ஏற்படுத்தக்கூடிய பெரிய இக்கட்டான நிலையையும் எடுத்துக்காட்டுகிறது. ரஷ்யாவிற்கு எதிரான உலகளாவிய பொருளாதாரத் தடைகள் ரஷ்யப் பொருளாதாரத்தையும் படைகளையும் இலக்காகக் கொண்டுள்ளன. மைக்ரோசிப்கள் அல்லது வானூர்தி உதிரிபாகங்கள் போன்ற முக்கியமான பொருள்கள் விடயத்தில் ரஷ்யா விரைவில் பற்றாக்குறையைச் சந்திக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய பாதுகாப்பு உபகரணங்களை உற்பத்தி செய்வதில் உள்ள சிக்கல்கள் ஒருபுறம் இருக்க, இருக்கும் உபகரணங்களைப் பழுதுபார்த்தல், கட்டமைத்தல், உதிரி பாகங்களைக் கையிருப்பில் வைத்திருத்தல் ஆகியவற்றிலும் ரஷ்யாவின் திறனை இந்தத் தடைகள் முடக்கிவிடும்.

சீனா போன்ற பிற நாடுகள், பன்னாட்டுத் தடைகளைத் தவிர்த்துவிட்டு ரஷ்யாவுக்கு உதவி செய்தால் தவிர தன் படைகளைக் கவனித்துக்கொள்வதில் ரஷ்யாவுக்கு ஏற்படக்கூடிய இயலாமை பல துணை விளைவுகளை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய நிலையில் இந்தியாவுடனான ஒப்பந்தக் கடமைகளை நிறைவேற்றுவது ரஷ்யாவுக்குச் சாத்தியம் இல்லை. உதிரிப் பாகங்கள் இல்லாததும் ரஷ்ய ஆயுத உபகரணங்களைப் பொறுத்தவரை இந்தியப் படைகளுக்கு நெருக்கடி ஏற்படுத்தக்கூடியது. கொள்முதல் ஒப்பந்தங்கள், பொதுவான திட்டப் பணிகள் ஆகிய அனைத்தும் ஆபத்தில் உள்ளன. இந்தியா, முன்னெப்போதையும்விட இப்போது ரஷ்யாவின் நல்லெண்ணத்தை நம்பியுள்ளது.

**அரசியல் நகர்வுகள்**

போர்ப் படைச் சார்புக்கு அடுத்தபடியாக, பொருளாதார, அரசியல் துறை சார்ந்த காரணிகளும் இந்தியாவின் வாக்களிப்பில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவையாக உள்ளன. உலகளாவிய பொருளாதாரத் தடைகள் ஏற்கனவே எரிபொருள், எரிவாயு விலை பெருமளவில் உயர வழிவகுத்துள்ளன. இந்தியா இவற்றில் 80% வரை இறக்குமதியை நம்பியுள்ளது. எனவே, இத்தகைய அத்தியாவசியமான பொருள்களை இறக்குமதி செய்ய இந்தியா கூடுதலாகச் செலவு செய்யவேண்டியிருக்கும்.

ரஷ்ய உபகரணங்களுக்குப் பதிலாகப் பிற நாடுகளிலிருந்து படைத்துறை உபகரணங்களை இறக்குமதி செய்வதும் இந்தியாவின் செலவைக் கணிசமாக அதிகரிக்கச்செய்துவிடும். இவை அனைத்தும் சேர்ந்து, ஏற்கெனவே கொவிட்-19 பெருந்தொற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள இந்தியப் பொருளாதாரத்தை மேலும் கடுமையாகப் பாதிக்கின்றன.

அரசியல் ரீதியாக, சீனா-பாகிஸ்தான் கூட்டணியின் காரணமாகத் தெற்காசியாவில் இந்திய மேலாதிக்கம் குறிப்பிடத்தக்க அளவில் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. இந்தியாவின் பார்வையில் இந்தக் கூட்டணி ஏற்கனவே மிகவும் கொந்தளிப்பான நிலையில் உள்ள இந்திய-பாகிஸ்தான் உறவுக்குத் தீவிரமான அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. போதாக்குறைக்கு, 2020, மே மாதத்தில் இமயமலை எல்லைப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சீன உள்கட்டமைப்புத் திட்டங்கள் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் மோதலை ஏற்படுத்தி இரு தரப்பிலும் படை வீரர்கள் கொல்லப்பட்டதற்குக் காரணமாக அமைந்தன.

இது இந்திய-சீன உறவை மிகவும் மோசமான நிலைக்குக் கொண்டுசென்றது. அது மட்டுமல்ல. தென் சீனக்

கடல் மீது சீனா முன்வைக்கும் உரிமைகோரல்களை இந்தியா திட்டவட்டமாக மறுக்கிறது. இலங்கை, மாலத்தீவுகள், குறிப்பாக பாகிஸ்தான் ஆகிய நாடுகளை நோக்கிய சீனாவின் நகர்வுகள் சீனாவின் மீதான இந்தியாவின் அதிருப்தியை அதிகரிக்கச் செய்திருக்கின் றன. சீனா இந்தியாவைச் சுற்றி வளைக்கும் கொள்கை யைப் பின்பற்றுவதாக இந் தியா கூறுகிறது.

இந்தியா தான் சுதந்திரம் பெற்ற 75ஆவது ஆண்டில், உக்ரைனுக்கு வாய்மொழி ஆதரவை அளிக்கும் அதே வேளையில், ரஷ்யாவை அந் நியப்படுத்திக் கொள்ளாமல் இருக்கும் யதார்த்த அரசிய லைப் பின்பற்றுகிறது. இதன் முரண்பாடான விளைவாக, ரஷ்யா இப்போது அதிக தள்ளுபடியில் எண்ணெய், எரிவாயு ஆகியவற்றை இந்தி யாவுக்கு வழங்கியுள்ளதுடன் அதிக முதலீடுகளையும் மேற்கொண்டுள்ளது.

இதை முறியடிப்பதற்கான மூலோபாயமாக இந்தியாவு டனான தனது படைத்துறை உறவை மேம்படுத்திக்கொள்ள பிரிட்டன் பரிந்துரைத்துள்ளது. பிரிட்டனில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களை வழங்கவும் அது முன்வந்திருக்கிறது.

இந்திய அரசியல் கட்ட மைப்பைப் பொறுத்தவரை படைத்துறை ரீதியாகவோ வர்த்தக ரீதியாகவோ ரஷ்ய ஆதரவைக் கைவிட முடியாது. ரஷ்யா மலிவான விலையில் இந்தியாவுக்கு எண்ணெய், எரிவாயுவைத் தருகிறது. எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, தேசியப் பாதுகாப்பை உறுதி செய்வதுடன், எல்லைகளைத் தாண்டியும் இந்தியாவின் செல்வாக்கையும் அதிகாரத் தையும் முன்னிறுத்த வேண் டிய தேவை இந்தியப் படைக ளுக்கு இருக்கிறது.

எனவேதான் இந்தப் போர் நியாயமற்றது என்றாலும்கூட இந்தியா ரஷ்யாவை வெளிப் படையாகக் கண்டிக்கவோ அதற்கெதிராகக் குரல்கொடுக் கவோ மறுக்கின்றது.

# இணையத்திற்கும் தாவிய திகில்!



புத்தாயிரத்தின் இளம் தலைமுறை, பழியாகக் கிடக்கும் சைபர் உலகின் பின்னணியில் ஓர் அமானுஷ்ய வலைத்தொடரை வடித்ததில் ஓடிடி ரசிகர்களை திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது ‘ஆன்யா’ஸ் டுடோரியல்’.

தாய், தமக்கையுடன் ஏற்படும் பிணக்கு காரணமாகத் தனிக்குடித்தனம் செல்கி றாள் லாவண்யா. ஆளரவமற்ற பகுதியில், துக்க வரலாறு கொண்ட வீட்டில் தனி யாகத் தங்குகிறாள்.

சமூக வலைத்தளத்தில் தன்னைப் பின்தொடர்வோரின் எண்ணிக்கையை அதி கரிப்பதன் மூலமாகக் கிடைக்கும் ஒப்பனைக் கலை சார்ந்த விளம்பர வருவாயை நம்பியிருக்கிறாள். ஆனால் ‘ஆன்யா’ஸ் டுடோரியல்’ என்கிற லாவண்யாவின் சமூக ஊடகப் பக்கம் சோபையிழந்திருக்கிறது.

அமானுஷ்யம் மண்டிய அந்த வீட்டின் பின்னணியைப் பயன்படுத்தி சமூக ஊடகத்தில் பின்தொடர்வோரின் எண்ணிக்கையை உயர்த்தத் திட்டமிடுகிறாள். வீட்டில் பேய் இருப்பதாய் அவள் கிளப்பிய உத்தியால் அதுவரை ஈயடித்த அவ ளது பக்கம் டிரெண்டிங்கில் முந்துகிறது.

புலி வருது, புலி வருது கதையாக உண்மையிலேயே அந்த வீட்டில் பேய் பிர வேசம் நிகழ, அந்தச் சமூக ஊடகப் பக்கத்தில் பங்கேற்போர், பார்ப்போர் என அனைவரையும் திகில் கவ்வத் தொடங்குகிறது. கூடுதல் திகிலுக்கு லாவண்யாவின் கடந்த கால வாழ்க்கையும் சகோதரியுடனான ரகசிய முரண்களும் வெளிப்படத் தொடங்குகின்றன. இவை உட்பட ஏராளமான புதிர்களைக் கிளப்புவதோடு




மு.வீரையன்

# மாசற்ற சுற்றுச்சூழல் அடிப்படை உரிமை!

அண்மையில், அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, இத்தாலி, பிரான்ஸ், கனடா, ஜப்பான் ஆகிய நாடுகள் இணைந்த ஜி7 கூட்டமைப்பின் மாநாடு ஜெர்மனியில் நடைபெற்றது. மாநாட்டில் சிறப்பு அழைப்பாளர்களாக இந்தியா, தென்னாப்பிரிக்கா, இந்தோனேசியா, ஆர்ஜென்டீனா, செனகல் ஆகிய ஐந்து நாடுகள் பங்குபெற்றன.

மாநாட்டின் ஒரு பகுதியாக 'எதிர்காலத்திற்கான சிறந்த முதலீடு பருவநிலை, எரிசக்தி, சுகாதாரம்' என்ற தலைப்பில் ஓர் அமர்வு இடம்பெற்றது. இதில் இந்திய தலைமை அமைச்சர் நரேந்திர மோடியும் கலந்துகொண்டு பேசினார்.

'சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு இந்தியா முக்கியத்துவம் அளித்து வருகிறது. சுற்றுச்சூழலைக் காப்பதற்கான இந்தியாவின் உறுதி, செயல்பாட்டிலேயே வெளிப்பட்டு வருகிறது. ஒட்டுமொத்த எரிசக்தி பயன்பாட்டில் மரபுசாரா எரிசக்தியின் பங்கு 40 விழுக்காடு இருக்க வேண்டும் என்ற இலக்கை இந்தியா ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பே எட்டியுள்ளது' என்று மோடி தம் பேச்சில் குறிப்பிட்டார்.

**ஆனால் உண்மை நிலை என்ன?**

உலகம் முழுவதும் காற்று மாசு பெரும் பிரச்னையாக உருவெடுத்து வருகிறது. காற்று மாசினால் குழந்தை முதல் முதியவர் வரை பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. உலக மக்களின் சராசரி ஆயுள் காலம் 2.2 ஆண்டுகள் வரை குறையும். தற்போது ஆண்டுக்கு 40 லட்சம் பேர் சுவாச பிரச்னையால் இறக்கின்றனர் என்று ஓர் ஆய்வு முடிவு கூறுகிறது.

உலகம் மாசுபடக் காரணம் மக்களின் சுயநலமும் பேராசையும்தான். இயற்கையுடன் இணைந்து வாழும் தன்மையை எப்போது மனிதர்கள் இழக்கத் தொடங்கினார்களோ அப்போதே அழிவும் தொடங்கிவிட்டது. 'ஒவ்வொரு மனிதனின் தேவையையும் பூர்த்தி செய்ய முடியும். ஆனால் ஒரே ஒரு மனிதனின் பேராசையைக்கூட பூர்த்தி செய்ய முடியாது' என்று கூறினார் காந்தி. மக்களின் தேவையை இயற்கையால் பூர்த்தி செய்ய முடியும் என்பதை ஒவ்வொரு மனிதனும் நினைவில் கொள்ளவேண்டும். அப்போதுதான் மனிதர்கள் தங்களை அழிவில் இருந்து காத்துக் கொள்ள முடியும்.

நகரங்களில் மட்டும்தான் காற்று மாசு அதிகரித்திருக்கிறது என்பது இல்லை. கிராமப்புறங்களிலும் காற்று மாசு அதிகரித்துள்ளது. இதற்கு முக்கியக் காரணம் காற்று மாசுபாடு பற்றிய விழிப்புணர்வு மக்களிடம் இல்லாததுதான் என்று அறிவியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

'ஆன்யா'ஸ் டுடோரியல்' வலைத்தொடரின் முதல் சீஸன் முடிந்திருக்கிறது.

திகில் சகோதரிகளாக ரெஜினா கஸாண்ட்ரா, நிவேதிதா சதீஷ் நடித்திருக்கும் இந்த வலைத் தொடரை, சௌம்யா சர்மா எழுத, பல்லவி கங்கிரெட்டி இயக்கியுள்ளார். 'பாகுபலி'யைத் தயாரித்த ஆர்கா மீடியா ஒர்க்ஸின் ஓடிடி படைப்பு என்பதால், பேய்க் கதையின் நம்பகத்தன்மைக்குத் தாராளமாக மெனக்கெட்டிருக்கிறார்கள்.

நீளமான திரியில் நிதானமாகப் பொறி வளர்க்கும் அத்தியாயங்களில் பார்வையாளர்களைக் கட்டிப்போடத் தோதாக, கலை இயக்கம், பின்னணி இசை, படத் தொகுப்பு, ஒளிப்பதிவு, ஒலி நுட்பம் எனத் தொழில்நுட்பக் குழு பின்னணியில் தீவிரமாக உழைத்திருக்கிறது. சர்வதேச அளவில் முன்னணி வகிக்கும் ஓடிடி தளங்களுடன் போட்டிபோடும் வகையிலான படைப்புகளை பிராந்திய ஓடிடி தளங்களும் வழங்க முடியும் என்கிற நம்பிக்கையை விதைக்கிறது `ஆஹா' தளம்.

ஏழு அத்தியாயங்களைக் கொண்ட முதல் சீஸன் முழுக்க வியாபித்திருக்கிறார் நிவேதிதா. அவரது அகலமானக் கண்களும் நிதானமான அசைவுகளும் மெல்லிய நடனமும் திகில் கதைக்கு நிரம்பவே உதவுகின்றன. ரெஜினாவுக்கு நடிப்பதற்கான வாய்ப்பு குறைவு என்கிறபோதும் கிடைத்த வாய்ப்பில் தன்னை நிரூபித்துள்ளார்.

முழுதாகக் கதையில் கரைவதற்கு சரிபாதி அத்தியாயங்களை நீட்டித்ததும் ஆமையாய் நகரும் சில காட்சிகளும் அலுப்பூட்டுகின்றன. அதேநேரம் சிதையும் குடும்பங்கள், கவனமிழக்கும் குழந்தை வளர்ப்பு, சமூக ஊடக அடிமைத்தனம் எனத் திகிலுக்கு நிகரான சமூக அக்கறையை வலைத் தொடர் பதிவுசெய்திருக்கிறது.

பொதுவாக ஒரு சீஸனில் முடிச்சிட்ட புதிர்களில் கணிசமானதை விடுவிப்பதோடு, புதிய பெரும் புதிரோடு அடுத்த சீஸனுக்கான எதிர்பார்ப்பை விதைப்பார்கள். ஆனால் இந்த வலைத்தொடரில் ஏராளமான கேள்விகள் விடையின்றித் தொக்கி நிற்கின்றன. இருந்தாலும் அமானுஷ்ய படைப்புகளில் வித்தியாசமான அனுபவத்தை வழங்க முயன்றிருக்கிறது `ஆன்யா'ஸ் டுடோரியல்'.

கிராமங்களில் எரிக்கப்படும் குப்பைகள், விவசாயிகள் எரிக்கும் பயிர்க் கழிவுகள், பருவநிலை மாற்றத்தால் பற்றி எரியும் காடுகள், அதிகரித்துவரும் தொழிற்சாலைகள், வாகனங்களிலிருந்து வெளிப்படும் புகை போன்றவை காற்று மாசு அதிகரிக்க முக்கிய காரணங்களாகும். 72% மாசு பெட்ரோல், டீசல் வாகனங்களில் இருந்து வெளியேற்றப்படும் புகையால் ஏற்படுகிறது.

காற்று மாசு குறைய வேண்டுமானால், மின்வாகனங்களை அதிக அளவில் பயன்படுத்துகின்ற கட்டாயம் ஏற்படுத்தப்படவேண்டும். மக்களும் பொதுப் போக்குவரத்துக்கு மாறவேண்டும். குறைந்த தொலைவு பயணங்களுக்கு மிதிவண்டிகளைப் பயன்படுத்தலாம். காற்று மாசு அதிகமாக உள்ள நகரங்களிலாவது இதனை நடைமுறைப்படுத்த வேண்டும். சீனா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் மிதிவண்டிகளுக்கென சாலைகளில் தனியான பாதையை ஏற்படுத்தியுள்ளனர்.

தொழிற்சாலைகளைக் கொண்டு வருவதில் முனைப்பு காட்டும் அரசுகள் அவற்றிலிருநது வெளிவரும் மாசினைக் கட்டுப்படுத்துவதிலும் முனைப்பாக இருக்கவேண்டும். தொழிற்சாலைகளை அடிக்கடி அதிகாரிகள் ஆய்வு செய்யவேண்டும். திடீரென காற்று மாசு அதிகரித்தால் அதற்கான காரணத்தைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தூய காற்றுக்குக் காரணமான மரங்களை அதிக அளவில் வளர்க்க வேண்டியது அவசியம். ஒவ்வொருவரும் மரம் வளர்ப்பதில் அக்கறை காட்ட வேண்டும். காற்று மாசுபாடு பற்றி பள்ளி, கல்லூரிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தவேண்டும். கதை, கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் அளித்து ஊக்கப்படுத்த வேண்டும்.

சுற்றுச்சூழலைப் பாதுகாத்திட அரசுகள் பல்வேறு திட்டங்கள் வகுத்தாலும் பொதுமக்கள் ஒத்துழைப்பு இல்லையெனில் அவை வெற்றிபெற முடியாது. அரசின் நடவடிக்கைகளுக்கு மக்களின் ஆதரவு வேண்டும். காற்று மாசு அதிகரித்துக் கொண்டே போனால் அடுத்தத் தலைமுறையினர் கடும் பாதிப்புக்கு ஆளாக நேரிடும்.


ஒரு காலத்தில் அனைத்து இடங்களிலும் குடிதண்ணீர் இலவசமாகக் கிடைத்தது. காலப்போக்கில் நகரங்களில் குடிநீரை விலை கொடுத்து வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதுவே இப்போது சுறுசுறுப்பான, சூடான வணிகமாகவும் மாறி விட்டது. என்றாலும் நல்ல குடிதண்ணீர் இன்னும் கிடைக்கவில்லை. அதன் தேவை இருந்து கொண்டே இருக்கிறது.

தற்போது கிராமங்களிலும் மக்கள் குடிதண்ணீரை விலைக்கு வாங்கும் நிலை உருவாகி வருகிறது. குடிதண்ணீரை விலை கொடுத்து வாங்கலாம். ஆனால் காற்றை விலை கொடுத்து வாங்கும் நிலை ஏற்பட்டால் நிலைமை என்ன ஆகும்? இப்போது அந்த நிலையை நோக்கித்தான் உலகம் நகர்நது கொண்டு இருக்கிறது.

காற்று மாசைப் பொறுத்தவரை அதற்கு எல்லை கிடையாது. அனைவரையும் காற்று மாசு பாதிக்கிறது. ஆனால் எல்லோருக்கும் பாதிப்பின் தாக்கம் ஒரே அளவாக இருப்பதில்லை. முதியவர்கள், இளைஞர்கள், பெண்கள், நோயாளிகள் என பல்வேறு தரப்பினருக்கும் காற்று மாசின் அளவு வெவ்வேறாக உள்ளது. காற்று மாசின் பாதிப்புகளால் உயிரை இழப்பது பெரும்பாலும் ஏழை எளிய ஒடுக்கப்பட்ட மக்களே.

உலக நாடுகளில் இருக்கும் பல நல்ல சட்டங்களை முன்மாதிரியாகக் கொண்டு இலங்கையிலும் பல சட்டங்கள் சுற்றுச்சூழல் தொடர்பில் உருவாகியுள்ளன. அவை முழுமையாகவும் முறையாகவும் நடைமுறைப்படுத்தப் படவேண்டும்.

தொழில் வளர்ச்சிக்கு இணக்கமான சூழலை உருவாக்கும் அரசு, தொழில் தொடங்குவதற்கான உரிமங்களைப் பெறுவதில் பல சலுகைகளை வழங்க முன்வருகிறது. இத்தகைய நேரங்களில் சுற்றுச் சூழல் தொடர்பான விதிகளை நடைமுறைப்படுத்துவதில் அரச நிர்வாகம் அதிக அக்கறை காட்டுவதில்லை என்பது பெரும் குறைபாடு.





65

# சிறைக்குள்...

தர்மராசா

## பிரதேசவாதம் காட்டிய பிரதம ஜெயிலர்

பூசாவிலிருந்து மட்டக்களப்புச் சிறை நோக்கிய எஸ்கொட் ஒன்றில் 11.2.2002 அன்று12 கைதிகள் கொண்டுவரப்பட்டார்கள். அதில் சேரன் என்பவரும் ஒருவர். பூசாவில் நான் தடுத்து வைக்கப் பட்டிருந்தபோது எனது அறையில் இருந்தவர். பூசா நிலமைகள் பற்றிச் சேரனூடாக மறுநாள் காலையில் அறிய முடிந்தது. அந்த எஸ்கொட் இரவு நேரம் வந்து சேர்ந்ததால் அதில் வந்தவர்களைப் புதிய மண்டபத் தின் மேற்கட்டடத்தில் தடுத்து வைத்தார்கள்.

'விசிற்' பார்ப்பதற்கான அனுமதிக்காக மட்டக்களப் புச் சிறைச்சாலைக்குச் செல்வதற்குச் சேரன் எப்போதோ எழுதிக்கொடுத்திருந்தார். அந்தச் சந் தர்ப்பம் தற்போது கைகூடியுள்ளது என்று கூறினார். அடுத்த எஸ்கொட் போவதற்கு முன் மேலும் ஒரு வாரம் மட்டக்களப்புச் சிறையில் தங்கியிருப்பது தொடர்பில் பிரதம ஜெயிலர் ஸ்கந்தராஜாவிடம் கதைப்பதற்காகப் பாபு என்கிற இன்னொரு கைதியை யும் அழைத்துக்கொண்டு போனார். "இவர் (சேரன்) யாழ்ப்பாணம் என்று தெரிந்திருந்தால் இங்கு எடுத்தி ருக்கவே மாட்டேன். மட்டக்களப்புக் கைதிகள் எவ்வ ளவோ பேர் விசிற் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைக்காமல் இருக்கிறார்கள்" என்று பிரதம ஜெயிலர் கூறியது சேரனுக்கு முகத்தில் அறைந்ததுபோலாகிவிட்டது. அவரை அங்கு அழைத்துச் சென்ற பாபுவுக்கும் ஒரு மாதிரியாகிவிட்டது.

சேரன் நீண்டகாலமாகச் சிறையில் இருந்தவர். இதுபோல் ஆயிரக்கணக்கான சம்பவங்களை அவர் சந்தித்திருக்கிறார். மட்டக்களப்புச் சிறைக்கு அவர் வந்தபோது அங்கிருந்த தீங்கியல் கைதிகள் பலர் அவரைச் சந்தித்துக் கதைத்தார்கள். சேரனுடன் கதைத்தபோது அவர்கள் கூனிக் குறுகி நிற்பதை அவ தானித்தேன். பின்னர் அதுபற்றிச் சேரன் என்னிடம் இவ்வாறு கூறினார்.

**The High Court in Sri Lanka has acquitted a former deputy defense minister on charges of murder ten Muslim youths.**



Ratwattes and their bodyguards were accused of killing opponents

# அப்பிடியும் இருக்கலாமில்லோ?



**கதிரேசன் காத்தவராயன்**

அண்டைக்கதிலை கோயிலடிக்குப் போனன். அங்கை கனகர், சம்பர், துரையர், தம்பர் எண்டு வலு சீரியசாய் கதைச்சுக்கொண்டிருந்தினம். நான் போனதையே காணாதளவுக்கு கதையின்ரை கனம் இருந்துது.

என்ன லைனுகளைப் பற்றியோ எண்டு பாத்தால் இல்லை. கொழும்புக் கதைதான். இப்ப அதுதானே பேப்பரிலையும் செய்தியளிலையும்?

'என்னப்பா துரை கொழும்பாலையோ கலைபட்டு வந்திருக்கிறாய்? கனகாலம் ஆளையே காணேல்லை?' எண்டதுக்குத்தான் நான் அங்கையிருந்ததைக் கண்டினம். 'ஓஓஓ கதிரேசண்ணையே! எப்ப வந்தனிங்கள்?' எண்டு ஆச்சரியமாக் கேட்டார் கனகர். 'அதோ! எழுவத்தாறு வருசமாச்சுது' எண்டு சிரிக்க மற்றவையும் சிரிச்சினம். 'என்னண்ணை வலு குசியா இருக்கிறியள்? என்ன விசேசம்?' எண்டார் சம்பர் ஒரு சிரிப்போடை.

'ஆர்தானப்பா இப்ப குசியாயில்லை? நாட்டு நடப்புகள் அப்பிடியாயல்லே போய்க்கொண்டிருக்கு... பழி எண்டிறது சும்மா விடுமோ?' எண்டு தம்பர் சொல்ல 'நாங்கள் உதிலை கொண்டாடுறதுக்கு என்ன கிடக்குது? இடிச்சாலென்ன மழை கொட்டினாலென்ன?...' எண்டு கனகர் சலிச்ச மாதிரி ஒரு தொனியோடை சொன்னார். 'எங்கடை வலி இப்பவெண்டாலும் விளங்கினால் அதுக்காக வேணுமெண்டால் சின்னனா சந்தோசப்படலாம்...அவ்வளவுதான்' எண்டார் துரையர்.

'உண்மைதான்.. தோளிலை தூக்கி தலையிலை வைச்சு கொண்டாடினவையே காலிலை மிதிக்கினம்...' எண்டு நான் சொல்லி முடிக்கயில்லை 'சரியாச் சொன்னியள் கதிரேசண்ணை... காலிலை மட்டுமே மிதிக்கிறாங்கள்... பெரிய வற்றை சால்வைக்கு விளக்கம் சொல்லி கும்பிட்டவை இப்ப அவற்றை உள்ளுடுப்புகளை காட்டியல்லே சிரிக்கிறாங்கள்? உப்பிடியொரு கேவலம் தேவையோ?' எண்டார் கனகர்.

'எங்களை ஊரூராய் கலைச்ச பாவமல்லோ உது... இப்ப

"இவங்கள் முன்பு பூசா, கொழும்பு, களுத்துறைச் சிறைகளில் அரசியல் கைதிகளாக இருந்தவங்கள். அங்கெல்லாம் மிகவும் திமிராக நடந்துகொள்வார்கள். பின்னர் விடுதலையாகிப் பல தீங்கியல் செயற்பாடுகளில் ஈடுபட்டுத் தீங்கியல் கைதிகளாக அடைக்கப்பட்டுள்ளனர்" என்றார்.

மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்த எனது வழக்குக்கு 12.2.2002 அன்று பிணை வழங்கப்பட்டதோடு, கண்டி நீதிமன்றில் போடப்பட்ட காலவரையறையற்ற தடுப்புக் காவல் உத்தரவும் நீக்கப்பட்டது. இதற்கான அனுமதியை மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி விஸ்வநாதன் அவர்கள் வழங்கினார். எனினும் என் மீது கொழும்பு நீதிமன்றில் வேறு வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்தன. அதனால் சிறையைவிட்டுப்போக முடியவில்லை. தொடர்ந்தும் தடுத்து வைத்திருந்தார்கள். சிறைக்குள் வந்த 2 வருட காலத்தில் எனது வழக்குகள் தொடர்பாகச் சாதகமான சூழல் ஒன்று அன்றுதான் ஏற்பட்டது.

மிக நெருக்கடியான சூழலில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்க் கைதாகியிருந்த என்னைச் சிறைக்கு வந்து பார்ப்பது என்றாலே பலருக்கும் பயமாக இருந்தது. ஆனாலும் எனது நண்பர்களுக்குள் ஒருவர் மட்டும் என்னைப் பார்க்க வந்து என்னைப் பிணையில் வெளியே எடுப்பதற்கு அரச ஊழியர்கள் இருவரையும் ஒழுங்குசெய்திருந்தார். அது அந்தச் சூழலில் சாதாரண விடயமல்ல. அவரின் உதவி என்பது எனது சிறை வாழ்க்கை பற்றிய நினைவுகளில் மறக்க முடியாதது.

எனது ஏனைய நண்பர்கள் பலரும் இது பற்றி அறியாதிருக்க அல்லது அறியாதது போல காட்டிக்கொள்ள இனியும் வாய்ப்புண்டு.

2002ஆம் ஆண்டு மாசி மாதக் காலப் பகுதியில் வெளியான பத்திரிகைகளில் 3 செய்திகள் முக்கிய இடத்தைப் பிடித்தன. விடுதலைப் புலிகள் பற்றிய செய்திகள், சினிமா, தமிழ் அரசியல் கைதிகள் பற்றியனவே அவை.

கண்டி உடற்கலவின்ன பகுதியில் முஸ்லிம் இளைஞர்கள் பத்துப்பேரைத் தேர்தல் காலத்தில் கொன்றார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் முன்னாள் பாதுகாப்புப் பிரதி அமைச்சராக இருந்த அனுருத்த ரத்வத்தை கைது செய்யப்பட்டு வெலிக்கடைச் சிறையில் அடைக்கப்பட்டார் என்று 20.2.2002அன்று செய்திகள் மூலம் அறிந்தோம். இந்தச் செய்தியைக் கேட்டு எம்முடன் இருந்த வயதான ஒருவர் இவ்வாறு கூறினார். "தன்னைக் கொல்லவந்ததாகக் குற்றம்சுமத்தி எங்கட சனத்திலை எவ்வளவுபேரைச் சிறை யில் அடைச்சிருப்பான், பிறகு என்னென்ன அநியாயங்கள் எல்லாம் செய்தான், செம் மணியில் தமிழ்ச் சனத்தைக் கொன்று புதைச்சவன், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பெருமூச்சும் கண்ணீரும் திட்டுக்களும்தான் அவனைச் சூழ்ந்துவிட்டது" என்றார். (தொடரும்)

போக்கிடமில்லாம அலையிற அளவிலை வந்து நிக்குது...' எண்டார் தம்பர். 'நாங்கள் என்ன பிளேனிலையே இடம்பேர்ந்தனாங்கள்? அதோடை எங்கை செல் விழும் எங்கை பொம்பர் அடிக்கும் எண்டு ஏங்கினபடி சாப்பாடு தண்ணியில்லாமலல்லே ஓடினனாங்கள்? அதகளிலை ஒரு தூசளவுதானும் அனுபவிச்சவங்களோ? எண்டு பொருமினார் துரையர்.

இப்ப என்னடாவெண்டா கொழும்பிலை கெலி சுத்துறதை ஒரு கதையெண்டு கதைக்கிறாங்கள்... எத்தினை விதமான பிளேனுகளைக் கண்டனாங்கள்.. ஒண்டோ ரண்டோ? ஒரே நேரத்திலை பத்துக்கும் மேலையல்லே தலைக்கு மேலாலை பறந்ததுகள்... எண்டு சிரிச்சார் சம்பர். முருகேசரும் வல்லியம்மானும் வந்தினம்.

வல்லியம்மான் இஞ்சார் உந்தப் பேக்கதையளை விடுங்கோடாப்பா... இஞ்சை பயிர் பச்சைக்கு இறைக்க மண்ணெண்ணெய் இல்லை... கொழும்பிலை என்னடாவெண்டால் பாரன் றோட்டுகளுக்கு எவ்வளவு தண்ணியை அளவுகணக்கில்லாம ஊத்தித் தள்ளுறாங்கள்? இதுகளைக் கேப்பாரில்லை -----------------------(தணிக்கைச் சொல்)' குமுறினார்.

'சனத்தைக் கலைக்க அடிக்கிற தண்ணியைச் சொல்லுறியளோ?' எண்டு தம்பர் வாயைக் குடுத்தார். 'பின்னை என்னத்தைச் சொல்லுறன் பேயா... கறன்ரை உற்பத்தி செய்யிறதுக்கு டீசலும் இல்லை தண்ணியும் இல்லையெண்டு பொறுத்த நேரங்களிலை கறன்ரை நிப்பாட்டுறாங்கள்... அங்கை பாரன் இப்ப ஒரு மாதத்தக்கு மேலையாய் எவ்வளவு தண்ணியை வீணடிக்கிறாங்களெண்டு...' எண்டு தம்பருக்கு விளக்கங் குடுத்தார் வல்லியம்மான்.

'அது மட்டுமே கொழும்பிலை இப்ப நுளம்பு, இலையான், கொசு அதுஇதுவெண்டு ஒண்டும் இல்லையாமலல்லே?'எண்டு நான் கேக்க 'ஏன் கதிரேசண்ணை? புகையடிக்கிறதைச் சொல்லுறியளோ?' எண்ட கேட்டுச் சிரிச்சார் முருகேசர். 'உண்மையாயோ?' எண்டு தம்பர் வாயைப் பிழக்க 'இஞ்சை நாங்கள் இப்ப காயளைப் பளுக்க வைக்கிறதுக்கே புகையடிக்கிறதை விட்டிட்டம்... அவங்கள் ஆக்களைப் பளுக்க வைக்கிறாங்கள்...' எண்டார் முருகேசர்.

'இஞ்சார் கதிரேசு உன்ரை நுளம்புக் கதையை கதைச்சுப் போடாதை...எங்கடை ஐயாவை இஞ்சையும் வந்து அடிச்சுவிடுங்கோ எண்டு கேட்டாலுங் கேட்டிடுவங்கள்...' எண்டபடி வல்லியம்மான் போட்டார். 'அதுசரிதான் எங்கடை ஐயாவை உதை ஆரிட்டைக் கேப்பினம்? அதுக்கு ஆளிருக்கோ?' எண்ட தம்பற்றை கேள்வி நல்ல காலமாய் வல்லியம்மானுக்குக் கேக்கேல்லை. 'இஞ்சார் தம்பு ஆரிட்டைக் கேக்கிறதெண்டதை விடு ஆர் வந்தாலும் ஏதாலும் தருவங்களெண்டு கற்பனை பண்ணாதை...அது பேருகள்தான் மாறும்... வடிவாய் யோசிச்சுப்பார் விளங்கும்'' எண்டபடி வந்திட்டன்.

# எமையறிதல்

ஐயங்கொண்டான் சுவாமிகள்

67

**வா**ழ்க்கை என்பது எதிர்பார்ப்பு. எதிர்பார்ப்பு என்பது உயிரியினது அக மற்றும் புறக் காரணிகள். ஆகமொத்தத்தில் வாழ்க்கையென்பதை அக மற்றும் புறக்காரணிகள்தான் என கூறமுடியுமல்லவா? அகக் காரணிகள் எமக்குள்ளேயே இருப்பவை. புறக்காரணிகள் என்பவை எமது உணர்வுகளால் அறியப்படுபவை. எப்படிப் பார்த்தாலும் எம்முள்தான் எல்லாமும் இருக்கின்றன என்பதை உணரமுடியும். அப்படி முடிகிறதா?எதைத்தேடுகிறோம்? வாழ்க்கையை. அது எப்படியிருக்கும்? தெரியாது. ஆக தேடியலைகிறபோது கிடைத்தாலும் இதுதான் தேடியது என எடுத்துக்கொள்ள முடியாது.

சரிவர அடையாளமிட்டுக்கொள்ள முடியாத ஒன்றாகவே எதிர்பார்ப்பு எப்போதும் இருந்துவிடுகிறது. அதுவே கூடவும் வருகிறது. எங்கே தொடங்கலாமென்பதற்கோ எங்கே எப்போது நிறுத்திவிடலாமென்பதற்கோ எல்லைகளேதுமற்ற பெருவெளியுள் அலைகிறோம் என்பதாகவே எமது செயன்முறைகளை வகைப்படுத்தவேண்டியுள்ளது. அதுதான் யதார்த்தமுமானது. நாம் அவாவுடன் அலைகிறோம். இடைநடுவே எமது எதிர்பார்ப்பு எதிர்ப்பட்டாலும் எம்மால் அடையாளம் கண்டு கையிலெடுக்க முன்பாகவே கடந்து போய்விடுகிறது.

இதற்கான சரியான காரணம் என்ன? எதைத் தேடுகிறோமோ அதற்கான தெளிவு எம்மிடம் இல்லை என்பதற்கப்பால் ஒன்றும் இல்லை. அவ்வளவுதான்.மனம் எப்போதுமே ஐயங்களுடனும் நம்பிக்கையீனங்களுடனுமே கூட்டுச்சேர்ந்து இயங்குகிறது. இங்கே நம்பிக்கை என்று பெயரிட்டுக் காவுகிற பல (அனேகமாக முழுதுமே) நம்பிக்கையீனங்களேதான் என்பதை முன்னர் பேசியிருக்கிறோமல்லவா? மீளப்பேசுதல் தேவையற்றதென்றே நம்புகிறேன்.

இங்கு 'ஐயம்' எனக்குறிப்பிட்ட விடயமானது எம்மை முழுமையாகப் பீடித்துள்ளதொரு நோய். என்மீதே எனக்கு ஐயம். நான் என்பது தொடர்பிலேயே ஐயம். எனதான இயலுமைகள் மீது ஐயம். விருப்புகள் மீது ஐயம். செயல் மீது ஐயம். ஏன் உண்ணும் உணவிலிருந்து கழிக்கும் மலம் வரை அத்தனையிலும் ஐயம்.

இங்கு ஒரு சுவாரசியம் என்னவென்றால் இந்த ஐயம்தான் எமக்கான மூல இயங்கு விசையாகவும் உள்ளது. அப்படி அது தொழிற்படுவதால் தான் நாம் இயங்கத் துணிகி





# நம்மவூர்ச் சுத்துமாத்து

சங்கரன் - நல்லூர்

# பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்ப்பதில் சுத்துமாத்து

தரம் ஒன்றில் பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்க்கும் போது பொது விதிகள் சிலவற்றை முன்வைத்துப் புள்ளிட்டு அந்தப் புள்ளிகளின் அடிப்படையிலேயே பாடசாலைகள் பிள்ளைகளை உள்வாங்குகின்றன. இதில் பாடசாலைக்கு அருகில் வசிக்கும் பிள்ளைக்கு முன்னுரிமை அளிப்பது என்பது முக்கியப்படுகிறது. அதன்படி தமக்கு அருகிலுள்ள பாடசாலைகளில் பிள்ளைகள் இணைக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. இதனால் பிள்ளையின் இருப்பிடத்திலிருந்து (முகவரி) விண்ணப்பிக்கும் பாடசாலை அமைந்துள்ள தூரம் கணிக்கப்பட்டு இருப்பிடத்திலிருந்து விண்ணப்பித்த பாடசாலைக்குச் செல்வதற்கிடையில் அமைந்துள்ள பாடசாலைகளின் தொகை கணக்கிடப்பட்டு அவற்றுக்குரிய புள்ளிகள் குறைக்கப்படுகின்றன. ஆகவே புள்ளியிழப்பு ஏற்பட்டு அருகிலுள்ள பாடசாலைகளில் இணைவதற்கு வழியேற்படுத்தப்படுகிறது. ஆனாலோ தமக்கு அருகிலுள்ள பாடசாலையை விடுத்துப் பிரபல பாடசாலைகளில் தமது பிள்ளைகளைச் சேர்ப்பதிலேயே நம்மவர்கள் பலரும் முண்டியடித்தார்கள். அத்தகைய பிரபல பாடசாலைகளுக்கே போட்டி போட்டு விண்ணப்பித்தார்கள். அதற்காகப் பல தில்லு முல்லுகளிலும் ஈடுபட்டார்கள். அது இந்த எரிபொருள் நெருக்கடிக் காலத்தில்தான் அதிகம் வெளிச்சமாகியது. அவர்கள் செய்த சுத்துமாத்துகளால் அவர்களே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அருகிலுள்ள பாடசாலைகளில் இணைத்தவர்கள் ஆறுதலாக நடந்து வந்தும், சைக்கிள்களில் வந்தும் தமது பிள்ளைகளை இறக்கிவிட்டும், ஏற்றியும் செல்லத் தொலைவிலிருந்து பிள்ளையைக் கொண்டு வந்து பாடசாலைகளில் இணைத்தோர் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மோட்டார் வாகனத்தை இயக்க முடியாமல் தமது பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டைத் தொடரமுடியாமல் அல்லல்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அருகிலுள்ள பாடசாலைகளில் இணைத்திருந்தால் மோட்டார் வாகனங்களில் தங்கியிருக்க வேண்டிய நிலை அவர்களுக்கு இருந்திருக்காது. குறைந்தது இரண்டு கிலோ மீற்றர்களுக்குள்ளேயே நகர்ப் புறங்களில் பாடசாலைகள் அமைந்திருப்பதால் நடந்தே பாடசாலைகளுக்குச் செல்லக்கூடிய வாய்ப்பிருக்கிறது. ஆனாலோ றோம். செயல்களை ஆற்றுவதற்கான உந்து சக்தியைத் திரட்டுகிறோம். செலவிடுகிறோம். எண்ணம் எனும் பொறிமுறை வேகமாகிறது. தீவிரமாகிறது. எதையும் ஐயத்துக்குட்படுத்தி வினாக்களை (எம்முள்ளாவது) எழுப்ப முடிகிறது. எதிலும் எதற்கும் ஒரு தீர்வை அடைந்துவிடவேண்டுமெனும் ஒருவித வெறி கிளர்கிறது. அவ்விதமான வெறியே எதிர்பார்ப்பாகவும் ஆகிவிடுகிறது. அதுதானே வாழ்க்கை?

ஐயம் எப்படியானது? தேவையானதா தேவையற்றதா? இங்கே நின்று நிதானித்தேயாக வேண்டியுள்ளது. காரணம் வாழ்க்கை என்கிற எதிர்பார்ப்பை உருவாக்கம் செய்வதிலுள்ள முக்கியத்துவ பாத்திரத்தைப் போலவே எதிர்பார்ப்பைச் சிதைக்கிற ஒன்றாகவும் இருந்துவருகிறது. உண்ணுகின்ற உணவை எடுத்துக்கொண்டால் அதிலுள்ள போசணை தொடர்பாக எழுகிற ஐயம் தரமான உணவுக்கான எதிர்பார்ப்பாக இருக்கும். தயாரிப்புப் பொறிமுறையிலுள்ள சுகாதாரம் பற்றிய அதீதமான எதிர்மறை ஐயம் உணவை உள்ளெடுப்பதையே தவிர்க்கச் செய்து விடுகிறதல்லவா?

ஐயம் வகிக்கிற பாத்திரமானது எம்முள்ளேயே நடக்கிற விவாதம்தான். எதிலுமே ஏற்படுகிற அதீத ஐயம் பெரும்பாலும் எதிர்மறையான விளைவுகளையே தோற்றுவிக்கிறது. இன்றைய சூழலில் ஏற்படுகிற பிறழ்செயல்களின் தோற்றுவாயாக அனேகமாக (மறை காரணியாக அல்லது வெளிப்படையாக) ஐயமே இருக்கிறது.

தன் மீதான அதீத ஐயம் என்பது இளையோரின் கற்றலைப் பாதிக்கிறது. அதுவே துர்நடத்தைகளின்பால் நாட்டங்கொள்ளத் தூண்டுகிறது. மேலும் குடும்பப் பிரிவுகளிற்குத் தூண்டுகிறது. இது தன்மீதான அல்லது தன் துணை மீதான அதீத ஐயத்தாலேயே ஏற்படுகிறது. சேர்ந்தியங்க முடியாமை என்பது தன்னில் அல்லது பிறரில் கொண்டுள்ள ஐயமேதான். இங்கே ஒரு விடயம் எப்படியிருக்கும் என்கிற அவாவும் ஒரு காரணமாகலாம். எப்படியிருக்கும் என்கிற வினா ஐயத்தினது வெளிப்பாடுதான் என்பது கவனத்திற்குரியது.

என் மீதான எனது ஐயம் பிறர் மீதான எனது ஐயம் என எல்லாமே ஒருபுறமாக இருக்க உண்மையில் ஐயம் கொண்டு தெளிவடைய வேண்டிய ஏராளம் விடயங்களைத் தவிர்த்து வருகிறோம் என்பது மறுபுறமான உண்மையாக இருக்கிறது. ஆரோக்கியமான ஐயம் என்பது அனேகமாக கவனிக்கப்படாத ஒன்றாகவே எம்முள் இருக்கிறது என்பது முக்கிய கவனத்திற்குரிய ஒன்று.

ஆரோக்கியமான ஐயம் என்றொன்று உள்ளதா? அப்படியாயின் ஆரோக்கியமான ஐயத்தை எப்படிக் கண்டுபிடிப்பது என்கிற கேள்வி எழுகிறதா? இது ஆரோக்கியமானதா? இல்லையா? இதுகூட ஒருவித ஐயம்தானே? ஐயப்படுவது சரியானதா தவறானதா? சிந்திப்போம்.

தில்லு முல்லுகளைச் செய்து தொலைதூரத்திலிருந்து பாடசாலைகளில் இணைத்தோரின் நிலை அல்லோலகல் லோலமாகியிருக்கிறது. அருகிலுள்ள பாடசாலைகளில் மாணவர்களை இணைத்தல் என்கிற பொறிமுறையின் கீழ் தமது பிள்ளைகளை இணைத்திருந்தவர்களும், அவ்வாறு இணைத்த பாடசாலைகளும் எரிபொருள் நெருக்கடிக் காலத்திலும் இயல்பாக இயங்க முடியும். அதிலும் குறிப்பாக நகர்ப்புறப் பாடசாலைகளை எரி பொருள் நெருக்கடியைக் காரணம் காட்டி மூடவேண்டிய அவசியம் இல்லை. நகரப் பாடசாலைகளின் அமை விடம் கிராமப் பாடசாலைகளைப்போல வெகு தொலை வாக இருப்பதில்லை. அருகிலுள்ள மாணவர்க ளைக் கொண்டியங்குகிறோம் என்று கூறிக்கொண்டு அவற்றில் ஏற்பட்ட தில்லுமுல்லுகளாலும் நம்மவர்களின் சுத்துமாத் துகளாலுமே இன்றைக்குப் பலரின் கற்றல் - கல்வி நிலை பாதிக்கப்பட்டிருக்கிறது. தமக்கு அருகிலுள்ள பாடசாலைகளில் பிள்ளைகளை இணைக்கவில்லை என்பதற்கு இந்த எரிபொருள் நெருக்கடிக் காலத்திலும் அருகிலுள்ள பாடசாலைகளுக்கு மோட்டார் வண்டிகளில் வந்துபோகும் பெற்றோர்கள் நல்ல எடுத்துக்காட்டு.

# நிகழ்காலத்தைத் தீர்மானித்தது யார்....?

**அபிவர்மன்**

நமது நாட்டு நிலமை பற்றி எவருக்கும் எடுத்துக்கூறத் தேவையில்லை. அனைவரும் அறிந்த வகையாக மலிந்து கிடக்கின்றன செய்திகள். பொருளாதார நெருக்கடியும் அதனால் மக்கள்படும் திண்டாட்டங்களும் ஒரு புறமிருக்க, அரசை எதிர்க்கின்ற போராட்டக்காரர்களின் செயற்பாடுக ளும் போராட்டங்களின் தீவிரங்களும் பெருமெடுப்பில் பேசப்படுபவையாக இருக்கின்றன.

அரச தலைவர், தலைமை அமைச்சர் உட்படப் பலரின் தலைமறைவு, அமைச்சர்களின் அடுத்தடுத்த பதவி துறப்பு, அலுவலகங்கள் முற்றுகை, தீக்கிரை, காவல்துறையினர், படையினரால் கட்டுப்படுத்த முடியாத மக்கள் எழுச்சி, செய்தியாளர்கள் மீதான தாக்குதல்கள், அரச தலைவரின் இல்லத்துக்குள் நுழைந்த போராட்டக் காரர்களின் செயற்பாடுகள் என ஊடகங்களிலும், சமூக வலைத்தளங்களிலுமாகச் செய்திகளும், காணொளிகளும், ஒளிப்படங்களும் கொட்டிக் கிடப்பதால் தற்போதைய சூழ்நிலை குறித்து அறியாதவர்கள் எவரும் நாட்டில் இல்லை என்றே கூறலாம்.

பொருளாதார நெருக்கடியால் பொருள்களுக்கு வரிசையிட்டு அல்லல்படும் இந்த அவல நிலைக்கெல்லாம் மூல காரணமான இந்த அரசை அமைத்தவர்கள் யார்...? இனி இந்த நிலை ஏற்படாமலிருக்க என்ன செய்யவேண்டும்...? குடிமக்கள் ஒவ்வொருவரினதும் கடமையும், பொறுப்பும் இந்த விடயத்தில் எப்படியிருக்கவேண்டும் என்றெல்லாம் சிந்திப்பதற்கும் இந்தக்காலச் சூழல் வழியமைத்திருக்கிறது. அது பற்றி எவரும் அலட்டிக்கொள்வதாகத் தெரியவில்லை.

**சிங்களவர்களின் போராட்டம் இது**

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு எதிராகப் பெருமெடுப்பில் போராடுபவர்கள் நாட்டின் பெரும்பான்மைச் சிங்கள மக்களே தவிர ஏனைய சிறுபான்மையினர் இல்லை என்பது வெளிப்படை. ஆனால் அவர்களைப் பாதித்ததுபோல இந்தப் பொருளாதார நெருக்கடி ஏனையவர் களைப் பாதிக்கவில்லை என்பதும் உண்மையே. தமிழ் மக்களின் மனங்களில் அரசுக்கு எதிரான வசைகள், கோபப் பேச்சுகள் என்ற அளவில் எதிர்ப்புணர்வுகள் இருக்கின்றனவே தவிரப் பெருமெடுப்பில் போராடும் சிந்தனையை அவை ஏற்படுத்த வில்லை.

உரிமைக்கு முக்கியத்துவம் கொடுத்து நீண்ட காலப் போருக்கு முகம் கொடுத்த இனமாதலாலும் அந்தப் போர் ஏற்படுத்திய வடுக்களில் இருந்து மீண்டு வரும் நிலையிலும், அரசை அணுகும் விதத்தில் தமிழ் மக்களின் போக்கில் இருக்கின்ற வேறுபாடுகளாலும், அவர்களின் அரசியல் பிரதிநிதிகள் மக்களை அரசியல் ரீதியாக வழிப்படுத்துவதில் காட்டுகின்ற மந்தம் காரணமாகவும், ஆட்சிமையம் (கொழும்பு) - வடக்குக் கிழக்கு என்கிற பிரதேச விரிசல் எனப் பல காரணங்கள் சிங்கள மக்களைப்போல





# ஒரு நாள் கூத்து



கணபதிப்பிள்ளை

சேரனின் இயக்கத்தில் 2019ஆம் ஆண்டில் வெளியாகிய திரைப்படம் திருமணம். கலியாணம் என்கிற சடங்கின் நிமித்தம் வீணடிக்கப்படுகின்ற செலவுகளை விமர்சிப்பதுடன் ஆடம்பரச் சடங்காகிவிட்ட அதைக் கண்டிக்கின்ற தொனியில் கதையை அமைத்துக் கொண்ட படம் அது. மண்டபச் செலவு, திருமண அழைப்புப் பத்திரிகைச் செலவு, உணவுச் செலவு, அலங்காரச் செலவு எனப் பல விடயங்களில் பணம் விரயம் செய்யப்படுதையும் மனித உழைப்பு வீணடிக்கப்படுவதையும் புட்டுப் புட்டு வைப்பார் படத்தில் சேரன்.

நம்மவர்கள் மத்தியிலும் திருமணத்தைப் பெரும் சடங்காக நடத்தி முடிக்கின்ற வழக்கம் தொடர்கிறது. பெரும் ஏற்பாடாகத் திருமணம் என்கிற நிகழ்வு அமைகிறது. பெரும் செலவுக்கும் முகம்கொடுக்கிறது. ஆனாலும் நம்மவர்கள் அவ்வாறு செய்யப் பின்னிற்பதில்லை. முற்காலங்களில் வீடுகளில் நடத்திய திருமணங்களை இப்போது மண்டபங்களில் நடத்துவது நகாரீகமாகியுள்ளது. திருமணம் என்றாலே பெரும் செலவுகளைத் தேடுவதாக இருக்க மண்டபத் திருமணம் அதை விடவும் பெரும் செலவுக்கு அத்திபாரமிட்டுவிடுகின்றன. மண்டபத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள இருக்கைகள், உணவு, ஏனைய சொகுசு வசதி வாய்ப்புகளுக்கு ஏற்ப பணம் அறவிடப்படுகிறது. அதைவிட அலங்காரச் செலவு, மேடைச் செலவு, மணகளுக்கான அலங்காரம், ஒளிப்படம் - காணொளிப் பிடிப்பு எனப் பல பெரும் செலவுகள் இருக்கின்றன.

இவ்வாறாக ஆடம்பரமாகச் செய்யப்படுகின்ற நம்மவர்களின் திருமணச் சடங்குகளில் முக்கிய பங்கு அதை முன்னின்று நடத்துகின்ற பூசகர்கள் வழிவந்தவர்களுக்கு இருக்கிறது. இந்தச் சடங்கின்போது அவர்கள் அதிகம் உழைக்கவும் செய்கிறார்கள். இது புதிதில்லை எனினும் - இது குறித்துக் காலம் காலமாகத் தெரிந்திருக்கின்ற போதும் நம்மவர்களும் அதை ஆமோதித்தே இந்தச் சடங்குகளை நடத்து

போராடுவதற்குத் தமிழ் மக்கள் தூண்டவில்லை எனலாம்.

தெற்கில் அரச தலைவரின் இல்லத்துக்குள் நுழைந்து சிங்கள மக்கள் குரல் எழுப்பியிருக்க, அதே அரசில் அங்கம் வகிக்கின்ற வடக்கிலுள்ள அரசியல் பிரதிநிதிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கக்கூட இந்தப் பொருளாதார நெருக்கடி தமிழர்களைத் தூண்டவில்லை என்பதும் அனைவரும் அறிந்ததே.

**உங்கள் வாக்கு நாட்டின் எதிர்காலம்**

இன்றைய இந்த அரசியல் நெருக்கடி, பொருளாதார நெருக்கடிகளால் பாதிப்புகள் பலவற்றுக்கும் முகம்கொடுப்பவர்களும், அதை எதிர்த்துப் போராடுபவர்களும் பெரும்பான்மைச் சிங்களவர்களாக இருந்தாலும் இந்த நிலமைக்கு மூல காரணமும் அவர்கள்தான். உங்கள் வாக்கு நாட்டின் எதிர்காலம் என்கிற இலங்கைத் தேர்தல் ஆணைக்குழுவின் வாக்கைப் போல இந்த நிகழ்காலத்தைத் தீர்மானித்திருப்பதும் அதுதான். அதில் முக்கிய பங்கெடுத்தவர்கள் சிங்கள மக்கள் மாத்திரமே. இலங்கை அரசியல் வரலாற்றில் என்றுமில்லாத அளவுக்கு - அதுவும் புத்தம் புதிய கட்சி ஒன்றுக்குச் சிங்கள மக்கள் மாத்திரம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை - அளவுக்கு அதிகமாகத் தமது ஆதரவை வழங்கி ஆட்சிப்பீடம் ஏற்றினார்கள். அவர்களின் அந்தத் தெரிவே - அன்றைய செயற்பாடே தற்போதைய நிலைக்குக் காரணமன்றி வேறல்ல.

தமது தலையில் தாமே மண்ணை அள்ளிப்போட்ட செயலையே அன்றைக்கு வரலாற்றுச் சாதனையாகப் பேசியிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளச் சில காலம் எடுத்திருக்கிறது. சிங்கள மக்கள் மாத்திரமன்றி ஜனநாயக அரசியலை ஆதரிக்கும் அனைவரும் தமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும்போது இனியாவது அதிகம் சிந்தித்துச் செயற்படவேண்டும். இன்றைய நிகழ்காலத்தைத் தீர்மானித்தது நீங்கள்தான் என்கிற படிப்பினையை மனங்கொள்ள மறக்கக் கூடாது.

கின்றனர்.

**திருமண சேவைகள்**


முன்பெல்லாம் திருமணம் பெரும்பாலும் வீடுகளிலேயே நடந்தேறியது. மணப்பந்தல் சேவை என்று ஊர்களில் தனியாகப் பந்தல் சேவை இருந்தது. சமையல் பாத்திரங்களை வாடகைக்கு விடுபவர்கள் இருந்தார்கள். ஊரவர்கள், உறவினர்கள் கூடி அதிகாலையிலேயே சமையல் செய்து முடித்துப் பின்னர் சடங்கை நடத்தும் பழக்கமிருந்தது. இப்போது இவையனைத்தும் மண்டபத்துக்குள் குறுக்கப் பட்டுவிட்டன. படப்பிடிப்பாளர், காணொளிப் பதிவு என்பவற்றைச் செய்வதற்குப் பிரத்தியோகத் தொழிலாளர்கள் இருந்தார்கள். இப்போது அந்தக் கருவிகளை வைத்திருக்கின்ற - அதை இயக்கத் தெரிந்த பலரும் அதில் ஈடுபடுகின்றனர். மணமகள் அலங்காரம் என்பது பெரும் தொழில் துறையாகியுள்ளது. அதைவிட மேடை அலங்காரம் தனியான செலவாக இருக்கிறது. தனித்தனியாக தொடக்கத்தில் இருந்த இந்தச் சேவைகள் எல்லாம் இப்போது ஒன்றோடொன்று பிணைந்தவையாக இருக்கின்றன. மணமகள் அலங்காரத் தரப்பு, ஒளிப்படப் பிடிப்பாளர், மேடை அலங்காரத் தரப்பு, மண்டபத்தினர் என இதில் யாராவது ஒருவரை நாடினால் அவர் தமக்கு இசைவான ஏனைய தரப்பினரை இனங்காட்டுவார்கள். அதற்காகப் பேரம் பேசல்களை நடத்தித் தாமே அவற்றை ஒழுங்கமைத்துக் கொடுக்கின்ற நிலையும் உண்டு.

இவ்வாறு ஒழுங்கமைத்துப் பணம் உழைத்துப் பழக்கப்பட்டவர்கள் பிற்காலங்களில் தாமே மேற்படிச் சேவைகளைச் செய்வோராக மாறிய சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. எது எப்படியோ இந்த ஒரு நாள் கூத்தில் எவ்வளவுக்கு உழைத்துக்கொள்ள முடியுமோ அவ்வளவுக்கு உழைத்துக் கொள்வதே இவற்றின் முக்கிய நோக்கமாக இருக்கிறது.

**திருமணச் சடங்கில் பூசகர்கள்**

தற்போது பெரும்பாலான இந்துத் திருமணங்கள் மண்டபங்களில்தான் நடக்கின்றன. திருமணத்துக்கான சடங்குகள், பூசைகளை எந்தப் பூசகரைக் கொண்டு செய்வது என்பதை மணமகன் அல்லது பெண் வீட்டார் தெரிவு செய்கின்றனர். மணமகனும் மணமகளும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்களாக இருந்தால் இருசாரரின் தெரிவும் தமது ஊர் சார்ந்த ஒரு பூசகராக இருக்கிறது. இல்லாவிடில் பூசகர் தெரிவு குறித்துக் கதைத்துப்பேசித் தீர்மானம் எடுக்கிறார்கள். அவர்கள் தெரிவு செய்கின்ற அந்தப் பூசகர் இப்போது பூசைகள், சடங்குகளை மாத்திரம் செய்பவராக இருப்பதில்லை. திருமணச் சடங்குக்குத் தேவைப்படுகின்ற மேளம், மாலை, ஏனைய சில தேவைகளை ஒருங்கிணைத்துக் கொடுப்பவராகவும் அவர் இருக்கிறார்.

அவற்றை ஒழுங்கமைத்துக் கொடுப்பதற்காகப் பேரம் பேசி ரொக்கமாகத் தொகை ஒன்றைப் பேசி அதற்கு முற்பணமும் பெற்றுக்கொள்வது தற்காலத்தில் நடைமுறையாகிவிட்டது. அத்தோடு திருமணச் சடங்கின் போது தட்சணை, பல தடவைகள் வெற்றிலையை நீட்டி அதில் பணம் வைக்கச் செய்வார்.



திருமணம் முடிந்ததும் திருமணத்தை நிறைவேற்றிய பூசகர் தனக்குத் தெரிந்த சகாக்களைத் தொலைபேசி வழியாக அழைப்பார். அவர்களில் சிலர் தமது மனைவியையும் அழைத்து வந்து மண மக்களை வாழ்த்தி விட்டுப் பணம் பெற்றுச் செல்வார்கள். திருமண நிகழ்வில் எதைக் கேட்டாலும் மறுக்க மாட்டார்கள் என்ற பலவீனத்தைப் பயன்படுத்தி இது மேற்கொள்ளப்படுகிறது. அதே வேளை திருமணச் சடங்கை நடத்திய பூசகருக்கும் அவருடைய உதவியாளர்களுக்கும் பணம் கொடுத்துத் திருப்திப்படுத்துகிறார்கள் திருமண வீட்டார்.

**திருமணம் முடிந்ததும் திருமணத்தை நிறைவேற்றிய பூசகர் தனக்குத் தெரிந்த சகாக்களைத் தொலைபேசி வழியாக அழைப்பார். அவர்களில் சிலர் தமது மனைவியையும் அழைத்து வந்து மண மக்களை வாழ்த்தி விட்டுப் பணம் பெற்றுச் செல்வார்கள். திருமண நிகழ்வில் எதைக் கேட்டாலும் மறுக்க மாட்டார்கள் என்ற பலவீனத்தைப் பயன்படுத்தி இது மேற்கொள்ளப்படுகிறது**

இவ்வாறாகப் பெரும் எடுப்பில் நடத்தப்படுகின்ற திருமணங்கள் பிற்காலத்தில் மணமுறிவுகளுக்கும், பிரிவுகளுக்கும், கணவன் அல்லது மனைவி இறப்புக்கும், குடும்பத் தகராறுகளுக்கும், பிள்ளைப்பாக்கியமற்ற நிலைக்கும், அவ்வாறில்லாமல் இவற்றுக்கெல்லாம் மாறான நல்ல நிலைகளிலும்கூடக் காணப்படுகின்றன. இதனால் இந்தச் சடங்குக்கும் பிற்கால வாழ்வுக்கும் எவ்வித நன்மைகளோ - தீமைகளோ தொடர்போ இல்லையென்று தெரிந்தும் ஒருநாள் கூத்தாக வீண்செலவாக நடந்தேறுகிறது இந்தத் திருமணச் சடங்கு.

■



# பிரிட்டிஷாரிடமிருந்து இலங்கை அரசியல்வாதிகள் கற்க வேண்டிய பாடம்

**ராம் குகா**

அமெரிக்க அதிபராக, அனைவரும் வியக்கத்தக்க வகையில் டொனால்ட் ட்ரம்ப் தேர்ந்தெடுக்கப் பட்ட பிறகு - 'மக்களாட்சி எப்படி இறக்கிறது?' என்ற தலைப்பில் ஒரு புத்தகத்தை ஹார்வர்ட் பல்கலைக்கழகப் பேராசிரி யர்கள் இருவர் 2018இல் எழுதினர். பழமையான, நன்கு வேரூன்றிய மக்களாட்சிகள்கூட தங்களுடைய அரசமைப்பு இப்படியே நீடிக்கும் எனக் கவனக்குறை வாக இருந்துவிடக்கூடாது என்று அந்தப் புத்தகத்தில் இருவரும் வலியுறுத்தியிருந்தனர். 'நாவன்மை மிக்க அரசியல் தலைவர் ஒருவர், அரசு அமைப்புகளின் மாண் பைச் சிறிதும் மதியாமல் - வாக்காளர்களின் அற்பமான உணர்வுகளைக் கிளப்பிவிட்டு (தேர்தலில் வென்று) சீரான ஜனநாயக நடைமுறைகளையே சீர்குலைத்துவிடமுடியும்' என்று அவர்கள் எச்சரித்திருந்தனர். அதுதான் 2019இல் ராஜபக்சக்களால் இலங்கையிலும் நிகழ்த்தப்பட்டது.

**பிரிட்டனின் அரசியல் களம்**

பிரிட்டனில் சமீபத்தில் நடந்துள்ள அரசியல் நிகழ்வுக ளைப் பார்க்கும்போது, ஹார்வர்ட் பேராசிரியர்களின் புத்தகத்தின் தொடர்ச்சியாக, 'மக்களாட்சிகள் எப்படி தப்பிப் பிழைக்கின்றன?' என்ற தலைப்பில் புத்தகம் எழுதவேண்டும் என்று நினைக்கத் தோன்றுகிறது. பிரிட் டனில் இப்போது நடந்துவரும் அரசியல் நிகழ்வுகளையே அதற்கு ஆய்வுக் களமாக எடுத்துக்கொள்ளலாம். பிரிட் டிஷ் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் மரபிய கட்சியை (கன்சர்வேடிவ் கட்சி) அறுதிப் பெரும்பான்மை வலுவுடன் இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னால் ஆட்சி பீடத்தில் அமர்த்திய தலைமை அமைச்சர் போரிஸ் ஜோன்சன், தான் செய்த அரசியல் பாவங்களுக்காக அந்தப் பதவியிலிருந்தே விலகும்படி நேர்ந்திருக்கிறது.

பிரிட்டிஷ் நாடாளுமன்ற பொதுத் தேர்தல்களில் எப்போதுமே இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட முக்கிய கட்சிகளே போட்டியிடுகின்றன. அரச தலைவர் பதவிக்கான தேர்தலைப் போல அங்கு அபூர்வமாகத்தான் நடக்கிறது. அதாவது பிரதமர் பதவி வேட்பாளரை மைய மாக வைத்து தேர்தல் முடிவுகள் தீர்மானிக்கப்படுவது அரிது. இருப்பினும் 2019 டிசெம்பரில் நடந்த பொதுத் தேர்தலில் மரபிய கட்சியினர் போரிஸ் ஜோன்சனுக்கு இருந்த அரசி யல் கவர்ச்சி, மக்களிடையே அவர் மீதிருந்த நன்மதிப்பு ஆகியவற்றால் சிறப்பான வெற்றியைப் பெற்றனர்.

நகைச்சுவையாகப் பேசும் ஆற்றல் உள்ளவர், தலையில் முடி எப்போதும் நகைப்புக்குரிய வகையில் கலைந்திருக்கும், அவர் உடையணியும் விதமும் நறுவிசாக இல்லாமல் ஏனோ-தானோவென்றே இருக்கும். இந்தத் தனித்துவமே போரிஸ் ஜோன்சனை பிரிட்டிஷ் வாக்காளர்கள் விரும்பவும் காரணம் ஆகிவிட்டது. 1987க்குப் பிறகு மரபிய கட்சி அதிகபட்சமாக 365 இடங்களில் வென்றது. முதன்மை எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி (லேபர் கட்சி) 202 இடங்களில் மட்டுமே வென்றது. 1935க்குப் பிறகு அக் கட்சிக்குக் கிடைத்த மிகக் குறைவான இடங்கள் இவை. பிரிட்டனின் வடக்கில் எப்போதுமே தொழிலாளர் கட்சிக்கு வாக்களித்து வந்த உழைக்கும் வர்க்கமே, அந்தத் தேர்தலில் மரபியர் கட்சிக்குக் கிட்டத்தட்ட ஒட்டுமொத்தமாக ஆதரவ

ளிக்கும் அளவுக்குத் தேர்தல் முடிவுகள் தாறுமாறாக இருந்தன.

இப்படியான தேர்தல் வெற்றியானது போரிஸ் ஜோன்சனுக்கு கட்சிக்குள் அபரிமிதமான செல்வாக்கை ஏற்படுத்தியது. கட்சி சார்பில் முதல் முறையாக நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு அவர் ஒரு வழிபாட்டுத் தெய்வமாகவே காட்சியளித்தார். எந்தச் செயலுக்காகவும் அவரை விமர்சிப்பதைக்கூட அவர்கள் அனுமதிக்கவில்லை.

அமெரிக்காவில் அதிபர் டொனால்ட் ட்ரம்பின் அரசியல் பாணியும் அவருக்கு அமெரிக்கர்களிடமிருந்த செல்வாக்கும் அவருக்குக் கிடைத்த தேர்தல் வெற்றியும் போரிஸ் ஜோன்சனை வெகுவாக ஈர்த்திருந்தன. எனவே எதைச் சொல்வதாக இருந்தாலும் கட்சி அமைப்புகள் மூலமே பேசுவது என்ற பிரிட்டிஷ் வழக்கத்தையே மீறி, நேரடியாக நாட்டு மக்களிடம் பேசத் தொடங்கினார். அவருடைய அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள சகாக்களிடம் ஆலோசனை கலக்காமல், 'மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத - தனக்கு மிகவும் வேண்டப்பட்ட' சிலரிடம் மட்டுமே ஆலோசனைகளைப் பெற்றார். பிரிட்டனை மீண்டும் மிகப் பெரிய வல்லரசாக உருவாக்கப் போகிறார் எனப் பேசினார்.

இதில் 2019 பிரிட்டிஷ் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் மரபியர் கட்சிக்கு மிகப் பெரிய வெற்றியைப் பெற்றுத்தந்தபோது ஜோன்சனுக்கு வயது வெறும் 55 மட்டுமே. அமெரிக்க அதிபரானபோது ட்ரம்புக்கு இருந்த வயதைவிட 15 ஆண்டுகள் இளையவர். இலங்கை அரச தலைவராக கோட்டாபய ராஜபக்ச தெரிவானபோது அவருக்கிருந்த வயதைவிடவும் 15 வயது இளையவர். எனவே 2019இல் தலைமையமைச்சரானபோது இரண்டு அல்லது மூன்று ஐந்தாண்டுகள்கூட தொடர்ச்சியாக பிரிட்டனின் பிரதமராக இருந்துவிட முடியும் என்று போரிஸ் ஜான்சன் நினைத்திருக்கக்கூடும். வயதும் அதிகமில்லை, கட்சியிலும் மக்களிடமும் அபார செல்வாக்கு, முக்கிய எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியோ மக்களிடம் ஆதரவைத் திரட்ட முடியாமல் கடும் குழப்பத்தில் இருக்கிறது என்பதே அன்றைய நிலை.

**ஐந்தாண்டு பதவிக் காலத்தின் பாதியிலேயே, பதவியைவிட்டு விலக வேண்டிய கட்டாயம் போரிஸ் ஜோன்சனுக்கு ஏற்பட்டுவிட்டது. தன்னுடைய விருப்பத்தின்பேரில் இதை அவர் செய்யவில்லை, அவமானப்பட்டு பிறகே வெளியேறியிருக்கிறார். கோட்டாபய உட்பட ராஜபக்சக்கள் அனைவருக்கும் ஏற்பட்ட கதியே ஜோன்சனுக்கும் ஏற்பட்டது என்றாலும் ஜோன்சனின் நிலமை ஒப்பீட்டளவில் பரவலாயில்லை**



இவ்வளவு இருந்தும் தன்னுடைய முதல் ஐந்தாண்டு பதவிக் காலத்தின் பாதியிலேயே, பதவியைவிட்டு விலக வேண்டிய கட்டாயம் போரிஸ் ஜோன்சனுக்கு ஏற்பட்டுவிட்டது. தன்னுடைய விருப்பத்தின்பேரில் இதை அவர் செய்யவில்லை, அவமானப்பட்டு பிறகே வெளியேறியிருக்கிறார். கோட்டாபய உட்பட ராஜபக்சக்கள் அனைவருக்கும் ஏற்பட்ட கதியே ஜோன்சனுக்கும் ஏற்பட்டது என்றாலும் ஜோன்சனின் நிலமை ஒப்பீட்டளவில் பரவலாயில்லை என்றும் சொல்லிக் கொள்ளலாம்.

இது எப்படி நடந்தது? பிரிட்டிஷ் மக்களாட்சியில் இன்னமும் செயல்படும் நிலையில் உள்ள நிறுவனங்களால், தனது தவறுக்குப் பொறுப்பேற்று பதவி விலக வேண்டிய நிலைமை அவருக்கு ஏற்பட்டிருக்கிறது.

**ஊடகமும் மக்களாட்சியும்**

இதில் முதலில் வருவது ஊடகங்கள். அரசியலுக்கு வருவதற்கு முன்னால், ட்ரம்பைப் போலவே ஜோன்சனும் அதிக உண்மைகளைப் பேசிவிட மாட்டார். லண்டன் நகர முதல்வராக இருந்தபோது அவருடைய 'பிளக்கும் கலை' குறித்து ஊடகங்களும் மக்களும் அதிகம் கவலைப்பட்டதில்லை. வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்தபோதும் அப்படியே. தலைமை அமைச்சர் பதவியை ஏற்றவுடன் ஊடகங்கள் அவரை மிகவும் தீவிரமாகக் கண்காணிக்கத் தொடங்கின. உயிரைப் பறிக்கும் கொவிட்-19 பெருந்தொற்று பரவாமலிருக்க "பொது முடக்கத்தை மிகவும் கவனமாகப் பின்பற்றுங்கள்" என்று மக்களுக்கு அறிவுறுத்திவிட்டு, தலைமை அமைச்சருடைய அரசு இல்லத்திலேயே அந்த விதிகளை மீறியது தொலைக்காட்சிகளாலும் பத்திரிகைகளாலும் அடுத்தடுத்து ஆதாரங் களுடன் அம்பலப்படுத்தப்பட்டது.

தலைமை அமைச்சர் அலுவலக ஊழியர்களும் இதர பிரமுகர்களும் முகக் கவசம் அணியவில்லை, ஒருவரிடமிருந்து இன்னொருவர் தள்ளியும் இருக்கவில்லை, மது குடித்துக் கொண்டும் பொது முடக்கக் கட்டுப்பாடுகளைக் கேலி செய்யும் வகையிலும் களியாட்டம்போட்டது வெளியானது.

மக்களாட்சித் தன்மை குறைவாக உள்ள நாடுகளில் (நம் நாட்டைப் போல) அரச தலைவரினதும் தலைமை அமைச்சரினதும் பொய்களும் மோசடிகளும் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றால் இந்த அளவுக்கு மிகத் துல்லியமாகக்

கண்காணிக்கப்பட்டு மக்களிடம் அம்பலப்படுத்தப்படாமலேயே போகக்கூடும். பிரிட்டனிலும் தொழிலாளர் கட்சி சார்பு பத்திரிகைகள், மரபியர் கட்சி சார்பு பத்திரிகைகள் உண்டு என்றாலும், ஆட்சியாளர்களின் சொல்படி கேட்டு நடக்கும் ஊடகங்களாக அவை இல்லை.

சட்டத்தையும் ஒழுங்கையும் தலைமை அமைச்சரே எப்படி மீறினார் என்று ஊடகங்கள் ஆவணப்படுத்தி ஆதாரங்களுடன் வெளியிட்ட பிறகு, அந்த நாட்டு நாடாளுமன்றம் அதைத் தீவிரமாக ஆராயத் தொடங்கியது. சிறியதாக இருந்தாலும் பெரியதாக இருந்தாலும் எல்லாப் பிரச்சினைகளையும் பிரிட்டிஷ் நாடாளுமன்றம் தீர்க்கமாக விவாதிக்கிறது. நம் நாட்டில் முக்கியமான, ஆட்சியாளர்களுக்கு ஆதரவான அரசமைப்புத் திருத்த வரைபுகள்கூட அவசர அவசரமாக விவாதமின்றி, வாக்கெடுப்பு நடத்தி ஏற்றதாக அறிவிக்கப்படுகின்றன.

எதிர்க்கட்சிகள் கேட்கும் கேள்விகளுக்குப் தலைமை அமைச்சர் நேரடியாகப் பதில் அளிக்க வேண்டும் என்கிற பழக்கம்கூட வழக்கத்திலேயே இல்லை. ஆனால், பிரிட்டனிலோ தலைமை அமைச்சரிடம் கேள்விகள் என்ற மரபு காரணமாக, தொழிலாளர் கட்சியின் புதிய தலைவரான சர் கியர் ஸ்டார்மர், போரிஸ் ஜோன்சனை வெவ்வேறுவிதமான கேள்விகளால் துளைத்தெடுத்துவிட்டார். தன் மீதான குற்றச்சாட்டுகளுக்குத் தக்க விளக்கம் அளிக்கவும் களங்கத்தைத் துடைக்கவும் தலைமை அமைச்சருக்குப் போதிய வாய்ப்புகளும் வழங்கப்பட்டன. அவரால் போதிய அளவுக்கு, அனைவரும் ஏற்கும் வகையில் அந்த முறைகேடுகள் குறித்து விளக்கம் அளிக்க முடியவில்லை.

ஸ்டார்மர், கவர்ச்சிகரமான அரசியல் தலைவர் அல்லர் என்றாலும் அவருக்கு முன்பு எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகித்த தொழிலாளர் கட்சியின் ஜெரிமி கோர்பினை விட எடுத்துக்கொண்ட வேலையில் அதிக கவனம் செலுத்துகிறவராகவும் கடினமான உழைப்பாளியாகவும் இருக்கிறார். அரசின் கொள்கைகளை ஆராய்வதில் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார். அடுத்தடுத்து இரண்டு பொதுத் தேர்தல்களில் தொழிலாளர் கட்சி தோல்வி கண்ட பிறகு, 'சிறந்த தலைவர்', 'நல்ல பேச்சாளர்', 'மக்களைக் கவரும் ஆற்றல் உள்ளவர்' என்றாலும், ஜெரிமி கோர்பினைத் தூக்கி எறிய அந்தக் கட்சி தயங்கவில்லை.

இலங்கையின் எதிர்க் கட்சிகளில் ஒன்றாகவும் பாரம்பரியம் மிக்க தொடக்க காலக் கட்சிகளில் ஒன்றாகவும் உள்ள ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் மீண்டும் படுதோல்வியடைந்த பிறகும், ஒரேயோரு ஆசனத்தைக்கூட மக்களிடம் வென்றெடுக்க முடியாத அளவிற்குச் சரிந்து விழுந்த பிறகும் அதற்குக் காரணமாக ரணில் விக்கிரமசிங்கவையே கட்சித் தலைவராகவும் கட்சிக்குக் கிடைத்த இலவச நாடாளுமன்ற ஆசனத்தைக்கூட அவருக்கே வழங்கி அவரை இப்போது பதில் அரச தலைவராகவும் ஆக்கி வைத்திருக்கிறார்கள்.

ஆனால் பிரிட்டிஷார் அப்படியில்லை. தொழிலாளர் கட்சி தன்னை மறு ஆய்வு செய்து புதுப்பித்துக்கொள்ளத் தேவையான புதிய குருதியைப் பாய்ச்சிக்கொண்டது. கோர்பின் தொடர்ந்து தங்களுடைய கட்சித் தலைவராக இருப்பது மரபியர்களுக்குச் சாதகமாகவே இருக்கிறது என்று உணர்ந்த தொழிலாளர் கட்சியினர், தலைமைப் பதவியிலிருந்து விலகுமாறு அவரிடம் கூறிவிட்டனர்.

பிரிட்டனில் ஊடகங்களில் போரிஸ் ஜோன்சனின் முறைதவறிய நடவடிக்கைகள் குறித்து உண்மைகள் வெளியான பிறகு நாடாளுமன்றத்தில் அது குறித்து விவாதிக்கப்பட்டது. அதனால் அதிகாரப்பூர்வமாகவே விசாரணைக்கு உத்தரவிட வேண்டிய கட்டாயம் போரிஸ் ஜோன்சனுக்கு ஏற்பட்டது. விசாரணை நடத்த வேண்டிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டதும் பிரிட்டிஷ் அதிகாரிகள் - காவல்துறை முழுத் திறமையையும் நடுநிலையையும்



நேர்மையையும் காட்டி விசாரித்து அறிக்கை அளித்தனர். ஆட்சியில் இருப்பவர்களின் தவறுகளை ஆதாரப் பூர்வமாகத் திரட்டி ஆவணப்படுத்த அவர்கள் தயங்கவில்லை, தவற வில்லை.

இலங்கை நிலையுடன் இதை ஒப்பிடாமல் இருக்க முடியவில்லை. முக்கியமான சட்டத் திருத்தங்களைக் கூட நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக்களின் பரிசீலனைக்கு ராஜ பக்சக்கள் அரசு அனுமதிப்பதில்லை, இப்படி ஆட்சி மீது ஏதேனும் குறை கள் - குற்றச்சாட்டுகள் கூறப்பட்டால் அதை எங்கே விசாரணைக்கு ஏற் பார்கள்? அப்படியே தவறிப்போய் அரச தலைவர் விசாரணைக்கு உத்தரவிட்டு விட்டாலும் உயர் அதிகாரிகள் தங்களு டைய கூச்சம் அல்லது கோழைத்தனம் காரணமாக உண்மைகள் வெளிவரும் வகையில் தீர்க்கமாக விசாரித்து விட மாட்டார்கள், தாங்கள் இப்போது பார்த்துவரும் வேலைக்கும் எதிர் காலத்தில் கிடைக்கக்கூடிய பதவி உயர்வு - நீட்டிப்புகளுக்கும் ஆபத்து வராமல் பார்த்துக்கொண்டுவிடு வார்கள். ஆட்சியிலிருப்பவர்களுக்குத் தங்களுடைய விசுவாசத்தை வெளிக் காட்டுவதன் மூலம் மக்களாட்சித் தத்து வத்தையே கேலிக்குள்ளாகு வார்கள். அரச தலைவர் மீதோ தலைமை அமைச்சர் மீதோ துளியளவும் களங் கத்தின் சாயல் படிந்துவிடாமல் காப்பாற்றிவிடுவார்கள்.

செல்வாக்கை இழந்த ஜோன்சன்

பிரிட்டனில் இந்த விசாரணைகள் நடந்தபோதும், நாடாளுமன்றத்திலும் ஊடகங்களிலும் விவாதங்கள் வளர்ந்த போதும், மக்களாட்சி நடைமுறைகளை யெல்லாம் காற்றில் பறக்கவிடும் வகையில் - தன்னை உலக ராஜதந்திரி யாக காட்டிக்கொண்டு உலக அரங்கில் பிரிட்டனுக்குப் பெரிய புகழை ஏற்ப டுத்திக் கொடுப்பதைப்போல பாவனை செய்தார் போரிஸ் ஜோன்சன். ரஷ்யாவால் போர் தொடுக்கப்பட்டுள்ள உக்ரைன் நாட்டின் கிவிவ் நகருக்குச் சென்று அந்நாட்டு மக்களுக்கு பிரிட் டிஷ் மக்களும் அரசும் ஆதரவாக இருக்கிறார்கள் என்று கூறினார்.

போரிஸ் ஜோன்சன் என்னுடைய சிறப்பு நண்பர் என்று கூறிய இந்தியப் பிரதமரைச் சந்தித்து, இரு நாடுகளுக் கும் இடையில் வர்த்தக உறவை உன்னதமாக்கப் போகிறார் என்று சூளுரைத்தார்.

இப்படியெல்லாம் உலக அரங்கில் நடந்துகொண்டு கட்சிக்குள் சரிந்து வரும் தனது செல்வாக்கைத் தூக்கி நிறுத்த முயன்றார். ஆனால், அது இயலாத காரியமாகிவிட்டது. தங்களை 2019 பொதுத் தேர்தலில் மகத்தான வெற்றி மூலம் ஆட்சிபீடத்துக்குக் கொண்டு வந்திருந்தாலும் மோசடியான செயல்களில் ஈடுபட்டதை ஊடகங்கள் ஆவணங்களாகப் பதிவுசெய்ததையும், நாடாளுமன்றத்தில் வெளிச்சம்போட் டுக் காட்டியதையும், நடுநிலையான காவல்துறை - சிவில் சேவை அதிகார வர்க்கம் சான்றுரைத்ததையும் பார்த்த ஆளும் மரபியர் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறிது சிறிதாக விலகி னர்.

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பி னர்களிடையே அவருக்குள்ள ஆதர வைத் தெரிந்துகொள்ள வாக்கெடுப்பு கூட நடத்தப்பட்டது. அதில் பெரும் பாலானவர்கள் அவரை ஆதரிக்கவே செய்தனர். ஆனால், அந்த வெற்றி அவருக்கு அங்கீகாரத்தைத் தர வில்லை. இந்த அறிகுறிகளையெல்லாம் பார்த்த பிரிட்டிஷ் அமைச்சர்கள் ஒவ்வொருவராகத் தங்களுடைய பதவி விலகல் கடிதங்களை அளித்த னர். இறுதியாக, தான் விரும்பாவிட் டாலும் பதவியிலிருந்து விலகுவதாக

**பிரிட்டிஷ்காரரர்கள் எப்போதுமே நாயக பிம்ப ஆராதனையில் ஈடுபடுகிறவர்கள் அல்லர். இரண்டாவது உலகப் போரில் நாஜிகளைத் தோற்கடிக்க வைத்த அஞ்சா நெஞ்சன் வின்ஸ்டன் சர்ச்சிலையே அடுத்த தேர்தலில் வீட்டுக்கு அனுப்பியவர்கள் பிரிட்டிஷ்காரர்கள்.**

அறிவிக்க வேண்டிய நிலைக்கு போரிஸ் ஜோன்சன் தள்ளப்பட்டார்.

பிரிட்டிஷாரின் மக்களாட்சி மாண்பு

அமெரிக்க குடியரசுக் கட்சியின் டொனால்ட் ட்ரம்பைப் போல, இந்திய பாரதிய ஜனதாவின் மோடியைப் போல, இலங்கையின் பொது ஜன பெருமுன விற்குள் ராஜபக்சக்கள் போல மரபியர் கட்சிக்குள் தனக் கென்று தனிப்பட்ட செல்வாக்கை உருவாக்க முயன்றார் போரிஸ் ஜோன்சன். அவர்களைப் போல அதில் வெற்றி காணாமல் தோற்றுவிட் டார். இதற்கு முக்கிய காரணம் பிரிட்டிஷ்காரரர்கள் எப்போதுமே நாயக பிம்ப ஆராதனையில் ஈடுபடு கிறவர்கள் அல்லர். இரண்டாவது உலகப் போரில் நாஜிகளைத் தோற்க டிக்க வைத்த அஞ்சா நெஞ்சன் வின்ஸ் டன் சர்ச்சிலையே அடுத்த தேர்தலில் வீட்டுக்கு அனுப்பியவர்கள் பிரிட்டிஷ் காரர்கள். மோசடியில் ஈடுபட்டதால் தங்கள் கட்சிக்குத் தலைமை வகிக் கவோ, நாட்டுக்குப் தலைமை அமைச் சராக இருக்கவோ தகுதியற்றவர் போரிஸ் ஜோன்சன் என்று மரபிக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முடிவுசெய்துவிட்டனர்.

இத்துடன் இலங்கை நிலையை ஒப்பிட்டால் மனச்சோர்வுதான் ஏற் படும். 150க்கும் மேற்பட்ட நாடாளு மன்ற உறுப்பினர்களின் ஆதரவு ராஜ பக்சக்களுக்கு இருந்தாலும் கோட்டா பயவின் நடவடிக்கைகள் குறித்து முன் கூட்டியே கேள்வி கேட்கும் துணிச்சல் யாருக்கும் இருந்ததில்லை. எல்லாமும் முற்றிய பிறகு, தங்கள் அரசியலைக் காத்துக்கொள்ள அவர்கள் செத்த நாயிலிருந்து கழன்றோடும் உண்ணிக ளைப்போல விலகி ஓடினார்களேயொ ழிய, உரிய தருணத்தில் தமது கண் டனங்களை வெளிப்படுத்தவோ உண்மையை மக்களிடம் கொண்டு சேர்க்கவோ முன்வரவில்லை; அதற் கான துணிச்சலும் அவர்களுக்கு இருக்கவில்லை.

இராசயன உரம் மீதான முழுமை யான தடை, கோவிட் பெருந்தொற்றின் இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டத்தில் பொது முடக்கத்தை உரிய காலத்தில் அறிவிக்கத் தவறியது, டொலர் பெறுமதியை மிதக்கவிட மறுத்தது, பணத்தை தொடர்ந்து அச் சிட்டது, அதிகாரத்தை ராஜபக்சக்கள் தங்கள் கைகளில் குவிக்கும் வகையி லான 20ஆவது திருத்தம், நெருக்கடி நிலையிலும் பன்னாட்டு நாணய நிதி யத்திடம் உரிய தருணத்தில் பேசுக் களை நடத்த மறுத்தமை என்று எந்த வொருவிடயத்திலும் உடனுக்குடன் உரிய தருணத்தில் தமது கண்டனங் களைப் பதிவு செய்யவும் தவறாகச் செல்லும் அரச தலைவரை வழிப்படுத் தவும் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் துணியவில்லை. அதேசமயம், மக்களிடையே அவ ரைப் புகழ்ந்து துதி பாட தங்களுக்குள் போட்டியிட்டார்கள்.

இப்போது இத்தனைக்குப் பிறகும், மக்கள் எழுச்சிக்கும் போராட்டத்திற்குப் பிறகும் ராஜபக்சக்களைக் காப்பற்றத் தான் இங்கே தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் பல நாடாளு

# வாரம் ஒரு சொல்....!

02

செம்மண் பத்திரிகை தனது 2ஆவது ஆண்டை நிறைவு செய்கிறது. இத்தருணத்தில் யாழ்ப்பாண மக்கள் மத்தியில் பேசப்படுகின்ற பேச்சு வழக்குத் தமிழ்ச் சொற்கள் பல வற்றை அறிமுகப்படுத்த முயற்சிக்கிறது. இத்தகைய சொற் களை முதியவர்களும் கிராமங்களில் வாழும் பூர்வீகத்தினர் சிலருமே இன்றைக்கும் பயன்படுத்தி வருகின்றனர். பிரதேச வாரியாகவும் தொழில் ரீதியாகவும் பண்பாட்டு விழுமியங்களின் வழியாகவும் பேசப்படுபவையாக இவை இருக்கின்றன.

பேச்சு மொழியில் இருந்து வருகின்ற இத்தகைய யாழ்ப்பாணத் தமிழ்ச் சொற் கள் பலவும் தற்போது அருகி வருகின்றன. அதற்குப் பதிலாக ஆங்கிலச் சொற் களும் இந்தியப் பேச்சு மொழிச் சொற்களும் பேசப்படுவது அதிகரித்து வருகிறது. ஆனாலும் யாழ்ப்பாணப் பாரம்பரியப் பேச்சு மொழிச் சொற்களை அழியவிடாது பாதுகாப்பதற்காகவும், நினைவு படுத்துவதற்காகவும் வாரம் ஒரு சொல் என்ற அடிப்படையில் அவற்றை வெளிக்கொணர இருக்கிறோம்.

இவ்வாறான அருகிவரும் சொற்களைச் செம்மண் பத்திரிகைக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வசிக்கின்ற நீங்களும் அனுப்பி வைக்கலாம். அதற்கான விளக்கத்தையும் - அது எடுத்தியம்பும் கருத்தையும் விரிவாகக் குறிப்பிடலாம். அவ்வாறு அனுப்புவதன் மூலம் எதிர்காலத்தில் இந்தச் சொல்வளத்துக்கான ஓர் அகராதியைத் தயாரித்து அந்தப் பாரம்பரியச் சொற்களைப் பேணவும் தமிழ் மக்களின் பூர்வீகத்தை உறுதிப்படுத்தவும் அடுத்த சந்ததியினருக்குக் கடத்தவும் முடியும்.

இந்தச் சொற்களை அறிமுகப்படுத்துபவர்கள் அந்தச் சொல் எந்த அர்த்தத்தில் பேசப்படுகிறது என்ற கருத்தை முழுமையாகத் தருவதுடன் அது பெயர்ச் சொல்லாகவா அல்லது வினைச்சொல்லாகவா அல்லது எவ்வகைச் சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதையும் குறிப்பிடுவது சிறந்தது - வரவேற்கத்தக்கது. அத்தோடு யாழ்ப்பாணத்தவர்களின் பேச்சு வழக்கிலுள்ள தமிழ்ச் சொற்களை மட்டுமல்லாது மட்டக்களப்பு, வன்னித் தமிழ்ச் சொற்களையும் இந்தப் பகுதியில் குறிப்பிடலாம். அந்தச் சொற்களையும் செம்மண்ணுக்கு அனுப்பி வையுங்கள். இது அருகிவரும் ஈழத் தமிழைக் காக்கும் ஒரு சிறு முயற்சியே.

இவ்வாரச் சொல் **"உலுப்புதல்"**

கிராமங்களில் அதிகம் புழக்கத்தில் இருக்கின்ற இந்தச் சொல் வளர்ச்சியடைந்த நகர மக்களும் உச்சரிக்கும் வகையிலும் இருப்பது சிறப்பு.

"நாவல் மரத்திலிருந்த சிறுவன் அதைப் பிடித்து உலுப்பியதும் கிளையிலிருந்த பழங்கள் மணலில் விழுந்தன. அதை எடுத்த ஔவைப் பாட்டி ஒவ்வொன்றாக ஊதினார். என்ன பாட்டி பழம் சுடுகிறதா? என்று கேட்டான் மரத்திலிருந்த சிறுவன்"

சுட்டபழம் வேணுமா? சுடாத பழம் வேணுமா? என்கிற ஔவை - முருகன் கதையில் வருகிற மரத்தைப் பிடித்து உலுப்புதல் என்கிற சொல்லாடல் கிராமங் களில் பழ மரங்களில் ஏறிப் பழங்கள் பறிக்கும் சிறுவர் வர்க்கத்தினர் மத்தியில் இப்போதும் பிரபலம்தான்.

நாவல், புளி, மாங்காய், வேம்பு எனப் பழங்கள் பறிக்கும் சிறுவர்கள் "நல்லாய் உலுப்படா நல்லாய் உலுப்படா... இந்தக் கொப்பைப் பிடிச்சு உலுப்பு அதிலைதான் நிறையப் பழம் கிடக்கு" என்றெல்லாம் பேசுவது சர்வ சாதாரணம். இதைப்போல இந்தச் சொல் பெயர்ச் சொல்லாக "முருங்கை என்ன உலுப்பு உலுப்பியிருக்கெண்டு பார்" என்பர். வினைச்சொல்லாக, 'மலேரியாக் காய்ச்சல் ஓர் உலுப்பு உலுப்பிப் போட்டுது, கொரோனா வந்து உலகத்தையே உலுப்பிப்போட்டுது, கண்டபடி உலுப் பாதே பிஞ்சுகள் எல்லாம் கொட்டுண்டுபோடும், கள்ளனைப் பிடித்து உலுப்பின உலுப்பில எல்லாத்தையும் சொல்லிப்போட்டான். அவன் கலையாடி என்னைப் பிடித்து ஓர் உலுப்பு உலுப்பிப்போட்டான்" என்றெல்லாம் புழக்கத்திலுள்ளது.

மன்ற உறுப்பினர்களும் துடிக்கிறார்களே தவிர மக்களாட்சியைப் பாதுகாக்கும் வகையில் உண்மையாக நடந்து கொள்ள அவர்கள் தயாராக இல்லை. போதாக் குறைக்கு மக்களின் கடுமை யான எதிர்ப்பிற்குப் பிறகும் அதிகாரத்தில் தொங் கிக் கொண்டிருப்பதிலும் குறியாக இருக்கிறார்கள்.

அதிகாரமிக்க பதவியிலி ருந்து போரிஸ் ஜோன்சனைத் தூக்கி எறிந்தி ருப்பதில் பிரிட் டிஷ் மக்களின் அமைப்பின் நிறுவனங்களுக்கு மிகப் பெரிய பங்கிருக்கிறது. அது குறித்து அவை பெருமைப்ப டலாம். எப்படிச் செயல்பட வேண்டுமோ அப்படி அவை யவை செயல்பட்டன. ஊட கங்கள், நாடாளுமன்றம், அரசு உயர் நிர்வாக அதிகாரி கள் - காவல் துறை, எதிர்க் கட்சிகள், ஆளும் கட்சி என்று அனைத்துமே மக்க ளாட்சி மரபுகளை நிலைநாட்டு வதில் சிறப்பாகத் தங்களு டைய கடமைகளைச் செய் தன.

ஆனால் இலங்கையிலோ ராஜபக்சக்கள் ஆட்சிக்கு வந் ததிலிருந்து அவர்கள் மீதான அத்தனை ஊழல் வழக்கு களில் இருந்தும் நீதிமன்றங்க ளால் அவர்கள் விடுவிக்கப்பட் டமைதான் நடந்திருக்கின்றது. அவர்கள் குற்றமே செய்யாத வர்கள் என்றுவேறு தீர்ப்ப ளிக்கப்பட்டுள்ளது.

போரிஸ் ஜோன்சனை தூக்கியெறிந்தமை பிரிட்ட னின் அரசிசமைப்பு பிழைத் திருக்கவும் தன்னைப் புதுப் பிக்கவும் இவை வழி செய் துள்ளன. இலங்கையிலோ இந்த ஐந்தும் தங்களுடைய கடமைகளைச் செய்யத் தவறு கின்றன அல்லது சமரசம் செய்துகொள்கின்றன. பிரிட் டிஷ்காரர்களை அவர்களு டைய ஏகாதிபத்திய செயல் களுக்காக எவ்வளவுதான் வசை பாடினாலும், மக்களாட் சியைக் காக்க எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதில் அவர்களிடம் படிக்க வேண் டிய பாடங்கள் நிறைய இருக் கின்றன.



# ஒரு குறுஞ்செய்தி.. முடிந்தது கதை

**ஹரி**

மென்பொருள் பொறியாளராக ஒரு தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்துவருகிறார் நண்பர். சைபர் மோசடிகள் குறித்து மிகக் கவனமாக இருப்பவர். ஓடிபி, தேவையில்லாத அழைப்புகளை ஏற்பது, இணைப்புகளைச் சொடுக்குவது என எதுவும் செய்யமாட்டார். இதன் உச்சகட்டமாக தொடருந்து நிலையம், வணிக வளாகங்களில் இருக்கும் பொது இணையச் சேவையைகூடப் பயன்படுத்தமாட்டார். அத்தனை பாதுகாப்பாகத் தொழில்நுட்பத்தைக் கையாள்பவர்.

அது 3ஜி சேவையில் இருந்து 4 ஜிக்கு ஊர் மாறிக்கொண்டிருந்த நேரம். அனைத்துத் தொலைத்தொடர்பு நிறுவனங்களும், 'இலவசமாகவே 3ஜியில் இருந்து 4ஜிக்கு மாறிக்கொள்ளலாம், இன்றே அருகில் உள்ள சேவை மையம் விரைவீர்' எனத் தத்தம் வாடிக்கையாளர்களுக்குச் செய்திகளை நாளிதழ்களில் விளம்பரங்கள் மூலம் தெரியப்படுத்திக்கொண்டிருந்தார்கள். நண்பருக்கு ஓர் அழைப்பு வந்தது. 'ஏர்டெல்' வாடிக்கையாளர் மையத்திலிருந்து சேவை அதிகாரி பேசுகிறார் எனத் தெரிவிக்க, நமது முன்ஜாக்கிரதை முத்தண்ணா நண்பரோ மிகக் கவனமாக உரையாடத் துவங்கினார்.

**மனைவியின் மொபைலில் இருந்து விரல்கள் நடுங்க வங்கிக்கு அழைத்து விசாரிக்க, 'நீங்கள்தான் ஒரு குறிப்பிட்ட வங்கி கணக்குக்கு தொகையை மூன்று முறை அனுப்பியிருக்கிறீர்கள்' என அவர்கள் தெரிவிக்கிறார்கள். 'இது சாத்தியமே இல்லை! இந்தப் பரிமாற்றம் குறித்து எனக்குக் குறுஞ்செய்தி அறிவிப்புகூட வரவில்லையே' எனப் புலம்பினார்.**

'வணக்கம் நாங்கள் ஏர்டெல் சேவை மையத்திலிருந்து பேசுகிறோம். உங்களது 3ஜி சிம்கார்டை 4ஜியாக மாற்றி விட்டீர்களா?'

"இன்னும் இல்லை! அது இருக்கட்டும்! வாடிக்கையாளர் மையம் என்கிறீர்கள்.. ஆனால், தனிப்பட்ட எண்ணிலிருந்து அழைத்திருக்கிறீர்கள். உங்களை நான் எப்படி நம்புவது?"

'மன்னிக்கவும்! நீங்கள் 'டினன்டி' (DND) எனப்படும் தொந்தரவு செய்யாதீர் சேவையை உங்கள் எண்ணில் செயல்படுத்தி இருக்கிறீர்கள், ஆகவே தான் சேவை எண்ணில் இருந்து அழைக்காமல் வேறு எண்ணிலிருந்து அழைத்திருக்கிறோம். ஆனால், இதுவும் நிறுவனத்துடையதே!'

நண்பருக்கு இன்னும் நம்பிக்கை இல்லை! வேண்டா வெறுப்பாக, "சரி சொல்லுங்கள்! இப்பொழுது என்ன வேண்டும்?" என்கிறார்.

'நாடெங்கிலும் 3ஜி சேவையிலிருந்து 4ஜிக்கு மாற்றம் நிகழ்ந்து வருவது நீங்கள் அறிந்ததே! இதற்காக நீங்கள் அருகில் உள்ள சேவை மையம் செல்ல வேண்டியது இல்லை. உங்களது தற்போதைய சிம்மையே 4ஜியாக மாற்றிக்கொள்ளலாம். இதற்கு உங்கள் அனுமதி வேண்டும்."

'அதெப்படி சாத்தியம்! 4ஜி என்பது புதிய சேவை, எனது சிம்மோ பழையது, இதில் எப்படி புதிய சேவை கிடைக்கும்?'

'நாம் உயர்த்தப்போவது 3ஜி சேவையின் வேகத்தையே அன்றி, சிம் கார்டின் தரத்தை அல்ல! மேலும் இது கட்டாயமில்லை! ஒரு வாய்ப்பு மட்டுமே, நீங்கள் நேரடியாக சேவை மையம் சென்று பல மணிநேரம் காத்திருந்து கூட இதை செய்துகொள்ளலாம். நன்றி வணக்கம்!'

அவர் அழைப்பைத் துண்டிக்க முனைந்தார்.

நண்பரோ அவரைத் தடுத்து, "சரி இப்போது உனக்கு என்ன வேண்டும்" எனக் கேட்கிறார்.

"உங்களது சிம்மில் குறிப்பிட்டுள்ள 20 இலக்க எண்ணை, சிம் (SIM) என டைப் செய்து ஓர் இடைவெளிவிட்டு அந்த எண்களைக் குறிப்பிட்டு எங்களது வாடிக்கையாளர் சேவை மைய எண் 121க்கு அனுப்பினால் சில நிமிடங்களில் 4ஜி சேவை உங்களுக்கு கிடைத்துவிடும்."

'ஆனால், எனது சிம் மொபைலினுள் உள்ளது! மேலும் நீ நிறுவனத்தில்தான் பணிபுரிகிறாய் அல்லவா! அப்போ எனது சிம் எண் உனக்குத் தெரிந்திருக்கவேண்டுமே, அதை அனுப்பு' என நண்பர் இன்னும் கிடுக்கிப்பிடி போட்டார்.

0'உங்களது சிம் எண் எனக்குத் தெரியும்! இருந்தும் வாடிக்கையாளரிடம் கேட்பதுதான் முறை' என சேவை மையத் தரப்பில் விளக்கப்பட்டது.

'அதெல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன். நீ அனுப்பு. மேலும் 121க்குத் தவிர வேறு எதற்கும் மெசேஜை அனுப்ப மாட்டேன். சரியா!'

'121 எங்கள் சேவை மையம் சார்! அதற்கு மட்டுமே அனுப்புங்கள்!'

இப்படிச் சொலிவிட்டு 20 இலக்க சிம் எண்ணை அவர் நண்பருக்கு அனுப்பிவைக்கிறார்.



அவர் சொன்னபடி சிம் (SIM) என டைப் செய்து இடைவெளிவிட்டு 20 இலக்க எண்ணை காப்பி பேஸ்ட் செய்து 121க்குக் குறுஞ்செய்தி அனுப்புகிறார் நண்பர்.

'இன்னும் சில நிமிடங்களில் சேவை மாறிவிடும், முதல் சில மணிநேரங்களுக்கு தொடர்பு விட்டுவிட்டுக் கிடைக்கலாம். அதன் பிறகு சரியாகிவிடும். ஏர்டெல்லை அழைத்ததற்கு நன்றி. இந்த நாள் இனிய நாளாக அமைய வாழ்த்துகிறேன்!'

அழைப்பை சேவை மையம் துண்டித்துவிட்டது.

'என்னடா! இவன் அழைத்துவிட்டு நாம் அழைத்ததாக நன்றி சொல்கிறான்!'

நண்பரும் குழம்பியவாறே அழைப்பைத் துண்டிக்கிறார்.

நிற்க, இதுபோன்ற அழைப்பு நமக்கு வந்திருந்தால் இத்தனை விசாரணைகளுக்குப் பின் நண்பரைப் போல நாமும் சிம் எண்ணை அனுப்பியிருப்போமா? இல்லையா? நிச்சயம் அனுப்பியிருப்போம்.

சரி நண்பருக்கு என்ன நிகழ்ந்தது?

ஏர்டெல்லில் இருந்து பேசுவதாக வந்ததுதான் நண்பருக்கு வந்த கடைசி அழைப்பு, அடுத்த நாள் வரை அவரது தொலைத்தொடர்பு சேவை முற்றிலும் இல்லை, அழைப்புகள், குறுஞ்செய்திகள் என எதுவும் வரவில்லை! நண்பர் தற்செயலாக தனது வங்கிச் செயலியைத் திறந்து பார்த்தார். அவரது சேமிப்புக் கணக்கு பூஜ்யம் எனக் காட்டியதும், நண்பர் அதிர்ச்சியில் உறைந்துவிட்டார்.

மனைவியின் மொபைலில் இருந்து விரல்கள் நடுங்க வங்கிக்கு அழைத்து விசாரிக்க, 'நீங்கள்தான் ஒரு குறிப்பிட்ட வங்கி கணக்குக்கு தொகையை மூன்று முறை அனுப்பியிருக்கிறீர்கள்' என அவர்கள் தெரிவிக்கிறார்கள். 'இது சாத்தியமே இல்லை! இந்தப் பரிமாற்றம் குறித்து எனக்குக் குறுஞ்செய்தி அறிவிப்புகூட வரவில்லையே' எனப் புலம்பினார். எங்கள் தரப்பில் அனைத்தும் சரியாக நடந்திருக்கிறது என்று அவர்கள் தெரிவித்தனர். பிறகு நண்பர் என்ன செய்வதென்று தெரியாமல் மனம் உடைந்துவிட்டார்.

நண்பருக்கு ஏதோ பொறி தட்டியது, மனைவியின் மொபைலில் இருந்து தனது எண்ணுக்கு அழைத்தபோது அழைப்பு செல்வது கேட்கிறது. ஆனால், தான் கையில் வைத்திருக்கும் தனது மொபைலில் எந்தவித சலனமும் இல்லை.

சில நொடிகளில் அழைப்பு ஏற்கப்படுகிறது, எதிர்முனை பேசுகிறது.

'வணக்கம், நாங்கள் ஏர்டெல் சேவை மையத்திலிருந்து பேசுகிறோம். உங்களது 3ஜி சிம் கார்டை 4ஜியாக மாற்றிவிட்டார்களா?'

அப்போதுதான், தான் ஏமாந்தது வங்கியிடம் அல்ல, தொலைத்தொடர்பு மோசடிக்காரனிடம் என்பது நண்பருக்கு புரியத் தொடங்குகிறது.


என்ன நிகழ்ந்தது?

இதில் 'அன்ஸ்ட்ரெக்சர்ட் சப்லிமென்டரி சர்வீஸ் டேட்டா- யூஎஸ்எஸ்டி' (Unstructured Supplementary Service Data- USSD) எனப்படும் துரித சேவைகளை அனைத்துத் தொலைத்தொடர்பு நிறுவனங்களும் தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்கிவருகிறது. *121* என மொபைலில் அழுத்தியதும் இருப்புத்தொகை, இணைய மீதம் எல்லாம் தெரிவது இப்படித்தான். இதில் மேலும் பல சேவைகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று சிம் ஸ்வாப்.

சிம் பழுதடைந்தாலோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ, புதிய சிம்மில் நமது எண்ணை மாற்றிக்கொள்ளும் இச்சேவை 'சிம் இடமாற்றம்' (SIM SWAP ) என அழைக்கப்படுகிறது. இதற்கு வாடிக்கையாளர் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றுதான். அதாவது, சிம் (SIM) என டைப் செய்து இடைவெளிவிட்டு 20 இலக்க எண்ணைக் குறிப்பிட்டு வாடிக்கையாளர் சேவை மைய எண்ணுக்கு அனுப்பினால் புதிய சிம்மில் நமது எண்ணின் அனைத்து சேவைகளும் மாறிவிடும். சேவை மையத்திற்கு நேரடியாகச் சென்றாலும் அந்த அதிகாரி நமது மொபைலில் இருந்து இச்செய்தியை அனுப்பியே சிம் மாற்றத்தைச் செய்து தருவார். இதைத்தான் மோசடியாளர்கள் பயன்படுத்திக்கொண்டார்கள்.

'எனது சிம் எண்தான் உனக்கு தெரியுமே! அனுப்பு'

# உடல் ஆரோக்கியம் நுண்ணுயிரிகளின் கட்டுப்பாட்டில்!



**மோகனா**

நம் குடலில் வாழும் நுண்ணுயிரிகளே நம் உடல் ஆரோக்கியத்தைக் கட்டுப்பாட்டில் வைத்துள்ளதாக புதிய ஆய்வு ஒன்று கூறுகிறது.

கலிபோர்னியா பல்கலைக்கழகம் சான்டியாகோவில், உள்ள மருத்துவத் துறை பத்திரிகையில் அத்துறையின் பேராசிரியர் அமீர் ஜரின்பார், ஆடி (ஜூலை) ஐந்தாம் நாள் எழுதிய கட்டுரையில் சிறுகுடல் நுண்ணுயிரிகள், மனிதனுக்கு செய்யும் நன்மைகள் தொடர்பான தகவலை வெளியிட்டுள்ளார்.

**மனித உடல் நோய் சோதனைக்கு உதவும் எலிகளின் மாதிரிகள்**

எலிகள் எவ்வளவு சாப்பிட்டன மற்றும் அவற்றின் குடல் நுண்ணுயிரியின் தன்மையை மாற்றியமைக்கும்போது அவை எப்படி நடந்துகொள்கின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர். அதிகப்படியான உணவு, குறைந்த நுண்ணுயிரிகள் என்பது வளர்சிதை மாற்ற ஆரோக்கியத்தை விளைவித்தது. இது எலிகளை மனிதனுக்கு மாதிரிகளாக வைத்து சோதனை நடத்தும்போது தெரிய வந்த தகவலாகும்.

**நம் குடலின் குடியிருப்பாளர்கள்: பாக்டீரியா & நுண்ணுயிரிகள்**

நம் ஒவ்வொருவரின் குடலிலும் 500 முதல் 1,000 பாக்டீரியா இனங்கள் வாழ்கின்றன; ஆச்சரியமாக இல்லையா? அது மட்டுமா? ஒருவேளை 1,00,000 டிரில்லியன் நுண்ணுயிரிகள் கூட வாழலாம் என்கின்றனர் அறிவியலாளர்கள்.

கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் சான் டியாகோ மருத்துவப் பள்ளியின் ஆராய்ச்சியாளர்கள் 'செல் ரிப்போர்ட்ஸ்' என்ற இதழில் வெளியிட்டுள்ள புதிய ஆய்வறிக்கையில், உணவு மற்றும் உணவு முறைகள் என்பவை, இந்த குடல்வாழ் நுண்ணுயிரிகளை எவ்வாறு பாதிக்கிறது என்றும் நமது ஆரோக்கியம், குறிப்பாக உடல் பருமன் மற்றும் வகை 2 நீரிழிவு வியாதியை எவ்வாறு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறது என்பதையும் ஆராய எலி மாதிரிகளைப் பயன்படுத்தினர்.

எலிகள் மற்றும் மனிதர்களில் ஒரே மாதிரியான செயல்பாடு

என நண்பர் சொன்னதும் அவன் அனுப்பினான் அல்லவா, அது அவரது சிம் எண் அல்ல, மோசடியாளர்கள் கையில் வைத்திருக்கும் புதிய சிம் அட்டை, அதன் 20 இலக்க எண்ணை அனுப்பியதும் நண்பர் இந்த எண்ணைக் குறிப்பிட்டு தனது மொபைலிலிருந்து சிம் இடமாற்ற செய்தியை அனுப்பிவிட்டார். ஆகவே, அவரது மொபைல் சேவை முழுவதும் மோசடியாளர்கள் வசம் சென்றுவிட்டது. அவருக்கும் வரும் அழைப்புகள், வங்கி குறுஞ்செய்திகள், ஓடிபி எண்கள் என அனைத்தும் அவர்களுக்கே செல்லும். அதை வைத்தே அவரது சேமிப்புக் கணக்கில் இருந்த தொகையைத் திருடி இருக்கிறார்கள். இதே வகையில் *401* இடைவெளி XXXXXXXXXX என எந்த மொபைல் எண்ணைக் குறிப்பிட்டு வடிக்கையாளர் சேவை மையத்துக்கு செய்தி அனுப்பினால் அதற்கு உங்களது அழைப்புகள் அனைத்தும் மாற்றிவிடப்படும் (Call Forwarding). இந்த மோசடியும் தற்போது பரவலாக நிகழ்ந்துவருகிறது. ஆகவே உஷார் நண்பர்களே! இந்நிகழ்வில் குறிப்பிடப்பட்ட 3ஜி, 4ஜி காரணம் மாறலாம்! புதிது புதிதான காரணங்களுடன் மோசடியாளர்கள் உங்களை அழைக்கலாம். ஆனால், எதற்காகவும் இதுபோன்ற துரித சேவைகளை பிறர் சொல்லி பயன்படுத்தாதீர்கள். எந்தத் தொலைத்தொடர்பு நிறுவனமும் வாடிக்கையாளர்களை அழைத்து இதுபோன்ற சேவைகளை முயற்சிக்கச் சொல்வதில்லை. ஆகவே தெரிந்துகொள்ளுங்கள், நவீன மோசடிகளிலிருந்து உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்!

எலிகள் மற்றும் மனிதர்கள் இரண்டிலுமே, இலியம் (Ileum) என்னும் சிறுகுடலின் கீழ்ப்பகுதி என்பது சிறுகுடலின் இறுதி நீட்சியாகும். இது பெருங்குடலின் முதல் பகுதியான சீக்கத்துடன் (Caecum) இணைகிறது. இலியத்தில், திரவமாக்கப்பட்ட உணவில் இருந்து ஊட்டச்சத்துக்கள் வெளியேற்றப்படுகின்றன. பெருங்குடலின் தொடக்கத்தையும் குறிக்கும் சீக்கமில், தண்ணீரை பிரித்தெடுக்கும் செயல்முறை தொடங்குகிறது.

**நுண்ணுயிரிகளின் பணி**

மேலே குறிப்பிட்ட இரண்டு செயல்முறைகளும் சிக்கலான, ஆற்றல்மிக்க செயல்பாடுகள் மற்றும் அத்தியாவசியமானவை. இந்த செயல்பாடுகள், நாம் உட்கொண்ட உணவு வகைகள் மற்றும் குடலில் குடியிருக்கும் நுண்ணுயிரிகளின் தன்மையினால், இதன் காரணிகளால் மிகவும் ஆழமாக பாதிக்கப்படுகின்றன. மேலும் அவைகளின் இருப்பு மற்றும் செயல்பாடுகள், நமது குடலின் செரிமானம், ஊட்டச்சத்துக்களை உறிஞ்சுதல், வைட்டமின் உருவாக்கம் மற்றும் நோயெதிர்ப்பு மண்டலத்தின் வளர்ச்சி ஆகியவற்றை கட்டுப்படுத்த உதவுகின்றன.

**மாறிக்கொண்டிருக்கும் குடல் சூழலும் & குடியிருப்புவாசிகளும்**

"நாம் முக்கியமாகத் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், குடல் நுண்ணுயிரிகள் தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கின்றன. இதனால் நாம் குடலுக்குள் என்ன நடக்கிறது என்பதை புரிந்துகொள்ள கடினமாக இருக்கும், எனவேதான், இந்நிகழ்வுகளை ஆய்வாளர்கள் தொடர்ந்து படம் எடுத்துக்கொண்டே இருப்பதன் மூலம் அறிகின்றனர். குடலின் சூழல் என்பது நாம் சாப்பிடும் உணவின் தன்மையை அடிப்ப டையாகக் கொண்டது என்பது மட்டுமின்றி, ஒரு நாளின் நேரத்தையும் அடிப்படையாகக் கொண்டது என்பதை, நாம் உணர வேண்டியது அவசியம்" என்கிறார் மூத்த ஆய்வு ஆசிரியர் மற்றும் மருத்துவ உதவி பேராசிரியர் அமீர் ஜரின்பார்.

இவர் சான் டியாகோ மருத்துவத்துறை, மற்றும் சான் டியாகோ ஹெல்த்தின் இரைப்பை மற்றும் குடல் மருத்துவரும்கூட.

இந்த ஆய்வின் மூலம், ஒரு திரைப்படத்தைப் போலவே, நாள் முழுவதும் பல ஸ்னாப்ஷாட்களை எடுத்து குடலில் நடைபெறும் செயல்பாடுகளை அதன் தன்மையை அறிய முயற்சித்தனர். இது உணவு மற்றும் நுண்ணுயிர் உடல் எடை அதிகரிப்பு மற்றும் நீரிழிவு ஆகியவற்றையும் பாதிக்கிறது.

வளர்சிதை மாற்றத்துக்கு உதவும் நுண்ணுயிரிகள்

குடல் நுண்ணுயிரிகளில் ஏற்படும் சுழற்சி மாற்றங்கள் ஆரோக்கியத்திற்கு மிகவும் முக்கியம், ஏனெனில், அவை சர்க்காடியன் சுழற்சி என்ற உயிரியல் கடிகாரத்திற்கு உதவுகின்றன. மேலும் உடலின் குளுக்கோஸ், கொலஸ்ட்ரால் மற்றும் கொழுப்பு அமிலங்களின் கட்டுப்பாடு மற்றும் ஒட்டுமொத்த வளர்சிதை மாற்ற ஆரோக்கியத்துக்கும் இது முக்கியமாக உதவுகிறது.

**சோதனை மூலம் தகவல்**

ஜரின்பார் மற்றும் அவரது குழுவின் சமீபத்திய ஆய்வுப்பணியில், இந்த காரணிகளின் தாக்கம் மற்றும் இடைவினைகளை பற்றி மேலும் தெளிவுபடுத்தியுள்ளனர். குறிப்பாக இலியம், செரிமானம் மற்றும் உறிஞ்சுதல் தொடர்பான அதன் தனித்துவமான செயல்பாடுகளின் அடிப்படையில். குறிப்பாக, உணவு-தூண்டப்பட்ட உடல் பருமன் (Diet Induced Obesity-DIO) மற்றும் நேர-கட்டுப்படுத்தப்பட்ட உணவு (Time-Resticted Feeding-TRF) ஆகியவை எலிகளின் மாதிரிகளில் நுண்ணுயிர் கலவை மற்றும் டிரான்ஸ்கிரிப்டோம்(Transcryptome) (ஒரு உயிரினத்தின் மரபணுவின் புரத-குறியீட்டு பகுதி) ஆகிய வற்றை எவ்வாறு மாற்றுகின்றன என்பதையும் அவர்கள் கவனித்தனர்.

எலிகளின் மாதிரிகளில், உடல் பருமன் மற்றும் நேர-கட்டுப்படுத்தப்பட்ட உணவு (TRF) இல்லாதது (எலிகள் எப்போது வேண்டுமானாலும் சாப்பிடலாம்) குடல் நுண்ணுயிரிகள் தாளகதி (rthyms) மற்றும் குடல் கடிகாரங்களை (Intestinal Clocks) மாற்றியமைக்க உதவும் சமிக்ஞை பாதைகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்துவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர்.

**இது நுண்ணுயிரிக்கும் மனிதனுக்கும் இடையிலான மிகவும் சிக்கலான உறவு, இதில் குடல் வாழ் நுண்ணுயிரிகள், மனிதனின் இரைப்பை குடல் செயல்பாடு மற்றும் ஆரோக்கியத்தை தீர்மானிக்க உதவுகிறது**

**குடலுக்கும், மனிதனுக்கும் ஆரோக்கியமான நுண்ணுயிரிகள்**

இந்த கண்டுபிடிப்புகள், ஆரோக்கியமான குடல் நுண்ணுயிரியை பராமரிப்பதிலும், நமது உணவு மற்றும் நேர கட்டுப்படுத்தப்பட்ட உணவு முறைகளின் செல்வாக்கை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. இது வளர்சிதை மாற்ற ஆரோக்கியத்தை நிர்வகிக்கும் சர்க்காடியன் தாளங்களையும் மாற்றியமைக்கிறது என்று ஜரின்பார் கூறினார். மேலும் இது நுண்ணுயிரிக்கும் மனிதனுக்கும் இடையிலான மிகவும் சிக்கலான உறவு, இதில் குடல் வாழ் நுண்ணுயிரிகள், மனிதனின் இரைப்பை குடல் செயல்பாடு மற்றும் ஆரோக்கியத்தை தீர்மானிக்க உதவுகிறது என்பதை உறுதிப்படுத்தியுள்ளார்.

ஆய்வாளர்களின் இப்போதைய பணி என்பது, எதிர்கால ஆய்வுகளில், குடல் எவ்வாறு செயல்படுகிறது அல்லது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அல்லது நாளின் நேரத்தில் நுண்ணுயிரியின் நிலையைப் பொருத்து குடல் செயல்பாட்டின் மீது மருந்துகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பது பற்றிய குறிப்பிட்ட தகவல்கள் மூலம்/ சோதனைகள் மூலம் கண்டறிவதுதான்.

**கண்ணுக்குத் தெரியாத குடல் நுண்ணுயிரிகள் கட்டுப்பாட்டில் நம் ஆரோக்கியம்**

எப்படி நம் குடலில் வாழும் நுண்ணுயிரிகள் நமது குடலைக் கட்டுப்பாட்டில் வைத்துள்ளன, அதுவும் நம் உடல் நன்மைக்கும், ஆரோக்கியத்துக்கும், நோயெதிர்ப்பு தன்மைக்கும்கூட அவை காரணமாகின்றன. அந்த நுண்ணுயிரிகளே நம் உடல் பருமனையும் கட்டுப்படுத்துகின்றன என்றால் உண்மையில் வியப்புதான்!

காருண்யா

# இரண்டு வருடங்கள் நிறைவிலும் சைக்கிள்...!



செம்மண் தொடங்கி இன்றைக்குச் சரியாக இரண்டு வருடங்கள் நிறைவு. செம்மண்ணின் முதலாவது இதழின் முதற் பக்கத்தில் இடம் பிடித்த சைக்கிள் இன்றைக்கும் பிரபலம். அது முதலிடம் பிடிக்கும் சூழல் விநோதமானது. எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகப் பலரும் இயந்திர வண்டிகளில் இருந்து துவிச்சக்கர வண்டி அல்லது மிதிவண்டிக்குத் தாவி விட்டனர். இதனால் சைக்கிளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. அதன் உதிரிப்பாகங்களும் பெரும் தட்டுப்பாடாகவே கிடைக்கின்றன. பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட ரூபாவின் வீழ்ச்சி சைக்கிளின் விலையையும் அதிகரித்திருக்கிறது. இறுதியாகச் சந்தையில் 95 ஆயிரம் ரூபா மதிப்பில் இருந்து இப்போது அந்தப் பெறுமதிக்கும் பொருளில்லை என்றாகிவிட்டது நிலமை. முற்பதிவு செய்வோருக்கும், முற்பணம் செலுத்துவோருக்கும், டோக்கன் பெற்றவர்களுக்கும் முன்னுரிமை என்றாகிவிட்டது.

தேடப்படாமல் வீட்டின் கோடிப் புறத்தில் போடப்பட்டிருந்த சைக்கிள்கள் எல்லாம் தூசு தட்டிப் புதுப்பொலிவு பெற்றிருக்கின்றன. சைக்கிள் ஓட்டுவதைப் பிரமிப்புடனும் பிரபல்யத்துடனும் நோக்கும் தலைமுறை உருவாகியிருக்கிறது. சைக்கிள் ஓட்டுவதைத் தாற்பரியமாகவும் பெருமிதமாகவும் காண்பித்துச் சமூக வலைத்தளங்களில் பதிவேற்றுபவர்களின் உபதேசப் பதிவுகள் அதிகரித்திருக்கின்றன. கார் வாங்கியதையும் அதைச் செலுத்திச் செல்வதையும் பதிவேற்றித் தமது கனவு நிஜமாகியது என்று அகமகிழ்ந்த பலர் தாம் சைக்கிளில் அலுவலகம், வேலைக்குச் செல்வதைப் பதிவேற்றிப் படம் காட்டிப் பெருமிதப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது. எது எவ்வாறிருப்பினும் கைவிடப்பட்டுக் கிடந்த சைக்கிள் பாவனை மீள் எழுச்சி கண்டிருப்பதை இவையெல்லாம் சுட்டிக்காட்டுகின்றன.

**சைக்கிள் திருத்தகங்களின் நிலை**

துருப்பிடித்தும் தூசு பிடித்தும் வீட்டுக் கோடிகளில் கைவிடப்பட்டும் கிடந்த சைக்கிள்களை எடுத்துச் சென்று சைக்கிள் திருத்தகங்களில் திருத்தக்கொடுத்தவர்களின் தொகை அதிகரித்துவிட்டதால் திருத்தகங்கள் திண்டாட்டத்தில் இருக்கின்றன. சைக்கிள் திருத்துமிடம் என்கிற அறிவிப்புப் பலகைகளை ஏந்தியிருந்த திருத்தகங்களில் பல இங்கு சைக்கிள் திருத்தப்படமாட்டாது என்று எழுதித் தொங்கவிட்டுள்ளன. அத்தோடு சைக்கிள் விற்பனைக்கு இல்லை என்றும் எழுதிக் காட்சிப்படுத்தியுள்ளன. திருத்தகங்களில் திரண்ட மக்களால் ஏற்பட்ட அசௌகரியங்கள் திருத்தக உரிமையாளர்களைச் சலிப்படைய வைத்ததன் விளைவே இந்த நிலைக்குக் காரணம்.

வேலை குறைவாய் இருந்த நிலைமாறி வேலைப் பளுவுக்குள் சிக்கியிருக்கிறார்கள் திருத்தகத் தொழிலாளர்கள். வேலையில்லாத காரணத்தால் திருத்தகத் தொழிலில் இருந்து விலகி வேறு



# வயிற்று வலி எப்போதும் சாதாரணமானது அல்ல!

**கணேசன்**

'வலது தோள்பட்டையில் வலிக்கிறது' என்று என்னிடம் சிகிச்சைக்கு வந்தார் ஒரு வாலிபர். பரிசோதித்தபோது, அவருக்குப் பித்தப்பையில் பிரச்சினை இருந்தது.

'வயிறு வலிக்கிறதா?' என்று கேட்டேன். 'ஓம், டொக்டர். இரண்டு நாளா வயிறும் வலிக்குது. எனக்கு ஏற்கனவே அல்சர் உண்டு. அதுக்கு நான் மருந்து எடுக்கிறன். காலையிலிருந்து தோள்பட்டை வலிக்குது. வாயுப்பிடிப்பா, தசைப்பிடிப்பா என்று எக்ஸ்-ரே எடுத்துப் பார்க்கலாம் என்று வந்திருக்கிறேன்' என்றார்.

'எக்ஸ்-ரே அவசியமில்லை. வயிற்றை ஸ்கேன் எடுக்கவேண்டும்' என்றேன். 'முதல்ல தோள்பட்டை வலிக்கு எக்ஸ்-ரே எடுத்துப் பாருங்கோ டொக்டர்! பிறகு அல்சருக்கு ஸ்கேன் எடுக்கலாம்!' என்றார் அழுத்தமாக.

'உங்களுக்குப் பிரச்சினை பித்தப்பையில்தான் தோள்பட்டையில் இல்லை. அதுக்கு வயிற்றைத்தான் ஸ்கேன் எடுக்க வேணும்' என்றதும், 'பித்தப்பைக்கும் தோள்பட்டை வலிக்கும் என்ன சம்பந்தம், டொக்டர்?' என்று கேட்டார்.

'பித்தப்பையில் ஏற்படும் வலி தோள்பட்டைக்கு வரும். இரண்டுக்கும் ஒரே நரம்பு' என்றேன். 'வலி ஓரிடம்... நோய் இருக்கும் இடம் வேறயா?' என்று ஆச்சரியப்பட்டார். 'ஆமாம்' என்றேன்.

இந்த வாலிபரைப் போல வயிற்றில் வலி வந்தால் அல்சர்தான் காரணம் என்று அவர்களாகவே முடிவு செய்துகொண்டு சுய மருத்துவம் செய்துகொள்வதும், மற்றக் காரணங்களை அறியாமல் சிகிச்சையைத் தள்ளிப்போடுவதும், பல நேரங்களில் நோயைப் பெருசுபடுத்தி, ஆபத்தான கட்டத்துக்குக் கொண்டு போய் விடும்!

வயிற்றுவலி யாருக்கும், எப்போதும் வரலாம். அது சாதாரண வலியா, சிக்கலான வலியா என்று தெரிந்துகொண்டால் ஆபத்துகளைத் தவிர்க்கலாம். உங்கள் சுயமதிப்பீட்டால் வயிற்றுவலிக்குக் காரணம் தெரிந்துகொள்ள சில குறிப்புகள் தருகிறேன்.

### வயிற்றுவலியின் பிறப்பிடங்கள்

'பாட்ஷா' படத்தில் 'எட்டு எட்டா மனுஷன் வாழ்வைப் பிரிச்சிக்கோ' என்று ரஜினி பாடுவார். அதுமாதிரி, வயிற்றை ஒன்பது பகுதிகளாகப் பிரித்து வைத்திருக்கிறது மருத்துவம். எந்தப் பகுதியில்



தொழில்களை நாடியதால் சைக்கிள் திருத்துநர்களின் தொகை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளது. பிரதேசங்கள் தோறும் அங்கொன்றும் இங்கொன்றுமாக இதையே நிரந்தரமாக நம்பித் தொழில் நடத்திவருகின்ற சிலரே இன்றும் திருந்துநர்களாக இருக்கின்றனர். யாழ். நகரப் பகுதியில் சனத்தொகைக்கு ஏற்ப சற்று அதிகளவில் இவர்களின் பரம்பல் காணப்பட்டாலும் நகரைத் தாண்டினால் தேடினாலும் ஆள் கிடைக்காத நிலையே காணப்படுகிறது. அதே போலதான் சைக்கிள்களின் நிலையும். விற்பனைக்கு இல்லை.

### வீதியெங்கும் சைக்கிள்கள்

வீதியில் அரிதாகக் கணப்பட்ட சைக்கிள்கள் இன்றைக்கு வீதியை நிறைத்து நிற்பது விநோதம்தான். அதேபோல சைக்கிள்களில் பல ரகங்கள் வந்திருக்கின்றன. மின் மோட்டார்களில் இயங்கும் சைக்கிள்கள் இதில் தனித்துத் தெரிகின்றன. ஏனைய சாதரண சைக்கிள்களைவிட வீதிகளில் வேமெடுத்துச் செல்லும் அவை விலையிலும் உச்சம் தொட்டுள்ளன. அரிதாகவே விற்பனைக்கிருந்தாலும் மோட்டார் சைக்கிள்களின் விலையையும் விஞ்சியுள்ளன. கிட்டத்தட்ட 6 இலட்சத்து ஐம்பதாயிரம் வரை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பெற்றோல் தட்டுப்பாடு மோட்டார் வண்டிகளை ஓரம்கட்டியதன் விளைவே இது. எனவே பெற்றோல் நிலமை வழமைக்குத் திரும்பியதும் இந்த விலை ஏற்றம் சடுதியாகச் சரியும் என்பது பலரது கணிப்பு. எது எவ்வாறோ இது சைக்கிள்களின் காலம் என்பதுதான் உண்மை.

வலி வந்தால் வயிற்றில் எங்கு பாதிப்பு என்பதைத் தோராயமாகத் தெரிந்துகொள்ளத்தான் இந்த வகைப்பாடு.

வயிற்றின் மேல் பகுதியில் வலது பக்கமாக வலி எடுத்தால், கல்லீரல், பித்தப்பை, இரைப்பை, முன் சிறுகுடல் ஆகியவற்றில் பிரச்சினை இருக்கலாம். மேல்வயிற்றில் நடுப்பகுதியில் வலி ஏற்பட்டால், இரைப்பை, முன்சிறுகுடல், கணையம் ஆகியவை காரணமாகவும், மேல் வயிற்றில் இடது பக்கத்தில் வலி உண்டானால், மண்ணீரல் காரணமாகவும் இருக்கலாம்.

வயிற்றின் நடுப்பகுதியில் இடது பக்கமாக ஏற்படும் வலிக்கு இடது சிறுநீரகமும், வலது பக்கத்தில் வலி என்றால், வலது சிறுநீரகமும் காரணமாக இருக்கலாம். நடு வயிற்றில் மத்திய பகுதியில் வலி ஏற்படுகிறது என்றால், சிறுகுடலில் பிரச்சினை என்று ஊகிக்கலாம். அடிவயிற்றின் வலது பக்க வலிக்குக் குடல் வால் அழற்சி, வலது சிறுநீர்க்குழாய்க் கல் (Ureteric Stone), கருக்குழாய் பாதிப்பு, ஏறுகுடல் கோளாறு போன்றவை முக்கியமான காரணங்கள். அடிவயிற்றில், தொப்புளுக்குக் கீழ் வலி

**வயிறு வலிக்கும் இடத்தை வைத்துக் காரணத்தைக் கண்டறிவது 100 சதவீதம் சாத்தியம் எனச் சொல்ல முடியாது. அதாவது, நமக்குக் கொள்ளை நடந்த இடம் தெரிகிற மாதிரி வயிற்றில் எந்தப் பகுதியில் பிரச்சினை என்று இதன் மூலம் தெரிந்துகொள்ள முடியும்**

வந்தால், கருப்பை அல்லது சிறுநீர்ப்பைக் கோளாறு காரணமாகும். அடிவயிற்றில் இடது பக்கத்தில் வலித்தால், இடது சிறுநீர்க்குழாய்க் கல் / இறங்கு குடல் கோளாறு இருக்க வாய்ப்பிருக்கிறது.

### திடீர் வயிற்றுவலிக்கு என்ன காரணம்?

இதற்கான காரணப் பட்டியல் மிக நீண்டது. அந்தப் பட்டியலில் 'வி.வி.ஐ.பி.' நோய்கள் மட்டும் இங்கே:

அல்சர் துளை: நெஞ்சுக்குழியில் கடுமையான வலி தொடங்கி வயிறு முழுவதும் பரவும். வாந்தி ஏற்படும். வயிறு உப்பும். திறந்த அறுவைச் சிகிச்சை (ஓபன் சர்ஜரிதான்) தீர்வு!

குடல்வால் அழற்சி (Appendicitis): குழந்தை முதல் நடுவயது வரை உள்ளவர்களுக்கு இந்தப் பாதிப்பு அதிகம். வயிற்று வலி முதலில் தொப்புளைச் சுற்றி தொடங்கும் பிறகு வலது அடிவயிற்றில் நிலைகொள்ளும். மிதமான காய்ச்சலும் வாந்தியும் வரலாம். குடல் வாலை நீக்குவதுதான் இதற்கு நிரந்தரத் தீர்வு. இப்போது லேப்ராஸ்கோப்பியில் எளிதாகச் செய்கிறார்கள்.

குடலில் துளை விழுதல் /அடைப்பு: தொப்புளைச் சுற்றி கயிறு கட்டி இறுக்குவது போல் வலிக்கும். அடிவயிறு முழுவதிலும் மந்தமான வலி இருக்கும். வாந்தி கடுமையாகும். வயிறு மரப்பலகை போன்று இறுகிவிடும். அறுவை சிகிச்சை அவசியம்.

குடலுக்குள் குடல் செருகுதல்: இந்தப் பாதிப்பு குழந்தைகளுக்குத்தான் அதிகம். வயிற்றுவலி, வாந்தி, கருஞ்சிவப்பு நிறத்தில் வயிற்றுப்போக்கு ஆகியவை ஏற்படும். அறுவைச் சிகிச்சை தீர்வு!

கணைய அழற்சி (Pancreatitis): மதுவின் பாதிப்புதான் கணைய அழற்சி. நெஞ்சுக்குழியில் கடுமையான வலி தொடங்கி முதுகுக்குப் பரவும். குனிந்தால் வலி குறையும் படுத்தால் வலி அதிகரிக்கும். இது முக்கியமான அறிகுறி. வாந்தி வரும். வயிறு உப்பும். மருந்து சிகிச்சைக்குக் கட்டுப்படும்.

பித்தப்பை அழற்சி / கற்கள் (Gall stones): வலது பக்க மேல் வயிற்றில் வலி தொடங்கி, முதுகு வரைக்கும் சென்று, தோள்பட்டையில் நிலைகொள்ளும். இதற்குப் பித்தப்பையை நீக்குவதுதான் ஒரே வழி. திறந்த அறுவைச் சிகிச்சை மூலமும் லேப்ராஸ்கோப்பியிலும் நீக்கிவிடலாம்.

சிறுநீரகக் கற்கள்: சிறுநீரகத்தில் கல் இருந்தால் முதுகில் வலி உண்டாகி, முன் வயிற்றுக்குப் பரவும். சிறுநீரகக்



குழாயில் கல் இருந்தால், அடிவயிற்றில் வலி தோன்றி, பிறப்பு உறுப்புக்குப் பரவும். சிறுநீர்ப்பையில் கல் இருந்தால், தொப்புளுக்குக் கீழ் வலி தொடங்கி, சிறுநீர் வெளித்துவாரம் வரை பரவும். நீர்க்கடுப்பு, வாந்தி இருக்கும். எக்ஸ்ட்ரா கார்போரல் ஷாக் வேவ் லித்தோட்ரிப்சி (ESWL) சிகிச்சையில் கற்களை உடைக்கலாம். வயிற்றைப் பிளக்காமல் அறுவைச் சிகிச்சை செய்தும், யூரெட்டிரோஸ்கோப் மூலமும் கற்களை அகற்றிவிடலாம்.

கருக்குழாய் / சினைப்பை நீர்க்கட்டி வெடிப்பு: அடிவயிற்றில் திடீரென வலி தொடங்கும். அடிவயிறு முழுவதும் மந்தமான வலி இருக்கும். வாந்தி வரும். கருக்குழாய் வெடிப்பின்போது பெண் பிறப்பு உறுப்பில் குருதியும் வெளியேறும். உடனே அறுவைச் சிகிச்சை செய்யவேண்டும்.

### பரிசோதனைகள் என்னென்ன?

வயிறு வலிக்கும் இடத்தை வைத்துக் காரணத்தைக் கண்டறிவது 100 சதவீதம் சாத்தியம் எனச் சொல்ல முடியாது. அதாவது, நமக்குக் கொள்ளை நடந்த இடம் தெரிகிற மாதிரி வயிற்றில் எந்தப் பகுதியில் பிரச்சினை என்று இதன் மூலம் தெரிந்துகொள்ள முடியும். அதேவேளை கொள்ளைக்காரனைக் கண்டுபிடிக்க மோப்ப நாயைப் பயன்படுத்துகிற மாதிரி வயிற்று நோயைத் துல்லியமாக

கண்டுபிடிக்க குருதி, சிறுநீர், மலம் ஆகியவற்றைப் பரிசோதிக்கவேண்டும். அல்ட்ரா சவுண்ட், எண்டோஸ்கோப்பி, கொலனோஸ்கோப்பி, சி.டி. ஸ்கேன், எம்.ஆர்.ஐ. ஸ்கேன் என சிறப்பு அணிகளும் தேவைப்படும் அடிக்கடி வலி வருபவர்களுக்கும். ஆபத்தான வயிற்றுவலி வந்தவர்களுக்கும் இவை கட்டாயம்.

**சரி, வயிற்றுவலி சாதாரணமானதா, ஆபத்தானதா? இதை எப்படித் தெரிந்து கொள்வது?**

சாப்பிடாமல் இருப்பது, நேரத்துக்குச் சாப்பிடாதது, அதிகமாகச் சாப்பிடுவது, கெட்டுப்போன உணவைச் சாப்பிடுவது, வலி மருந்து சாப்பிடுவது, பெண்களுக்கு மாதவிலக்கு சமயத்தில் வருவது என வயிற்றுவலிக்கான காரணம் நமக்கே தெரியும். இது சாதாரண வயிற்றுவலி. இப்படி எதையும் சம்பந்தப்படுத்த முடியாமல், வயிற்றுவலி திடீரென தொடங்கி, பொறுக்க முடியாத அளவுக்கும், காய்ச்சல், வாந்தி போன்ற 'துணை' அறிகுறிகளுடனும் அச்சுறுத்தினால், அது ஆபத்தானது என அறிந்துகொள்ளவேண்டும்.

உதாரணமாக, குறிப்பிட்ட ஓர் இடத்தில் தொடர்ந்து வலி ஏற்படுவது, மிக அதிக காய்ச்சல், தொடர் வாந்தி, குருதி வாந்தி, தார் மாதிரி மலம் போவது, அடிக்கடி மலம் போவது, தோள்பட்டை வலி போன்ற அறிகுறிகள் தென்பட்டால், கடுமையான அல்சர், குடலடைப்பு, கணைய அழற்சி, புற்றுநோய், பித்தப்பை அழற்சி/கல், சிறுநீரகக் கல், கருக்குழாயில் கரு வளர்வது, சினைப்பை நீர்க்கட்டி வெடிப்பது என எதுவாகவும் இருக்கலாம். எனவே, காலம் கடத்தாமல் உடனே டொக்டரிடம் சென்றுவிடவேண்டும். தாமதம் செய்யும் ஒவ்வொரு நிமிடமும் வயிற்றுக்குள் ஆபத்து மழைக்கால காளான் போல் வளர்ந்து கொண்டிருக்கும்.


**சிகிச்சைகள் என்ன?**

சென்ற தலைமுறையில் வயிற்றில் வலி வந்தால் திறந்த அறுவைச் சிகிச்சைதான் ஒரே முடிவு! இப்போது நிலைமை மாறிவிட்டது. நோயின் தீவிரத்தைப் பொறுத்து மருந்துகள் தொடங்கி வலி தெரியாத அறுவைச் சிகிச்சைகள் வரை பல 'புதுமுகங்கள்' அறிமுகம் ஆகிவிட்டன. வயிற்றில் சில துவாரங்கள் மட்டும்போட்டு மேற்கொள்ளப்படும் லேப்ராஸ்கோப்பி சிகிச்சை, வாய்வழியாக ஒரு குழாயை நுழைத்து செய்யப்படும் எண்டோஸ்கோப்பி சிகிச்சை என எவ்வளவோ நவீன தொழில்நுட்ப வசதிகள் வந்துவிட்டன. வயிற்றில் வலி வந்த பிறகு, கடை மருந்து எடுத்துக்கொண்டு, 'ரெண்டு நாள் பாத்துட்டு பிறகு டொக்டரிட்ட போவோம்' என்ற அலட்சியம் மட்டும் ஆகாது. 'எரிகிற நெருப்பின் மீது துணியைப் போட்டு மூடுவது' மாதிரிதான் சிகிச்சையைத் தாமதப்படுத்துவதும். இதற்கு உதாரணம் அகிலா!

பல்கலைக்கழக மாணவியான இவர் வயிற்றுவலிக்காக என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். பரிசோதித்ததில் பித்தப்பையில் கல் இருப்பதும், காமாலை பாதிப்பு இருப்பதும் தெரிந்தன. 'அறுவைச் சிகிச்சை செய்தால் தான் வலி தீரும் காமாலை கட்டுப்படும்' என்றேன். அவரோ காமாலை என்றதும், அதை நாட்டு வைத்தியத்தில் குணமாக்கிவிடலாம் என்று கிளம்பிவிட்டார். 'அடைப்புக் காமாலை' (Obstructive jaundice) பச்சிலைச் சாற்றில் சரியாகாது என்பதையும், அறுவைச் சிகிச்சைதான் ஒரே வழி என்பதையும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் கேட்கவில்லை.

ஒரு வாரம் கழித்து அவர் மீண்டும் என்னிடம் வந்தார். ஒரு சின்ன வித்தியாசம்... முதல் வாரம் அம்மாவின் துணையோடு வந்தார். அடுத்த வாரம் நான்கு பேர் துணையோடு ஆம்புலன்ஸில் வந்தார். இப்போது அவருக்குப் பித்தப்பை வீங்கி, அழுகிப் போயிருந்தது. அவசர அறுவைச் சிகிச்சை, பித்தப்பையில் சீழை அகற்றி வயிற்றில் வடிகுழாய் வைக்க வேண்டிய நிலைமை என்று பல சிக்கல்கள்! லேப்ராஸ்கோப்பி சிகிச்சையில் மூன்று நாளில் குணமாகி வீட்டுக்குச் செல்ல வேண்டியவர், திறந்த அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு மூன்று வாரங்களுக்கு மேல் அவதிப்பட்டார்.

முதலில் சொன்ன வாலிபருக்கும் இதே பிரச்சினைதான். அவர் சர்ஜரிக்கு உடனே சம்மதித்ததால், சுலபத்தில் சுகமானார்.



இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.07.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781